அத்தியாயம்-1

# வானில் விழுந்த கோடுகள்

ஒரு ஒற்றைக் குயில் இடைவிடாது கூவ ஆரம்பித்தது.

அதுவரை ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பவித்ராவுக்கு அந்த குரல் கேட்டு கண்கள் அசைந்தது.

படுகத்தமான படுக்கை விரிப்பு, இப்படி அப்படி நகராத தலையணை, பாதத்தை மட்டுமே காட்டிக் கொண்டிருந்த அடர்த்தியான காட்டன் நைட்டி, ரப்பர் பேண்டில் அடங்கியிருந்த அடர்த்தியான கூந்தல் கூட... லேசாய், மிக லேசாய் தான் கலைந்திருந்தது.

பவித்ரா எப்படி படுக்கிறாளோ, அப்படியேதான் எழுவாள். உறங்கி எழுவது எப்படி என்று பவித்ராவிடம்தான் கற்று கொள்ள வேண்டும்.

ஒரு பெண்ணின் உண்மையான அழகை காண வேண்டுமென்றால்... அவள் உறங்கி எழும்போது பார்க்க வேண்டும்.


அந்த வகையில் பவித்ரா... ஒரு பன்னீர் ரோஜா! நிறத்திலும்கூட!

குயிலின் ஓசை மீண்டும் காதுக்குள் பாய...

அரை தூக்கத்தில் பவித்ராவின் கை, உயர்ந்து டேபிள் மீது சாதுவாய் அமர்ந்திருந்த டைம்பீஸின் தலையை தடவி அழுத்தியது.

அவளை எழுப்பாமல் ஓயப்போவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்ததோ...





ஆர். மணிமாலா

என்னவோ... குக்கூ... குக்கூ என்றது இனிமையாய்... குயில்.

'ஓ... இது கடிகார குரல் அல்லவே'

உணர்வுகள் முழுக்க விழித்துக் கொண்டு, இந்த நாளைய ஆரம்ப வேளையை காணுமுன் கண்மூடியபடி எழுந்தமர்ந்தாள். கையை உயர்த்தி டேபிள் மீதிருந்த லேமினேட்டட் போட்டோவை எடுத்து தன் முகத்திற்கு நேரே வைத்துக் கொண்டாள்.

கண்களைத் திறந்தாள்.

ஒரு வசீகரமான இளைஞன், கண்களில் மின்னல் தெறிக்க, ஹாய் சொல்லும் தோழமை சிரிப்போடு பளீரென்றிருந்தான்.

''ஹாய்... அபிஷேக்... குட்மார்னிங்!'' என்று மெல்ல முனகியவள் போட்டோவில் இதழ் பதித்தாள். மனம் கனத்துப் போனது. ஆழ்ந்த பெருமூச்சொன்று வெளியேறியது.

அவளின் வேதனைக்கும், பெருமூச்சிற்கும் காரணம் இல்லாமலில்லை.

அபிஷேக்... இப்போது உயிரோடில்லை.

அவன்... பவித்ராவின் காதல் கணவன்.

பவித்ரா கட்டிலை விட்டு இறங்கினாள். ஜன்னல் திரைச்சீலையை விலக்கினாள். வெளிச்சம் குபுக்கென்று உள்ளே பாய்ந்தது. அறையோடு ஒட்டிய பால்கனி கதவை திறந்து விட்டு பால்கனியில் நின்றாள்.

அன்றைய நாளின் நல்லது கெட்டதுகளை எதிர்கொள்ள மக்கள் அதிவேகமாக காரியத்தில் இறங்கியிருந்தனர்.

இப்போதெல்லாம் பெரும்பாலும் யாரும் பெரிய கோலமெல்லாம் போடுவதில்லை. ஐந்து புள்ளி வைத்து நாலு கோடு இழுப்பதுதான் கோலம். யாருக்கும் அந்தளவு பொறுமை இல்லை. அரைமணி நேரத்தில் பலரின் கால் பட்டு காணாமல் போகப்போகும் கோலத்திற்கு ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும்? இப்போது கூட, எதிர்வீட்டில் பேப்பர்காரன் வீசியடித்த பேப்பர் சர்ரென்று கோலத்தை அழித்துக் கொண்டே சென்றது.

பக்கத்து வீட்டு தண்டபாணி அங்கிள் ஜிப்பா உயர்த்தி பல்லால் கடித்துக் கொண்டு வேட்டியை இறுக்கி கட்டிக் கொண்டிருந்தார்.

''அடி செண்பகம்... பைக் சாவியை எடுத்துட்டு வரச் சொன்னேனே... இன்னும் அங்கே என்ன பண்ணிட்டிருக்கே?'' வாசலிலிருந்தே உள்நோக்கி குரல் கொடுத்த தண்டபாணியின் குரல் கணீரென்று தெரு முழுக்க எதிரொலித்தது.

''குக்கூ... குக்கூ...'' மறுபடி குயில் கூவியது. பவித்ராவிற்கு குயில் இருக்கும் திசையை கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் குயிலை தான் பார்க்க முடியவில்லை.

பவித்ராவும் தினமும் அதை பார்த்து விட எவ்வளவோ முயற்சித்துக் கொண்டுதானிருக்கிறாள். இரண்டு வீடு தள்ளியிருந்த எதிர்வீட்டில் இருந்த மாமரத்திலிருந்து தான் குரல் வருகிறது.

'என்றாவது ஒருநாள் உன்னை பார்க்காமல் விடப்போவதில்லை' -தனக்குள் சபதம் செய்துக் கொண்டாள்.

'அயிகிரி நந்தினி... நந்தித மேதினி...
விஷ்வ விநோதினி... நந்நுதே...'

டேப்பிலிருந்து பாடல் கசிந்துக் கொண்டிருந்தது. இந்த பாடல் கூட அதே மாமர வீட்டினிலிருந்து தான் வருகிறது.

பவித்ரா... எட்டிப்பார்த்தாள்.

நந்தகுமார் தென்படுகிறானா என்று.

யார் தலையும் தென்படவில்லை.

''குட்மார்னிங் பவி!'' முரளியின் குரல் பின்னால் கேட்க... சட்டென திரும்பினாள்.

''குட்மார்னிங்ண்ணா!''

''உன்னை எழுப்பறதுக்காகத்தான் வந்தேன். நீயே எந்திரிச்சிட்டே! உன்னோட டைம்பீஸ் சொல்ற பேச்சை கேக்கறதில்லே. மக்கர் பண்ணுது. அதை நம்பி தூங்கிடாதே!''

''டைம்பீஸ் இல்லேன்னா... என்னண்ணா? என்னை எழுப்பி விட வேறொரு ப்ரண்ட் இருக்காங்க...'' என்றவள் குயிலைப் பற்றி... முகம் விரிய கூறினாள்.

முரளி தங்கையையே கண்ணகலாது பார்த்துக் கொண்டிருந்தான்.

'மனதளவில் குழந்தையான என் பவித்ரா விதவையா? என்ன கொடூரமான உண்மையிது?'

''அண்ணா... அண்ணா!'' அவன் முன் சொட்டிகைப் போட்டாள்.

''அ...ஆங்... என்னம்மா?''

''நின்னுக்கிட்டே தூங்கறீங்க? சரி... ரோஸ்லின் அம்மா வந்துட்டாங்களா?''

''அந்தம்மா... என்னைக்கு நேரங்கழிச்சி வந்திருக்காங்க? எப்பவோ வந்தாச்சு! டிபனுக்கு ஏற்பாடு பண்ணிட்டிருக்காங்க. நீ பிரஷ் பண்ணிட்டியாம்மா? காபி ரெடியாக்கு!''

''இதோ... ரெண்டே நிமிஷத்துல வந்திடறேன். நீங்க போங்க!'' என்று பாத்ரூமில் நுழைந்துக் கொண்டாள்.

முரளி படியிறங்கிப் போனான்.

''பவித்ரா வரலியாப்பா?'' கையில் காய்கறிகள் அடங்கிய தட்டோடு எதிர்பட்ட ரோஸ்லின் கேட்டாள்.



ஐம்பத்தைந்து வயதான அம்மா! சுற்றத்தார், எவரும் இல்லாத மூதாட்டி! ஐந்து வருடமாய் இவர்கள் வீட்டில் தான் சமைப்பது முதல் அத்தனை வேலையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். வேலைக்காரியாக அவளை நினைத்ததுமில்லை, நடத்தியது மில்லை. 'அம்மா' என்று தான் இருவரும் அன்பாக, மரியாதையாக அழைத்தார்கள்.

ரோஸ்லினுக்கு திருநெல்வேலி சொந்த ஊர். ஒண்டிக்கட்டை தானே... இங்கேயே தங்கிக் கொள்ளுங்கள் என்று அண்ணன் தங்கை இருவருமே வற்புறுத்தி கூறியும் ரோஸ்லின் மறுத்து விட்டாள்.

''உங்க மனசிலே நான் நிரந்தரமாக இருக்கணும்னா... நான் இந்த வீட்லே தங்கறது அவ்வளவு சரியா வராது பிள்ளைகளா?'' என்று அருகிலேயே ஒரு சிறிய வீடு பார்த்து போய் விட்டாள். ஆனால் வற்புறுத்தி அந்த வீட்டிற்கு வாடகை கொடுத்து வந்தான் முரளி.

''எந்திரிச்சிட்டா... வந்திடுவா! நீங்க காபி கொண்டு வந்து வச்சிடுங்கம்மா!'' என்றான் முரளி.

ரோஸ்லின் சடுதியில் மணக்க மணக்க காபி கொண்டு வந்து டீப்பாய் மீது வைத்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் பவித்ரா வந்து விட... கப்பில் ஊற்றி தங்கையிடம் நீட்டினான்.

''தாங்க்ஸ்ண்ணா!'' காபியை வாங்கி குடித்தாள்.

''எத்தனை மணிக்கு நீ கிளம்பணும்?''

''இதோ... இன்னும் அரைமணி நேரத்திலே ரெடியானா தான்... எல்லாம் கவனிக்க சரியாக்கும்.''

''நந்தா கூடவே கிளம்பிடுவியா?''

''இல்லேண்ணா... அவருக்கு முன்னாடியே மண்டபத்துக்கு போய்ட்டாதான் நல்லது! பாவம்... அவர் ரொம்ப டென்ஷன்ல இருப்பார். சீஃப் கெஸ்ட்டை ஹோட்டல்ல தங்க வச்சிருக்கார். அவரை போய் பிக்கப் பண்ணிக்கிட்டு வரணும். ஒரே தெருதானேன்னு அவர் கார்ல தொத்திக்கிட்டு போறது... அவ்வளவு நல்லாயிருக்காது!''

''இன்னைக்கு நடத்தப்போற விதவைகள் சுயம்வரத்துல எத்தனை பெண்கள் கலந்துக்கறாங்க பவி?''

''அம்பத்தி எட்டு பேர்!''

''ஹூம்...'' நீண்டதொரு பெருமூச்சு எழுந்தது முரளியிடமிருந்து.

''என்னண்ணா... அப்படியொரு பெருமூச்சு?'' விளையாட்டாகத்தான் கேட்டாள். ஆனால், அதற்கு இப்படியொரு பதில் வருமென்று பவித்ரா எதிர்பார்த்திருக்க மாட்டாள்.

''அதில் என் பவித்ராவும் இருந்தால்... எப்படி இருக்கும்?''

## 2

மண்டபம் நிரம்பி வழிந்தது. உட்கார இடம் கிடைக்காமல் நிறைய பேர் நின்றிருந்தனர்.

பவித்ராவுக்கு ஆச்சர்யமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

இது போன்ற நல்ல காரியங்களை பொதுமக்கள் என்கரேஜ் பண்ணுவது பெரிய விஷயமல்லவா? முன்பே பெயர் கொடுத்திருந்ததை விட... கூடுதலாய் இருபது பெண்களின் பெயர் அவசர அவசரமாக மண்டபம் வந்த பின்பு சேர்க்கப்பட்டது.

கணவனை இழந்த பெண்கள் ஒரு வட்டத்தை தாண்டி வாழ்க்கையை எதிர்நோக்கி வருவது ஆரோக்கியமான விஷயம் தானே?

பவித்ரா பம்பரமாய் சுழன்றுக் கொண்டிருந்தாள்.

''எக்ஸ்க்யூஸ்மீ... மேடம்!''

பத்திரிகையாளர் பகுதியிலிருந்து ஒரு ஆணின் குரல் அழைத்தது.

''யெஸ்...'' திரும்பினாள்.

''நீங்க... இந்த அமைப்போட செயலாளர் பவித்ரா தானே?''

''யெஸ்!''

''மேடம்... மிஸ்டர் நந்தகுமாரை தனியா சந்திக்கணும். ஏற்பாடு பண்ணமுடியுமா?''

''ஷ்யூர்... பட் நாட் நவ்! ஒரு வாரம் போகட்டுமே. சார் ரொம்ப பிஸி! இந்த போன் நம்பருக்கு ஒரு வாரம் கழிச்சி காண்டாக்ட் பண்ணுங்க. நான் நிச்சயமா ஏற்பாடு பண்றேன்!'' என்றபடி தன் விசிட்டிங் கார்டை கொடுத்தாள்.

பவித்ரா நந்தகுமாரை நோக்கிச் சென்றாள். இங்குமங்குமாய் காலில் சக்கரம் கட்டிக் கொண்ட இறுதில் தரையில் கால்படாத நிறுவில் ஓடிக் கொண்டிருந்தான்.

முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த அழகான இளைஞன். கறுப்பு பேண்ட்டிற்குள் சந்தன நிற முழுக்கை சட்டையை இன் பண்ணிய நேர்த்தி கம்பீரத்தை

கூட்டியிருந்தது. இடைவிடாத பணி காரணமாக முதுகுப் பக்கம் வியர்த்து சட்டை உடம்போடு ஒட்டியிருந்ததுக் கூட அவனுக்கு அழகாய் தானிருந்தது.

பவித்ராவும், அவனும் இன்று நேற்றல்ல... சிறு வயது முதலே நண்பர்கள் தான்!

அபிஷேக் நந்தகுமாரின் நண்பன் தான்! பவித்ரா அபிஷேக்கின் காதல், திருமணத்தில் முடிய நந்தகுமாரின் பங்கு அதிமுக்கியமானது. தாய் தந்தையை இழந்த தங்கை மீது உயிரையே வைத்திருந்த முரளி தங்கையின் காதலை ஆரம்பத்தில் எதிர்த்தான். அவனை சமாதானப்படுத்தி அவன் முழு சம்மதத்தோடு திருமணத்தை நடத்தி வைத்தான் நந்தகுமார்.

நந்தகுமாருக்கு சோஷியல் ஒர்க்கில் ஈடுபாடு அதிகம். கவிதைகளும் நிறைய எழுதுவான். சில பத்திரிகைகளில் கூட பிரசுரமாகியுள்ளன. அவன் படைப்புகளுக்கு முதல் வாசகி பவித்ராதான். ஓரளவு வசதியான நந்தகுமார் சிறு தொழிலதிபர்.

'ப்ரைட் ஃப்யூச்சர்' என்னும் இந்த அமைப்பை நான்கு வருடமாக நடத்தி வருகிறான்.

இந்த அமைப்பின் மூலம் அவன் ஆற்றிய தொண்டுகள் ஏராளம்.

திடீரென... கூட்டத்தில் சலசலப்பு உண்டாக... நந்தகுமார் மண்டப வாசலை நோக்கி விரைந்து சென்றான்.

சிறப்பு விருந்தினர் வந்து விட்டார்.

நந்தகுமார் அவரை அன்புடன் அழைத்து வந்து மேடையில் அமர்த்தினான்.

''நல்லார்க்கியா நந்தா?'' நிஜமான அக்கறையுடன் விசாரித்த அந்த பெரியவர் தாடி வைத்திருந்தார். கண்களிலும், புன்னகையிலும் அபார ஒளி தெரிந்தது.

அவர் வேறு யாருமல்ல! நந்தகுமாரின் பள்ளி ஆசிரியர். பூவை.வாலறிவன் என்பது அவர் பெயர். நந்தகுமாரின் கவிதை புலமைக்கு காரணமான ஆசான்.

''ரொம்ப நல்லாருக்கேன் ஐயா!'' என்றான் பணிவாக.

சற்று நேரத்தில் விழா ஆரம்பமானது.

நந்தகுமார் வந்தவர்களை வரவேற்று பேசினான். இருக்க... இருக்க பேச்சில் உணர்ச்சி கூட... ஆவேசமாய் முழங்க ஆரம்பித்தான்.

''மலைத்தேனைப் போல் சிறந்த வேர்ப்பலாவின் உண்மை

மதிப்பறியா மனிதர்களே! மஞ்சள் சுகம் இல்லா

கலைமான்கள் காலமெல்லாம் கண்ணீர் மழை சிந்தக்

காரணமாய் இருக்கின்ற கயவர்களே! யாரும்

விலைபோட முடியாத வைரங்கள் தம்மை

விளையாட்டுப் பொருளாக்கும் வீணர்களே! எச்சில்

இலைகளென்றே விதவைகளை இடறுகின்ற உங்கள்

இரவுகளின் சலனமெல்லாம் அறியாதா வையம்?

கற்பென்ற கற்பனையைப் பெண்களுக்கு மட்டும்

கற்பிக்கும் ஆடவரே! கைம்பெண்கள் எல்லாம்

கற்சிலையாய், மரத்துண்டாய்க், காய்ந்த களிமண்ணாய்க்

கடைசிவரை இங்கிருக்க வேண்டுமென என்றும்

பிற்போக்கு வாதிகளே! அவர்கள் தலை நிமிர்ந்தால்,

பொட்டு வைக்கும் வெண்ணிலவு! புடவை தரும் வானம்!

அற்புதமாய் பெண்களையே அற்புமாக்கிக் காட்டும்

ஆதிக்க மனப்பான்மை அடியோடு சாயும்!''

நந்தகுமார் பேசி முடித்த போது கரவொலி விண்ணைப் பிளந்தது.

ஆசிரியர் பூவை. வாலறிவன் பேச ஆரம்பித்தார்.

''நாடு போற்றும் நல் இளைஞர் நந்தகுமாரின் ஆசிரியராக இருந்தேன் என்று சொல்லிக் கொள்வதில் மிக பெருமைப் படுகிறேன். இன்று நம்நாட்டில் எத்தனை இளைஞர்கள் பொது சேவைக்கென நேரம் ஒதுக்குகிறார்கள்? நந்தகுமார் வளர்ந்து வரும் தொழிலதிபர். தொழிலில் மட்டுமே கவனம் செலுத்தினால் அவரால்... வெகு விரைவில் மிகப் பெரும் பணக்காரராக ஆகலாம். ஆனால், அவர் தன்னை விட இந்த சமுதாயத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கின்றார். ஆதரவற்ற அபலை பெண்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறார். விதவைகளுக்கு சுயம்வரம் மூலம் மனதொத்த வாழ்க்கைத் துணையை தேடித் தருகிறார்.

ஆம்!

இங்கே திருமணம் என்பது...

உடன்படிக்கை... உடன்படிக்கை...!

என்றளவில் திருமண வாழ்க்கையை ஒரு அவசர கால ஒப்பந்தமாக மாற்றி வரும் இளைஞர்கள் மத்தியில் நந்தகுமார் போன்ற... சமூகத்தின் மீது அக்கறைக் கொண்ட... கவலைப்படுகின்ற நல்ல இளைஞர்கள் புற்றீசலாய் உருவாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

சமூகம் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. மாறிக் கொண்டு வருகிறது... அதற்கு சான்று... இங்கே சுயம்வரத்தில் கலந்துக் கொள்ள வந்திருக்கும் ஆண்களில் பாதிபேர் திருமணமாகாதவர்கள். பார்க்கவே ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறது. இந்த பெருமையெல்லாம் என் மாணாக்கரான நந்தகுமாரையே சாரும்...!''

நந்தகுமார் உதட்டில் புன்னகை படர்ந்திருக்க... பெருமிதத்துடன் குழுமியிருந்த கூட்டத்தினரை ஏறிட்டான். மனம் சந்தோஷத்தில் குழைந்தது.

விழா நிறைவுடன் நடந்து முடிந்தது. பத்திரிகையாளர்கள் கூட்டம் அவனை சுற்றி வளைத்து கேள்விக் கணைகளை வீசியது. காமிராக்கள் மின்னலடித்தன.

''ப்ளீஸ்... ஜஸ்ட் லோ டயர்ட்... அப்புறம் பார்க்கலாமே!'' நெற்றியிலிருந்த வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றியபடி சொன்னான்.

''அந்த நிமிஷம் மட்டும் தான்... ப்ளீஸ்...''

''ம்... ஓக்கே!'' ஸ்டைலாய் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டான்.

''உங்களுக்கு சமூக சேவையில் ஈடுபட எப்படி ஆர்வம் ஏற்பட்டது?''

''இதற்கு ஆர்வம் அவசியமில்லை. நம் சமூகத்தை பற்றி கொஞ்சம் அக்கறைப்

## இந்தியாவின் பெருமையை பறைசாற்றும் கைவினைக் கலைஞர்கள்

அமெரிக்க ராணுவத்தினரின் உடைகளை பளபளக்க வைப்பது யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நம் இந்தியர்கள். அதுவும் உத்தரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த கைவினைக் கலைஞர்கள்தான்.

புண்ணிய நகரமான வாரணாசியில் உள்ள கைவினை கலைஞர்கள் அமெரிக்க ராணுவ வீரர்கள் உடையில் அணியும் பேட்ஜ்களை (அடையாள வில்லைகள்) மிகவும் அழகாக தயாரித்து அனுப்பி வருகிறார்கள்.

இந்தப் பணியில் கடந்த 12 வருடமாக ஈடுபட்டு வரும் நபிஸ் அகமது, ''பழங்காலத்தில் ராஜாக்கள், நவாப்கள் ஆகியோரின் யானைகள், குதிரைகள் மீது போடும் சேணக் கம்பளத்தை தான் வாரணாசி கைவினை கலைஞர்கள் மிகவும் அழகாக தயாரித்து கொடுத்து வந்தனர். தற்போது ராஜாக்கள், நவாப்கள் இல்லை என்பதால் ராணுவத்திற்கு அழகிய பேட்ஜ் உருவாக்கி கொடுக்கிறோம்'' என்று தெரிவித்தார்.



தற்போது 500-க்கும் அதிகமான கைவினை கலைஞர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு மணி நேரம் பணிபுரிந்தால் ரூ.7 முதல் 10 வரை மட்டுமே இந்த கைவினை கலைஞர்களுக்கு கிடைக்கிறது. இந்தப் பணத்திலும் இடைத் தரகர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும். இதன் காரணமாக உலகம் போற்றும் விதத்தில் பேட்ஜ்கள் உருவாக்கினாலும் கலைஞர்கள் வறுமையால்தான் வாடி வருகின்றனர்.

''கை விரல்கள் கண்ணீர் விட பணிபுரிந்தாலும் கை நிறைய கூலி கிடைப்பதில்லை'' என்று கலைஞர் ஒருவர் பரிதாபமாக் தெரிவித்தார்.

-சேனா.

பட்டாலே போதும். நாலு பேருக்கு உதவும் நல்ல குணம் இருந்தால்... எல்லோரும் மகாத்மாக்கள் தான்!''

''இந்த விழாவை நீங்கள் எளிமையாக நடத்தி இருக்கலாமே! எதற்கு இவ்வளவு பப்ளிசிட்டி! கலதம்பட்டம் அடித்துக் கொள்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா?''

''குட் கொஸ்டியன்! எதிர்பார்த்தேன்! பட், பப்ளிசிட்டி தேடிக் கொள்வதல்ல என் நோக்கம். நல்ல காரியத்தை நாலு பேருக்கு தெரிவது போல் நடத்தினால்... நாளை இதே போல் நல்ல காரியங்களை ஒரு சூரியக்குமாரோ, சந்திர குமாரோ நடத்த மாட்டாரா என்கிற நப்பாசை தான்!''

''கடைசியாய் ஒரு கேள்வி? எல்லோருக்கும் முன் மாதிரியாக இருக்க ஆசைப்படும் தாங்கள் ஏன் ஒரு விதவைக்கு வாழ்வளிக்கக் கூடாது?''

இப்படியொரு கேள்வியை நந்தகுமார் எதிர்பார்க்கவில்லை என்பதை அவன் முகம் காட்டி கொடுத்தது.

''ம்... எல்லாவற்றிற்கும் இப்போதே பதிலளித்து விட வேண்டுமா என்ன? அஞ்சு நிமிஷம்னு சொல்லிவிட்டு பத்து நிமிஷம் எடுத்துக்கிட்டீங்க! ஸீ...யூ... லேட்டர்!''

புன்னகைத்தபடி தன் காரை நோக்கிப் போனான் நந்தகுமார்.

பவித்ரா அவனைப் பின்தொடர்ந்தாள்.

## 3

முன்புறம் கார் கதவை திறந்து அவன் பக்கத்தில் அமர்ந்தாள் பவித்ரா.

ஃப்ரிட்ஜ் கதவை திறந்தது போல் சில்லென்ற காற்று முகத்தில் மோதியது.

''மழை வர்றாப்போல இருக்கு நந்தா!''

''ஆமாம்... நல்லவேளை ஃபங்ஷன் முடிஞ்சிடுச்சே!''

''நம்ம ப்ரைட் ஃப்யூச்சருக்கு இருக்க... இருக்க நல்ல ரெஸ்பான்ஸ் கிடைச்சிட்டிருக்கு. நினைக்கவே ரொம்ப சந்தோஷமாயிருக்கு நந்தா! உன்னை பத்திரிகைக்காரங்க ரவுண்டு கட்டி மொய்த்துக் கொண்டதைப் பார்த்தப்ப... அதை என்னால வார்த்தையால விவரிக்க முடியாது நந்தா... அவ்வளவு சந்தோஷமா இருந்துச்சு!''

''இந்த பெருமை எனக்கு மட்டுமே சொந்தமில்லை பவி! இந்த அமைப்பை துவக்கிய நாள் முதல் நீயும் என் கூட வேலிருந்து உழைச்சிருக்கே! எல்லாத்துக்கும் நீயும் ஒரு காரணம். நேரம் காலம் பார்க்காம எப்ப கூப்பிட்டாலும், எந்த ஊருக்கு கூப்பிட்டாலும் ஓடி வந்து உழைக்கறியே பவி! நீ என் கூட இருக்கறது தான் என் பலமே!''

பவித்ரா பதில் கூறாமல் அவனை திரும்பி பார்த்தாள்.

''உனக்கு நன்றி சொல்றதை விட... நான் முரளிக்கு தான் நன்றி சொல்லணும்! சமூக சேவை செய்யறதுக்கு ஒரு மனசு வேணும்னா... அதை செய்ய அனுமதிக்கறதுக்கும் ஒரு மனசு அவசியம் வேணும். தூண்டி விடப்படாத விளக்கின் திரி பிரகாசிக்க முடியாது. உன்னை என்கரேஜ் பண்ற முரளிக்கு முதல்ல தாங்க்ஸ் சொல்லணும்!''

''அண்ணன் என்கரேஜ் பண்றதுல மட்டுமில்லே... நான் இந்தப் பணியில ஈடுபடறதுல கூட ஒரு சுயநலமிருக்கு!''

''சுயநலமா?''

''ஆமா... என்னை... என் கவலைகளை கொஞ்ச நேரமாவது மறக்க முடியறதில்லையா? அதுக்காக தான்!'' என்றாள் சன்னமாக.

''ப...வி...'' என்றான் அவளை வேதனையுடன் நோக்கி.

''அப்புறம் நந்தா... தேவி வீக்லிலேர்ந்து ஒரு ரிப்போர்ட்டர் உன்கிட்டே பேட்டி எடுக்கணும்... ஒரு மணி நேரம் ஒதுக்கித் தரமுடியுமான்னு கேட்டார். ஜனரஞ்சகமான பத்திரிகை. பெண்கள் அதிகமாய் விரும்பிப் படிக்கிற பத்திரிகை. அவசியம் உன்னோட பேட்டி அதுலே இடம் பெறணும்னு நான் விரும்பறேன். ப்ளீஸ்... நேரம் ஒதுக்கு!''

''பேச்சை மாத்தாதே! நான் உன்னை ஒரு கேள்வி கேப்பேன்... பதில் சொல்லு...!''

''என்ன நந்தா?'' என்றாள் வியப்பாய்.

''விதவைப் பெண்கள் மறுமணம் செய்யணும்னு எவ்வளவு பாடுபடறே?''

''ம்...''

''அப்ப நீயும் ஏன்... ரீமேரேஜ் பண்ணிக்கக் கூடாது?''

''ந...ந்...தா!''

''ஊருக்கு உபதேசம் பண்றதுக்கு முன்னாடி... நாம அதுக்கு முன் மாதிரியா இருக்கணும்!''

''என்னால... என்னால முடியாது நந்தா! அபிஷேக்கை என்னால மறக்க முடியாது!''



என்றாள் தழுதழுப்பாய்.

''அப்ப... கடைசி வரைக்கும் இப்படியே இருந்திடணும்னு முடிவு பண்ணிட்டியா?''

''....''

''உன் வாழ்க்கை இப்படியே முடியறதுல எனக்கு விருப்பமில்லே பவி! உனக்கு வயசிருக்கு, அழகிருக்கு, அறிவிருக்கு. ஆனா, சுயபுத்திதான் இல்லே. அபிஷேக்கை நீ காதலிச்சப்ப... முதல் ஆளா வரவேற்றவன் நான் தான். அபிஷேக் ரொம்ப நல்லவன். அதனாலேயே... உங்க காதல் கல்யாணத்துல முடியணும்னு ஆசைப்பட்டேன். விதி வேற மாதிரி திட்டம் போட்டுடுச்சி! அதுக்காக... உன்னை நீயே காலம் முழுக்க ஏமாத்திக்காதே! ஆண்டவன் நம்மை தனித்தனியாதான் படைக்கிறான். ஆனா நேரம் வரும் போது இன்னார்க்கு இன்னார்னு இணை பிரிச்சி சேர்த்து வைக்கிறான். முதல் முடிச்சு சரியா விழாதப்ப... ரெண்டாவது முடிச்சை... சரியா போட்டுக்கணும். உன்னை மாதிரி எல்லா பொண்ணுங்களும் நினைக்க ஆரம்பிச்சா... நாம ப்ரைட் ஃப்யூச்சர் ஆரம்பிச்ச என்ன பலன்? யாரும், யாரையும் மறக்க முடியாது தான். அபிஷேக்கை உன்னால மறக்க முடியாது ஓக்கே! நான் அவனை மறக்க சொல்லலே! உன் மனசில அவனுக்கொரு இடம் எப்பவும் இருக்கட்டும். அதே சமயம் இன்னொரு வாழ்க்கைக்கும் உன் மனசை தயாராக்கணும் பவி!''

''நந்தா... ப்ளீஸ்... இந்த பேச்சை இத்தோட விட்ருவோமே!'' என்றாள் இடைமறித்து.

''உன்கிட்டே எனக்கு பிடிக்காத ஒரே குணம் இந்த பிடிவாதம் தான்!'' என்றான் சலிப்புடன்.

**ப**வித்ராவின் வீட்டு வாசலில் காரை நிறுத்தினான் நந்தகுமார்.

காரின் சப்தம் கேட்டு வெளியில் வந்தான் முரளி.

''ஹாய் நந்தா!''

''ஹாய்...'' என்றான் புன்னகையுடன்.

''வாயேன்... ரோஸ்லின் அம்மா சூப்பரா பாதாம்கீர் பண்ணியிருக்காங்க. ஒரு க்ளாஸ் சாப்பிட்டு போகலாம்!'' என்றழைத்தான் முரளி.

''ஓ... ஷ்யூர்!'' என்றவன் காரை விட்டிறங்கினான். பவித்ராவும் இறங்கி அவன் பின்னே நடந்தாள்.

வீட்டை கண்களால் ஒரு வட்டம் போட்டு விட்டு அமர்ந்தான்.

''வீட்டை ரொம்ப நீட்டா வச்சிருக்கீங்க!''

''எல்லாம் ரோஸ்லின் அம்மா தான் இங்கே!''

''பேசாம ரோஸ்லின் அம்மாவை எங்க வீட்டுக்கு கடத்திக்கிட்டு போய்டலாம்னு இருக்கேன்!'' என்றான், அந்தம்மா நீட்டிய பாதாம்கீரை வாங்கிக் கொண்டு.

''ஏன்ப்பா? உனக்காவது உன்னை கவனிக்கக்க உங்கம்மா இருக்காங்க! இந்தப் பிள்ளைகளை கவனிக்கக்க இங்கே யார் இருக்கா?''

''அப்படி சொல்லுங்கம்மா!'' என்று ஆமோதித்தான் முரளி.

''என்ன... அப்படி சொல்லுங்கம்மா? பவித்ரா என்னைக்கு தான் சமைக்க கத்துக்கறது?''

''அவ கத்துக்கிட்டு என்ன பண்ணப்போறா?'' என்றான் முரளி.

தன்னைப் பற்றி பேச்சு எழுந்ததை உணர்ந்தவள் ''தலைவலிக்கிறது நந்தா... நான் என் ரூமுக்குப் போகிறேன்'' என்று மாடியேறினாள்.

''உன் ஆபீஸ் சமாச்சாரம் எந்தளவிற்கு உள்ளது?''

''வாழ்க்கையிலே முதல் படியிலே கால் வைக்கும் போதே... உச்சியை தொடணும்ங்கற லட்சியத்தோட தான் ஏர்றாங்க! என்னால பாதி தூரத்துக்கு மேலே போக முடியலே நந்தா!''

''ஏன்... என்ன பிரச்சினை?''

தலை உயர்த்தி... பவித்ரா போய் விட்டாளா என்று உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே சொல்லத் துவங்கினான்.

''என் ஆபீஸ்லே எனக்கு ஜி.எம்.மா பிரமோஷன் கிடைச்சது!''

''வெரிகுட்... கங்க்ராஜுலேஷன்ஸ்!''

''அவசரப்படாதே! பிரமோஷன் வேண்டாம்னு அவாய்ட் பண்ணிட்டேன்!''

''ஏன்... ஏன் முரளி?'' ஆச்சர்யமாய் பார்த்தான்.

''அது பிரமோஷன் மட்டுமில்லே... ட்ரான்ஸ்ஃபரும் கூட! மகாராஷ்டிராவிலே ஆவார்பூர்ல ட்ரான்ஸ்ஃபர் போட்டுருந்தாங்க! நான் போய் இருந்துடுவேன். எனக்கொன்றும் பிரச்சினையில்லே! பட், பவித்ராவால அங்கே என்ன பண்ண முடியும்? அவளின் புண்ணாகிப் போன இதயத்துக்கு மருந்து இங்கே சோஷியல் ஒர்க் மூலமா கிடைக்கறப்ப... அவளை நான் எப்படி அங்கே கூட்டிக்கிட்டு போக முடியும்?''

''முரளி... கேட்கறேன்னு தப்பா நினைக்கக் கூடாது. உனக்கு இப்ப என்ன வயசு?''

"முப்பத்திரெண்டு!"

"நீ ஏன்... இன்னும் கல்யாணம் பண்ணிக்கலே?"

"பவித்ரா இப்படி இருக்கப்ப... நான் எப்படி?"

"இதே காரணத்தை எவ்வளவு காலத்துக்கு சொல்லிக்கிட்டு இருக்கப் போறே முரளி? பவித்ராவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வச்சிட்டா... எல்லா பிரச்சினையும் தீர்ந்து போய்டுமில்லையா?"

"நானும் இதைப்பத்தி யோசிச்சிருக்க மாட்டேன்னா நினைக்கிறே நந்தா? எல்லாரையும் போல என் தங்கையும் மத்த பொண்ணுங்களை மாதிரி சந்தோஷமா, கணவன், குழந்தைகள்னு வாழதான் ஆசைப்படறேன். ஆனா, இதைப்பத்தி பேச்செடுத்தாலே... பிடி கொடுத்து பேசமாட்டேங்கிறா! இன்னமும் அந்த அபிஷேக்கையே நினைச்சுக்கிட்டு வாழ்க்கையை பாழாக்கிட்டிருக்கா! என்ன பண்றதுன்னே புரியலே நந்தா!"

"இதைப்பத்தி மறுபடியும் பேசிப்பாரு. நானும் பேசறேன்! வெல்... நேரமாச்சு. அம்மா காத்துக்கிட்டிருப்பாங்க... நான் கிளம்பறேன்!"

"ஓக்கே... நந்தா!"

நந்தகுமார் வெளியேறினான்.

ரோஸ்லின் முரளியின் அருகில் வந்தாள்.

"அந்த தம்பி சொல்ற மாதிரி பவித்ராகிட்டே மறுபடியும் இதைப்பத்தி பேசிப் பாரேன்!"

"ம்...!" என்றான் மோவாயில் கையை தாங்கி யோசனையுடன்.

"ஒண்ணை கவனிச்சியா முரளி? நந்தகுமாருக்கு பவித்ரா மேல ரொம்ப அக்கறையிருக்கு. அவன் மனசுல பவித்ரா இருக்கான்னு நினைக்கிறேன். இல்லேன்னா அவ கல்யாணத்தைப் பத்தி உங்கிட்டே இப்ப ஏன் பேசணும்? அவங்க ரெண்டு பேரும் கார்லேந்து இறங்கி வர்றப்ப என் கண்ணே பட்டுடும் போலிருந்துச்சு. ஜோடிப் பொருத்தம் பிரமாதம்!" ரோஸ்லின் பேசிக் கொண்டே போனாள்.

முரளி சீட்டின் நுனிக்கு வந்திருந்தான்.

## 4

ஒரே சமயத்தில் முப்பது பேர் வரை அமர்ந்து சாப்பிடலாம். அவ்வளவு நீளமான தேக்கில் இழைக்கப்பட்ட டைனிங் டேபிளில் அப்பாவும், மகளுமாய் இரண்டு பேர் மட்டுமே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க... வசந்தா பரிவுடன் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

எப்போதும் குளிர்ச்சியை தன் வசமாக்கி வைத்திருக்கும் கோயம்புத்தூரில் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவர் வேணுகோபால். காட்டன் மில்களும், ஜவுளிக்கடைகளுமாய் நகரெங்கும் இறைந்து கிடந்தன. அள்ள அள்ள குறையாத பணம். மனைவி வசந்தா! பணக்காரி என்கிற பந்தா இல்லாத எளிமை பேச்சிலும் உடையிலும். இவர்களின் ஒரே செல்வபுத்திரி தான் பிரவீணா.

கல்லூரியில் நியூட்ரிஷியன் இரண்டாம் ஆண்டு படிக்கும் அழகான இளமை ததும்பும் மாணவி. சென்ற வருடம் கல்லூரியில் நடந்த அழகிப் போட்டியில் கலந்துக் கொண்டு முதல் பரிசைப் பெற்றவள்.

மாடலிங் கேர்ளோ என்று எண்ணும் அளவிற்கு விதவிதமான நாகரீக உடைகளை அணிவதில் விருப்பமுள்ளவள். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இல்லாத பந்தா அவளிடம் உண்டு.

"ஸ்ஸ்....ப்பா... ஒரே காரம்... எனக்கு வேண்டாம் மம்மி... போதும்" கையை உதறி எழ முற்பட்டாள்.

வசந்தா அழுத்தி உட்கார வைத்தாள்.

"என்னடி போதும்? வச்சது ரெண்டு இட்லி! முழுசா ஒரு இட்லிக்கூட சாப்பிடலே..." வெள்ளி தட்டில் குட்டி நிலவாய் சாம்பாரில் அமிழ்ந்து கிடந்த இட்லியை சுட்டிக்காட்டி கேட்டாள்.

"நீ சாப்பிட்டுப்பார்... சாம்பார் எவ்வளவு காரமாய் இருக்குன்னு? இவ்வளவு காரமா சாப்பிட்டா... அல்சர்தான் வரும். யாரு சமைச்சது? கணக்கு தீர்த்து வீட்டுக்கு அனுப்புங்க" படபடவெனப் பொரிந்தாள்.

வேணுகோபால் சிரித்தார்.

"ஒரு சின்ன விஷயத்துக்கு ஏன் ப்ரவீன் இப்படி டென்ஷனாகறே?"

"பின்னே என்ன டாடி? பச்சை மிளகாயை கடிச்ச மாதிரி அவ்வளவு காரமாயிருக்கே... ஸ்ஸ்... ஆ..."

"உன் டாடி சாப்பிடலே? அதே இட்லி... அதே சாம்பார். உனக்கு மட்டுமென்ன காரம் அதிகமா போய்டுச்சி? பாக்கெட் பாக்கெட்டா மில்க் சாக்கலேட்டும், கப், கப்பா ஐஸ்கிரீமும் சாப்பிட்டா... உன் நாக்கு என்னத்துக்காகும்? சமையல்காரிய கணக்கு தீர்த்து அனுப்பணுமாம்... முதல்ல உனக்கு கொடுக்கிற பாக்கெட் மணியை கட் பண்ணினாதான் நீ வழிக்கு வருவே"

"என்கிட்டே கிரெடிட் கார்டு... இருக்குதாக்கும்"

"அது உனக்கு எத்தனை நாளைக்கு தாங்கும்?"

"இருக்கவே இருக்கிறார் என் டாடி! ஏன் டாடி... தர மாட்டீங்க?" செல்லமாய் கேட்டாள்.

"உனக்கு தராம வேற யாருக்குடா தரப்போறேன்?" என்றார் வேணுகோபால்.

"இப்படி ஒரு அப்பா இருந்தா... எந்த பொண்ணு தான் உருப்படுவா? இந்தா... இந்த பாலை குடிச்சிட்டு காலேஜுக்கு கிளம்பு"

"ஏன்... என்னை விரட்டறே? உன் புருஷன்கிட்டே தனியா கொஞ்சணுமா?"

"அடி செருப்பால...? என்னங்க பார்த்துட்டே இருக்கீங்க? என்ன பேசறா கேட்டீங்கதானே?"

"அவ என்ன தப்பா சொல்லிட்டா?" என்றார், மகளைப் பார்த்து கண்ணடித்து. பிரவீணாவும் கட்டை விரலை உயர்த்தி சிரித்தாள்.

"அட... ராமா! நல்ல அப்பா, நல்ல பொண்ணு! நாளைலேர்ந்து நான் உங்களுக்கு பரிமாறப் போறதில்லே" பொய்யாய் கோபித்துக் கொண்டு பாத்திரத்தோடு நகர்ந்தாள்.

அப்பாவும், பெண்ணும் வாய் விட்டு



### காளையை அடக்கும் போட்டிக்கு ஆபத்து!

நம்ம ஊரில் ஜல்லிக்கட்டு காளைகளை அடக்குவது போல வெளிநாடுகளிலும் காளைகளை அடக்கும் வீர தீர விளையாட்டு போட்டி மிக விமர்சையாக நடைபெற்று வருகிறது. இப்போட்டியை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவதுண்டு.

காளை மாட்டை அடக்கும் போட்டியில் பல நேரங்களில் விளையாட்டு வீரர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதும் உண்டு. இதனால் போட்டியில் வெல்லும் வீரர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகிறது.

குறிப்பாக ஸ்பெயின் போன்ற நாடுகளில் காளைமாடுகளை அடக்கும் போட்டி அடிக்கடி நடப்பதுண்டு. காட்டு எருமைகளும் இப்போட்டியில் ஈடுபடுத்தப்படுவது உண்டு. இப்போது இது போன்ற வீர விளையாட்டு போட்டிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் வனவிலங்குகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. வீர விளையாட்டு போட்டியில் காளைகள் அடக்கப்பட்டாலும், அந்த காளைகளுக்கு எந்தவொரு காயமோ அல்லது உயிருக்கு ஆபத்தோ ஏற்படக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டில் வெற்றி பெறும் வீரர், காளையை அடக்குவதுடன் அதன் கொம்பையோ அல்லது காதையோ தனியாக துண்டித்து கையில் ஏந்தினால் தான் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

ஆகவே வனவிலங்குகளை பாதுகாக்க தேசிய சங்கம் எடுத்து வரும் நடவடிக்கை வெளி நாடுகளில் காளையை அடக்கும் வீர விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுமோ என்று இப்போட்டியை நடத்துபவர்கள் அஞ்சுகிறார்கள்.

-திருமகள்.

சிரித்தனர்.

''டாடி... என்னோட செல்போனுக்கு பில் கட்டணும். பில்லை வேலுகிட்டே கொடுத்திட்டேன். பணம் கொடுத்திடுங்க''

''எவ்வளவு?''

''பதினான்காயிரம்தான்''

''சரி''

''என்ன சரி? காலேஜ்ல படிக்கிற பொண்ணுக்கு பதினாலாயிரம் பில் வர்ற அளவுக்கு அப்படியென்ன பேச்சு வேண்டிகிடக்கு?'' என்றபடி வந்தாள் வசந்தா.

''ஐயோ... வசந்தா... மறுபடி ஆரம்பிச்சிட்டியா? டாடி என் மூட் அவுட் ஆகறதுக்குள்ளே... நான் கிளம்பறேன்'' அலட்டலாய் சொல்லி விட்டு எழுந்தாள் பிரவீணா.

''ப்ரவீண்... நீ இன்னைக்கு பென்ஸ் எடுத்துக்கிட்டு போம்மா... எனக்கு டாடா சியரா வேணும்''

''ஓக்கே டாடி... வரட்டுமா? வசந்தா... பை''

''திமிர்... உடல் முழுக்க திமிர்'' என்றாள் போகும் மகளைப் பார்த்து.

''ஆனாலும் அவளுக்கு நீங்க ரொம்பதான் இடம் தர்றீங்க''

''விடு... வசந்தா! அவ நமக்கு ஒரே பொண்ணு. அவகிட்டே போய் கோவிச்சுக்க முடியுமா?''

''எல்லாத்துக்கும் ஒரு அளவில்லையா? இந்த பணத்தை சம்பாதிக்க... இந்தளவிற்கு உயர்றதுக்கு நீங்க பட்டபாடு கொஞ்சமா நஞ்சமா? ஒரு காலத்திலே உங்களோட ஒரு வருஷ வருமானம் பதினான்காயிரம் ரூபாய்தான். ஆனா, இன்னைக்கு அவ எவ்வளவு ஈஸியா... ஒரு மாசம் போன் பில் பதினான்காயிரம் ரூபாய்தான்... கட்டிடுங்கன்னு சொல்லிட்டுப் போறா''

''நாம சம்பாதிக்கறதெல்லாம் அவளுக்குதானே? நமக்கு பின்னே... அத்தனை சொத்துக்கும் வாரிசு அவதானே?''

''அதுக்குதானே பயப்படறேன். கொஞ்சம்கூட பொறுப்பில்லாமல் நடந்துக்கறவ நாளைக்கு இந்த சொத்துபத்துகளையும் நிர்வாகத்தையும் எப்படி கட்டி காப்பாத்துவா?''

''அவளுக்கு நல்ல புருஷனா தேர்ந்தெடுத்து அவன் கிட்டே பொறுப்பை ஒப்படைச்சிட்டா போகுது? நீ ஏன் வசந்தா... எல்லாத்தையும் நினைச்சி கவலைப்பட்டு பிரஷரை ஏத்திக்கறே?''

''ஆமாங்க... நீங்க சொல்ற மாதிரி அவளுக்கு சீக்கிரமே ஒரு நல்ல பையனாய் பார்த்து கல்யாணத்தை முடிச்சிடலாம்ங்க. போன வாரம் கூட தனகோடி அண்ணாச்சி வீட்டு கல்யாணத்துக்குப் போயிருந்தோமே, அங்கே சிமெண்ட் பாக்டரி வச்சிருக்காரே நாராயணன்... அவங்க சம்சாரம் அவங்களோட பிள்ளைக்கு நம்ம பிரவீணாவை முடிக்கலாமான்னு கேட்டாங்க. நான் உங்ககிட்டே கேட்டுட்டு சொல்றேன்னு சொல்லிட்டேன். நம்மை விட பெரிய இடம். பையன் பாரின்ல படிச்சவனாம். பார்க்கவும் லட்சணமா இருப்பானாம்.''

''எல்லாத்தையும் விசாரிச்சுட்டியா? இதோ பாரு வசந்தா, கல்யாணம்ங்கறது சாதாரண விஷயமல்ல. நமக்கிருக்கிறது ஒரே பொண்ணு. நம்ம அந்தஸ்துக்கு ஏத்தவனா மாப்பிள்ளை பார்க்கறதை விட நல்ல குணமுள்ளவனா பார்க்கணும். நம்ம கிட்டே போதுமான பணமிருக்கு. அது போதும்.''

''அதுக்காக?''

''நல்ல பையனா... பணத்துக்கு ஆசைப்படாதவனா, பெண்களை தெய்வமா நினைக்கிறவனா பார்த்துதான் கட்டி வைப்பேன். அப்படிப்பட்டவனாலதான் மனைவிய கண்ணுக்குள்ளே வச்சு காப்பாத்த முடியும். அப்படியொரு பையன்... அவன் ஏழையா இருந்தாலும் சரி.. அவனுக்குதான் நம்ம பிரவீணாவை கட்டிக் கொடுப்பேன்''

''எப்படியோ... என் பொண்ணுக்கு ஒரு நல்ல கணவன் கிடைச்சா... அதுவே போதும்'' என்றாள் வசந்தா.

''முதல்ல பிரவீணாவுக்கு படிப்பு முடியட்டும்''

''அவ படிக்கட்டும். வேண்டாங்கலே. அதே சமயம்... நீங்க மாப்பிள்ளையும் தேடுங்க''

''சரி... சரி...'' என்று சிரித்தபடி எழுந்துக் கொண்டார், வேணுகோபால்.

**போ**னால் போகட்டுமென்று பேராசிரியை நடத்திக் கொண்டிருந்த பாடத்தை கவனித்துக் கொண்டிருந்தாள் பிரவீணா.

அந்நேரம் பார்த்து செல் போன் அலறியது.

போன் சதீஷிடமிருந்து.

''ஏய்... படவா... என்ன இந்த நேரத்திலே?''

''அழகான ராட்சஷியே... இந்த நேரத்திலே கூப்பிடாம நைட்லேயா கூப்பிட முடியும்? கூப்பிட்டா வந்திடுவியா?''

''கட் பண்ணிட்டு அப்புறமா பேசு. எதிரே புரபொஸர் இருக்காங்க''

''அதை வெளியே அனுப்பிட்டு நான் சொல்றதை கேள்''

''உனக்கு ரொம்பதான் திமிர்''

''உன்னோட காதலனாச்சே... எப்படியிருப்பேன்?''

''என்ன விஷயம் சொல்லித் தொலை''

''உதடு நமநமங்குது...''

''அதுக்காக?''

''கிஸ் பண்ணணும் மை டியர் பேரைம் லவர்! உடனே கிளம்பி வா''

''ஏய்... விளையாடறியா?''

''விளையாடவும் செய்யலாம்! கிளம்பு... ஹர்ரியப்''

''ஏய்... ஈவ்னிங் பார்க்கலாம்''

''சாரி... தாங்காது. வராம ஏமாத்தினியோ... நானே கிளம்பி வந்திடுவேன். க்ளாஸ் ரூமாச்சேன்னுகூட பார்க்காம உன்னை...ம் புரியுதா?''

''ரொம்ப தொல்லை பண்றியே சதீஷ். கெட்டுப் போய்ட்டே...''

''உன்னை பார்த்த அன்னைக்கே கெட்டுப் போய்ட்டேன் டியர்''

''ரொம்ப வழியாதே... வர்றேன்'' என்று செல்லை அணைத்து விட்டு எழுந்தாள்.

## 5

''**சா**ப்பிட வாயேன்ப்பா...! ஆறிப்போகுது...'' மதுரம் ஐந்தாவது முறையாக நந்தகுமாரின் அறைக்குள் எட்டிப்பார்த்தாள்.

போனில் பேசிக் கொண்டிருந்த நந்தகுமார் ''ஒன் செகண்ட் மாதவன்'' என்றவன் அம்மா பக்கம் திரும்பி ''இதோ வந்துட்டேம்மா... ரெண்டே நிமிஷம் தான்'' என்று கூறிவிட்டு மறுபடி போனில் பேசத் துவங்கினான்.

மதுரம் சலித்தபடி திரும்பினாள்.

''வாய்க்கு ருசியா சூடா சாப்பிடணும்னு தோண மாட்டேங்குதே... என்ன பிள்ளை இவன்? வீட்டில் இருப்பதோ கொஞ்ச நேரம். அதிலேயும் எப்பவும் போனிலேயே பேசிட்டிருக்கறது... ஹூம்... இந்த வீட்ல அம்மான்னு ஒருத்தி இருக்கறதே மறந்து போச்சு!''

''என்னம்மா... யாருக்கு என்ன மறந்து போச்சு?'' நந்தகுமார் அம்மாவின் அருகே அமர்ந்தான்.

''உனக்கு தான்... அம்மான்னு ஒருத்தி இந்த வீட்லே இருக்கறதே மறந்து போச்சு!'' தட்டை எடுத்து அவன் முன் வைத்து இடியாப்பம் பரிமாறினாள்.

''ஏம்மா இப்படி பேசறீங்க?''

''பின்னே என்ன நந்து? காலையிலே வீட்டை விட்டு கிளம்பி போய்டறே! பிஸினஸையும் கவனிச்சுக்கிட்டு, ஊர் முழுக்க கல்யாணம் பண்ணி வைக்கிற புரோகிதர் வேலை, புரோக்கர் வேலை எல்லாம் பார்க்கிறே! நைட்ல வீட்டுக்கு வர்றே! ரெண்டு வாய் சாப்பிட்டுட்டு படுத்திடறே! காலையிலே எந்திரிச்ச உடனே போனை தூக்கி மடியில வச்சுக்கிட்டு பேச ஆரம்பிச்சிடறே!''

அம்மா பேசிக் கொண்டே போக நந்தகுமார் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான்.

''அம்மா... நான் எவ்வளவு பிஸியா இருந்தாலும் வேலையா இருந்தாலும் உன் கையால சாப்பிட ஓடோடி வந்திடறேனில்லையா?''

''ஓட்டல் சப்பாடு உனக்கு ஆகாது. அதனால வீட்டுக்கு வந்திடறே!''

''எல்லாத்துக்கும் நீயாகவே கற்பனையா ஒரு காரணத்தை கற்பிச்சுக்காதேம்மா!'' சாப்பிட்டபடியே சொன்னான் நந்தகுமார்.

''என்னமோப்பா... நீ செய்யறது எதுவுமே எனக்கு பிடிக்கலே''

''ஏம்மா... அப்படியென்ன தப்பான காரியம் பண்ணிட்டேன்?'' அம்மாவை வியப்பாய் பார்த்தான்.

''அதை நான் எப்படி சொல்றதுன்னே தெரியலே நந்தா!''

''எதுவாயிருந்தாலும் பளிச்சுனு சொல்லும்மா! எனக்கே இப்ப பயமாயிருக்கு. என்னையறியாம நான் ஏதாவது தப்பு பண்ணிட்டோனோன்னு...''

''நீ நாலு பேருக்கு நல்ல காரியம் பண்றே... ஊரெல்லாம் உன்னை வாழ்த்துது... பத்திரிகையெல்லாம் உன்னை பாராட்டுது. இதையெல்லாம் பார்த்து நான் சந்தோஷப்படறேன்... பெருமைப்படறேன்... ஆனா...''

''ஆனா, என்னம்மா? சொல்லும்மா!''

''விதவைங்களுக்கு கல்யாணம் பண்ணி அவங்களுக்கு இன்னொரு வாழ்க்கையை ஏற்படுத்தித் தர்ற... நீ... எங்கே... ஒரு விதவைய கல்யாணம் பண்ணி புரட்சி

பண்ணிடுவியோன்னு பயமாயிருக்கு நந்தா!''

''எம்மா... அப்படி நினைக்கிறே?'' என்றான் சிரித்துக் கொண்டே!

''இவ்பாகவே... எல்லோருக்கும் உதவி செய்ற சுபாவம் உன்னுது. மத்தவங்களுக்கு எடுத்துக்காட்டா இருப்போமேன்னு நீயும்... ஒரு விதவைப் பொண்ணை கல்யாணம் பண்ணிப்பியோன்னு பயமா இருக்குப்பா! போதாதுக்கு இந்த பத்திரிகைகாரங்க வேற இதே ரீதியில கேள்வி கேட்டு உன்னை உசுப்பேத்தறாங்க! வேண்டாம் நந்தா! நான் என் மனசுக்குள்ளே வரப்போகிற மருமகளைப்பத்தி பெரிசா கற்பனை பண்ணி வச்சிருக்கிறேன். அதை நீ கெடுத்திடாதேப்பா!'' கெஞ்சினாள் மதுரம்.

அதைக் கேட்டு நந்தகுமார் பலமாக சிரிக்க ஆரம்பித்தான்.

அரண்டுப் போனாள் மதுரம்.

''சாப்பிடறப்ப... இப்படி சிரிக்காதே நந்தா. புரையேறிடப் போகுது!''

''பின்னே... உன்னை நினைச்சா சிரிப்பு வராம வேற என்ன வரும்? அம்மா... நீ வீணா மனசைப் போட்டு குழப்பிக்காதே! நீ பயப்படறமாதிரி எதுவும் நடக்காது. புரியுதா? இன்னைக்கு நந்தகுமார்னா...: செட்டியிலே மட்டுமில்லாம வெளியூரிலும் பிரபலமான நபரா இருக்கேன்னா... அதுக்குக் காரணம் சோஷியல் ஒர்க்தான். சோஷியல் ஒர்க் பண்றவங்க அத்தனை பேரும் அன்னை தெரசா மாதிரி தன் சொந்த வாழ்க்கையை தியாகம் பண்ணிதான் ஆகணும்ங்கற அவசியம் இல்லேம்மா''

''.......?''

'''உன்னை மாதிரி எனக்கும் உனக்கு மருமகளா வரப்போறவ பத்தி கற்பனை இருக்கு. இப்படியிப்படி இருக்கணும்ங்கற எதிர்பார்ப்பு இருக்கு. என் விருப்பப்படி, உன் விருப்பப்படிதான் இந்த வீட்டுக்கு மருமகள் வருவா! அதனால... கண்டதையும் போட்டு மனசை குழப்பிக்காம... நிம்மதியா இரும்மா''

''இப்பதான் நந்தா... நெஞ்சுல பால் வார்த்த மாதிரியிருக்கு. சரி... உனக்கும் வயசாயிடுச்சேப்பா... சீக்கிரம் கல்யாணம் பண்ணி பேரன் பேத்தியை பார்க்கணும்னு எனக்கு ஆசையா இருக்கேப்பா''

''இப்ப நான் கொஞ்சம் பிஸி. அடுத்த மாசம் கோயம்புத்தூர்ல சுயம்வரம் நடத்தப்போறேன். அதற்கான ஏற்பாடுகளை கவனிக்கணும்''


''சரி... நீ ஊர்ல 'உள்ளவங்களுக்கு கல்யாண ஏற்பாடு பண்ணு. நான் என் பிள்ளைக்கு கல்யாண ஏற்பாடு பண்றேன். இப்பவிருந்தே பொண்ணு பார்க்க ஆரம்பிக்கிறேன்.''

''உன்னை சமாதானப்படுத்த முடியுமா? என்னவோ செய். அப்புறம்... நான் இப்ப சன் டி.வி. ஆபிஸ்க்கு அவசரமா கிளம்பிட்டுக்கேன். பவித்ரா வந்தான்னா ஒரு விஷயமா சிட்டி கமிஷனரை பார்க்க சொல்லி இருந்தேன். அவளை உடனே போய் பார்க்க சொல்லு.''

''அதை விடு! நீ எதுக்கு சன் டி.வி.க்கு போகிறே?''

''சொன்னா சந்தோஷப்படுவே! உன் பிள்ளையோட முகம் உலகம் முழுவதும் டி.வி.யில காட்டப் போறாங்கம்மா. ஆமாம்மா... என்னை வணக்கம் தமிழகம் பகுதிக்காக பேட்டி எடுக்க அழைச்சிருக்காங்க''

மதுரம் நெகிழ்ந்துப் போனாள். மகன்



முகத்தை இரு கைகளால் பற்றி உச்சி முகர்ந்தாள்.

''இதையெல்லாம் பார்த்து சந்தோஷப்பட உங்கப்பா உயிரோட இல்லையேப்பா'' கண்கள் கலங்கியது.

**கா**லிங் பெல் அலறியது.

கதவை திறந்த மதுரம் பவித்ராவை பார்த்ததும் உள்ளுக்குள் பொங்கிய வெறுப்பை மறைத்துக் கொண்டு ''வாம்மா'' என்றாள்.

''நந்து... இல்லையா ஆன்ட்டி... வாசல்ல காரை காணோம்?''

''ஆமா.... அவன் வெளியே போய்ட்டான்''

''எங்கிட்டே சொல்லவேயில்லையே'' என்றாள் ஆச்சர்யமாய்.

''இதென்னம்மா அதிசயமாயிருக்கு? ஒரு ஆம்பளைக்கு வெளியிலே ஆயிரம் வேலையிருக்கும். பெத்தவ நான்! எங்கிட்டேயே அவன் எதையும் சொல்லிட்டுப் போறதில்லே...''

''ஐயோ... ஆன்ட்டி... நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. எங்க அமைப்பு சார்பான வேலைக்காக வெளியே போயிருந்தா... அவசியம் எனக்கு தெரிஞ்சுதான் ஆகணும். மத்தபடி பர்ஸனல் விஷயம்னா எனக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை ஆன்ட்டி! சாரி... நீங்க கோபமா இருக்கீங்கன்னு நினைக்கிறேன்.''

''உன் மேல எனக்கென்ன கோபம்? அதெல்லாம் ஒண்ணுமில்லே. சித்த உக்காரு காபி கொண்டு வர்றேன்'' என்று கூறிவிட்டு நகர்ந்தாள் மதுரம்.

'காபி வேண்டாம்' என்று சொல்ல பயந்து அமர்ந்துவிட்டாள்.

அவள் கொடுத்த காபியை மவுனமாக உறிஞ்ச ஆரம்பித்தாள்.

பவித்ராவை பார்க்கவே ஏனோ மதுரத்திற்கு பிடிக்கவில்லை.

இளம் வயது. அழகானவள். கணவனை ஆறே மாதத்தில் பறிகொடுத்தவள். படித்தவள். நாகரீகமாய் உடை உடுத்துபவள். பார்த்தாள் புருஷனை இழந்தவள் மாதிரியா தெரிகிறாள்? பூவும் பொட்டுமாய் தளுக்கி மினுக்குகிறாள். போதாக்குறைக்கு நந்தகுமாரோடு நேரம் காலம் தெரியாமல் ஊர் சுற்றுபவள். இதெல்லாம் நந்தகுமாரை கவராது என்று என்ன நிச்சயம்?

எங்கே தன் மகன் பவித்ராவை திருமணம் செய்து கொண்டு விடுவானோ என்கிற பயம் மதுரம் உடல் முழுக்க பரவியிருந்தது.

அவன் சன் டி.வி. ஆபிஸ்க் போயிருக்கிறான் என்று தெரிந்தால்... இவளு அங்கு ஓடுவாள். அதை விரும்பாததால்தா அந்த விஷயத்தை பற்றி அவளிடம் மூச் விடவில்லை.

''சரி ஆன்ட்டி... நான் கிளம்பறேன்''

''சொல்ல மறந்துட்டேனே... உன்னை கமிஷனரை போய் பார்க்க சொன்னான்''

''அங்கேதான் கிளம்பறேன்'' என்றா பவித்ரா.

''சொல்றேன்னு தப்பா நினைக்காதே பவித்ரா. உனக்கும் சின்ன வயது. எவ்வள காலத்துக்கு இப்படியே அலைஞ்சிட்டிருக்க போறே? உனக்கேத்த மாதிரி யாராவது ஒருத்தரை பார்த்து கல்யாணம் பண்ணிக் வேண்டியதுதானே?'';

இதை எதிர்பார்க்காத பவித்ர திணறிப்போனவளாய் மதுரத்தை பார்த்த அசட்டுத்தனமாய் சிரித்துவிட் வெளியேறினாள்.

## 6

**அ**ன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டாள் பவித்ரா. இன்று தான் சன் டி.வி.யி வணக்கம் தமிழகம் பகுதியில் நந்தகுமாரி பேட்டி ஒளிபரப்பாகிறது. அதுவும் கூட நேற் டி.வி. பார்த்து கொண்டிருந்த போது தா 'நாளைய சிறப்பு விருந்தினர்' என்று நந்தான காட்டிய போது தான் பவித்ராவுக்கே விஷய தெரியும்.

'எவ்வளவு பெரிய விஷயம்? எப்ப என்னிடம் மறைத்தான்?' மனசில் வலியும் லேசாய் கோபமும் எட்டிப் பார்க்க உட அவனிடம் போனில் சண்டை போட்டாள்.

நந்தாவுக்கே ஆச்சர்யம் தான். அம் அவளிடம் சொல்லியிருப்பார்கள் என் நினைத்திருந்தான். அலுவலகம் மற்றும் இத பணிகளால் இதை அவனும் சொல்ல மறந்தான் உண்மை சொன்னால் வேதனைப் படுவா அதனால்...

''இப்படி... இப்படி நீ என்கிட்டே சண்டை போடணும்ங்கறதுக்காகவே நா சொல்லாம மறைச்சேன்!...'' என்றா சமாளிப்பாய்.

''அதானே பார்த்தேன்? சொல் மறந்திட்டியோன்னு எவ்வள வேதனைப்பட்டேன் தெரியுமா?''

''சரி... நாளைக்கு டி.வி.யில என் இன்டர்வியூ பார்த்துட்டு... உன் கருத்தை சொல்லு. ஓகே?''

''பார்க்காம இருப்பேனா? நாளைக்கு முதல் போன் என்னிடமிருந்து தான்!'' என்றாள்.

சின்னத்திரையில் நந்தகுமாரை பார்க்கும் போது மனசு பரவசப்பட்டது. அந்தரத்தில் உயரே பறப்பதுப் போல் இருந்தது. தன்னை டி.வி.யில் பேட்டி காணும் உணர்வு ஏற்பட்டது.

உமா பத்மநாபன் கேட்கும் கேள்விகளுக்கு நிதானமாய், யதார்த்தமாய், அலட்டலில்லாமல் பதில் கூறினான். அவனை குளோசப்பில் காட்டிய போது மிக அழகாய் இருப்பது போல் தோன்றியது.

இமை கொட்டாமல் டி.வி.க்கு மிக நெருக்கமாக அமர்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவுக்கு முரளி நான்கைந்து முறை அழைத்ததுக் கூட காதில் எட்டவில்லை. அவள் உணர்வுகள் ஒட்டு மொத்தமாய் டி.வி.க்கு ஈர்க்கப்பட்டிருந்தது.

முரளி தங்கையின் கண்களில் மின்சிந்த ஆர்வத்தை பார்த்து புன்முறுவல் பூத்தவனாய்.... அதற்கு மேல் அவளை தொந்தரவு செய்ய மனமின்றி அவள் அறையை விட்டு வெளியேறினான்.

**இ**ரண்டு நாட்களாய் காய்ச்சல் கொஞ்சமும் விடவில்லை. முரளி சோர்ந்து போயிருந்தான். பவித்ரா அருகிலிருந்து கவனித்துக் கொண்டாலும்... அவளுக்கு வெளியிலும் வேலைகள் காத்துக் கொண்டிருந்ததால் திணறிப் போனாள்.

''கொஞ்சமும் விடலையேண்ணா... டாக்டருக்கு போன் பண்ணட்டுமா?'' என்றாள் கவலையுடன்.

''வேணாம் பவி! வேர்க்கிற மாதிரியிருக்கு. காய்ச்சல் விட்டுடும். நீ எங்கேயோ போகணும் இல்லே... நீ கிளம்பு''

''உன்னை' இப்படி விட்டுட்டு எப்படிண்ணா போறது?''

''அதுக்கு ஒரே வழி முரளிக்கு ஒரு கல்யாணம் பண்றது தான். பொண்டாட்டின்னு ஒருத்தி வந்துட்டா... அவ, புருஷனை கண்ணுக்குள்ளே வச்சு பார்த்துக்க மாட்டாளா? இந்தாப்பா... இந்த ஹார்லிக்ஸை குடிச்சிடுப்பா!'' என்றாள் ரோஸ்லின்.

''ஆமாண்ணா... ரோஸ்லின் அம்மா சொல்றது தான் சரி! உனக்கும் வயசாகிட்டே போகுதுண்ணா! உன்னை தேடி நிறைய அலையன்ஸ் வருது. அதிலே நல்ல பொண்ணா பார்த்து...''

''ஸ்டாப்பிட் பவித்ரா! இந்த பேச்சே எடுக்காதே!''

''ஏன் இப்படி பேசறே?'' என்று ஆச்சர்யமாய் கேட்டாள்.

''வேற எப்படி பேச சொல்றே?''

அண்ணனை வித்தியாசமாய் பார்த்தாள்.

''என்னம்மா அப்படி பார்க்கிறே?''

''உன் பேச்சு ஒரு மாதிரியா இருக்குண்ணா. எப்பவும் நீ இந்த மாதிரி கடுமையா என் கிட்டே பேசினதே இல்லையே!''

''சாரி பவி! என் வார்த்தை உன்னை காயப் படுத்தியிருந்தா ரியலி சாரி!''

''என்னை கோவிச்சுக்க உனக்கு உரிமையில்லையா என்ன? நான் அதுக்காக கூட வருத்தப்படலே. ஏன் கல்யாணம்னு சொன்னாலே எரிஞ்சு விழறே?''

''எல்லாம் உனக்காகத்தான்!''

''எனக்காகவா?''

''ஆமாம்மா... என் தங்கை வாடிப் போன செடியாய் கருகிட்டு இருக்கிறப்ப... எனக்கு மட்டும் எதுக்கும்மா சந்தோஷமும் கொண்டாட்டமும்?''

''அ... அண்ணா... எனக்கு தான் கல்யாணமாய்டுச்சே...''

''ஆறு மாசம் வாழ்ந்திலே... அந்த வாழ்க்கையை சொல்றியாம்மா?''

''எத்தனை மாசம் வாழ்ந்தாதான் என்ன? அபிஷேக்கோட சந்தோஷமா நிறைவா வாழ்ந்து முடிச்சிட்டேன். அது போதும் எனக்கு!''

''பவி... உனக்கு வயசாகிடலை. இருபத்தஞ்சு வயசுக்குள்ளே... எல்லாத்தையும் இழந்துட்டு நிக்கறியே இதுவா நிறைவான வாழ்க்கை? மறுமணம் இழிவான செயல் அல்ல. அது உனக்கே தெரியும். ப்ரைட் ஃப்யூச்சர் மூலமா நந்தாவும், நீயும் எத்தனை பெண்களோட வாழ்க்கையிலே ஒளி ஏத்தியிருக்கீங்க? அதே போல என் தங்கையின் எதிர்காலமும் பிரகாசமா இருக்கணும்னு நான் எதிர்பார்க்கறதுல என்ன தப்பு?''

''அ..ண்..ணா!''

''உங்கண்ணன் உன் மேல உயிரையே வச்சிட்டிருக்கார் பவிம்மா! உன்னை நினைச்சி உனக்கு தெரியாம உங்கண்ணன் கண்ணீர் விடறது உனக்கு தெரியுமா? அலுவலகத்துல பதவி உயர்வு கிடைச்சப்ப... மாற்றலாகி வேற ஊருக்கு போனா... பவியால நிம்மதியா இருக்க முடியாதேங்கிற ஒரே காரணத்துக்காக... அதை

உதறி தள்ளினாரே உங்கண்ணன்! அது தெரியுமா உனக்கு? எதுவும் தெரியாது. என்னா... உனக்கு உன்னோட வேதனைகள் தான் பெரிசா தெரியுது. அபிஷேக்கை நினைச்சி அழற கண்களுக்கு அண்ணனோட கண்ணீர் எப்படி தெரியும்?'' என்றான் ரோஸ்லின்.

உறைந்து போய் விட்டாள் பவித்ரா.

''உனக்கென்று ஒரு வாழ்க்கை ஏற்படாம தான் கல்யாணமே செய்துக்கப் போவதில்லைனு முரளி தம்பி முடிவு பண்ணிடுச்சி. உங்கண்ணன் நாலு பேரை போல கல்யாணம், குழந்தை குட்டின்னு சந்தோஷமா வாழணும்னு நீ ஆசைப்பட்டா... முதல்ல உன் கல்யாணம் நடக்கணும். புருஷனை இழந்த பொண்ணுங்க மறுகல்யாணம் பண்ணிக்கலையா? அவங்கள்லாம் இறந்த புருஷனை மறந்திடறதில்லை. அதே சமயம் எப்பவும் நினைச்சுக்கிட்டே இருக்கறதுமில்லை. அதே மாதிரி நீயும் மறு வாழ்க்கைக்கு தயாராகணும். அவங்களைப் போல புத்திசாலித்தனமா முடிவெடுக்கணும். நந்தா தம்பி கூட அண்ணைக்கு உன்னைப் பத்திதான் வருத்தப்பட்டு பேசினார். எங்களுக்காக நீ ஒரு நல்ல முடிவை எடுக்கணும் பவிம்மா!''

பவித்ராவினால் பதிலே பேச முடியவில்லை.

''நீ... சரின்னு ஒரு வார்த்தை சொல்லு! நந்தாகிட்டே இது சம்மந்தமாய் நான் பேசறேன்'' என்றான் பூடகமாய் முரளி.

சட்டென நிமிர்ந்தாள் பவித்ரா.

''அவசரப்படாதேண்ணா... எனக்கு யோசிக்க கொஞ்சம் டைம் கொடு!'' என்றவள் விசுக்கென தன்னறைக்குள் புகுந்துக் கொண்டாள்.

சாதித்து விட்ட நிம்மதியில் முரளியும், ரோஸ்லினும் ஒருவரையொருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டனர். முரளியை விட்டு அப்போதே காய்ச்சல் ஓடி விட்டது.

**வா**ன வீதியில் கேட்பாரற்று கிடந்த வெள்ளிக் காசுகளை யாரும் எடுத்து செல்ல முன் வரவில்லை.

பவித்ராவின் கண்கள் கூட அந்த அழகிய காட்சியை ரசிக்காமல்... எங்கோ... இருளில் ஆடிக் கொண்டிருந்த நான்கைந்து பனை மரங்களின் அமானுஷ்யத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

மொட்டை மாடியில் காற்றுக்கு பஞ்சமில்லை. எனினும் அவள் நெற்றிப் பொட்டில் வியர்த்திருந்தது.

காலையிலிருந்தே மனசு சரியில்லை.

'அபிஷேக்கிற்கு சொந்தமான நா
இன்னொருவருக்கு சொந்தமாவதா? சேச்சே..

'உன்னைப்பற்றி மட்டுமே யோசிக்கா
பவித்ரா! உன் அண்ணனுக்காக... நீ கொஞ்
விட்டுக் கொடு. இதில் தவறென்ன இருக்கிறது
பெற்றோரை இழந்த உன்னை அந்த குறை
தெரியாமல் வளர்த்து ஆளாக்கிய அண்ணனை
நினைத்துப் பார்! உனக்காக திருமணமே செய்
கொள்ளாமல் யோகியாக வாழ்
கொண்டிருக்கும் முரளிக்காக உயிரை
தரலாமே!'

'என்னால் அபிஷேக்கை மற
முடியலையே!'

'யாரும் மறக்க சொல்லவில்லையே
எப்போதும் அவனையே நினைத்து
கொண்டிராதே என்று தா
அறிவுறுத்துகிறார்கள்! நீ எடுக்கப் போகும் நல்
முடிவினால்... எத்தனை பே
சந்தோஷப்படுவார்கள் தெரியுமா
மற்றவர்களை சந்தோஷப் படுத்துவது தா
மனிதத் தன்மை!'

குழம்பினாள் பவித்ரா.


'நந்தா கூட என் திருமண விஷயமா
அண்ணனிடம் பேசியிருக்கிறான். எனக்
தெரியாமல் என்ன பேசியிருப்பான்? நீ சரின்
ஒரு வார்த்தை சொல்லு! நந்தாகிட்டே இ
சம்மந்தமாய் நான் பேசுகிறேன் என்றா
அண்ணன்! 'நந்தாவிடம் பேச என்
இருக்கிறது? ஒரு வேளை... ஒரு வேளை...
தெளிவாய் யூகிக்க முடியாவிட்டாலு
அப்படித்தான் இருக்கும் என்று மனசு
முடிவுக்கு வந்தது.

அதை நினைத்து வருத்தமே

## வண்ண வண்ண நகங்கள்!

**இ**ந்த வண்ணக் குவியல்கள் எல்ல
வித விதமான வண்ண நகங்கள். யா
வெட்டி போடாத இவைகள் செயற்
நகங்கள்! பெண்கள் தாங்கள் அணி
டைகளுக்கு ஏற்றபடி இனி நகப்பூச்சுகளை
டி அலைய வேண்டாம். ரெடிமேட்
யற்கை நகங்களை விரலில்
வைப்படும்போது சொருகிக் கொண்டு
ண்டும் கழட்டி வைத்துவிடலாம்.

-பாரீஸ் பார்த்தசாரதி.



தோஷமோ அடையாத தன்னை நினைத்து
ச்சர்யப்பட்டாள் பவித்ரா.

## 7

''**ப**வித்ரா... ஒரு குட் நியூஸ்!'' பற்கள்
ரிட கவர்ச்சியாய் அவன் முன் வந்து
ான் நந்தகுமார்.

ஒரு பெரிய அலை அவள் மீது மோதி
மாற வைத்ததுப் போல்... ஒரு புரட்டு
ட்டியது அவன் சிரிப்பு.

'கடவுளே... நான் ஏன் இப்படி
மாறுகிறேன்?'

''பவி... உன்னைத்தான்!'' என்றான்
ண்டும்.

''அ... எ.. என்ன நந்தா?''

''நாம அடுத்த வாரம் கோயம்புத்தூர்ல
யம்வரம் நடத்த ஏற்பாடு
ண்ணிட்டிருக்கோமில்லையா?''

''ஆமாம்... அங்கே உள்ள மிகப்பெரிய
ொழிலதிபர் வேணுகோபாலை கூட தலைமை தாங்க சொல்லி லெட்டர் போட்டிருந்தோமே. பதில் வந்ததா?''

''அதைத்தான் சொல்ல வர்றேன். மிஸ்டர் வேணுகோபால், ஜஸ்ட் இப்பதான் போன் பண்ணினார்.''

''அப்படியா? தலைமை தாங்க சம்மதிச்சுட்டாரா?''

''சம்மதிச்சது மட்டுமில்லே பவி! அவர் செலவிலேயே மணமக்களுக்கு தாலி, சீர்வரிசை சாமான்களெல்லாம் வாங்கித் தர்றதா சொல்லிட்டார்!''

''ரியல்லி? எவ்வளவு சந்தோஷமான விஷயம்?''

''ஆமாம் பவி! எல்லாருக்கும் இவரை மாதிரி நல்ல மனசு இருந்துட்டா... நாம இன்னும் நிறைய நல்ல காரியங்களை செய்யலாம்!''

''கவலைப்படாதே நந்து... உன் மனசுப்படி எல்லாமே நல்லதே நடக்கும்!''

''என் மனசுப்படியா? என் மனசுல என்ன இருக்கும்னு உனக்கு தெரியுமா?'' குறுநகை இதழ் கடையில் நெளிந்தோட கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக் கொண்டு லேசாய் தலை சாய்த்து அவன் கேட்டபோது.. அவள் இதய துடிப்பு ஏகத்துக்கு எகிறியது.

''ம்... தெரியுமே!''

''என்ன தெரியும்?''

''உன் மனசில உள்ளது தெரியும்!''

''அதுதான் என்னன்னு கேட்கறேன்!''

''இப்ப சொன்னா சுவாரஸ்யம் போயிடும். நேரம் வர்றப்ப சொல்றேன்!''

வியந்தான் நந்தகுமார்.

'இவள் பீடிகை போடுமளவிற்கு என் மனதில் அப்படியென்ன இருக்கிறது?' அவனுக்கே புரியவில்லை.

''சரி... இந்த முறை கோயம்புத்தூர் பங்ஷனுக்கு முரளியையும் வரச்சொல்லேன்!''

''சொல்கிறேன்!''

''டேட் கன்பர்ம் பண்ணிக்கிட்டு ட்ரெய்ன்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணிடலாம்.''

''சரி... நான் புறப்படறேன்!'' என்று எழுந்துக் கொண்டாள்.

''பவி... ஒன் மினிட்!''

''என்ன நந்தா?''

''இந்த ஆலிவ் க்ரீன் சேலையும், தலையிலே மல்லிகைப் பூவுமாக உன்னைப் பார்க்கிறப்ப.. மாருதி வரையற ஓவியப் பெண் மாதிரி அட்டகாசமா இருக்கிறே பவி!''

இப்படியொரு வர்ணனையை


வியின் பெண்மணி

நந்தகுமாரின் வாயிலிருந்து சத்தியமாய் எதிர் பார்க்காத பவித்ராவுக்கு குப்பென்று வியர்த்தது.

''த.. தாங்க்ஸ்!''

''நானும் பார்க்கிறேன்.. நீ எப்பவுமே காட்டன் சாரீஸ்தான் கட்டறே! உனக்கு காட்டன்தான் பிடிக்குமா?''

''ம்!...'' என்று தலையாட்டியவளுக்கு மேலும் வியப்பு கூடியது.

'என்னை இந்தளவிற்கா கவனித்துக் கொண்டிருக்கிறான்?' ஏதோ ஒரு உணர்வு அவள் உடலெங்கும் பாய்ந்தோடியது.

''நான் இதுவரைக்கும் உனக்கு எந்த பரிசுப் பொருளும் கொடுத்ததில்லை. அடுத்த மாசம் உன்னோட பிறந்தநாள் வருதில்லையா? நான் உனக்காக கடைகடையா ஏறி இறங்கி அழகான காட்டன் புடவை வாங்கி பிரசன்ட் பண்ணப் போகிறேன்!''

''அ... அதெல்லாம் எதுக்கு நந்தா?''

''ஏன்.. நான் கொடுத்தா வாங்கிக்க மாட்டியா?''

''சேச்சே.. நான் அதுக்காக சொல்லலே. உனக்கேன் வீண் சிரமம்?''

''சிரமமா... கடை கடையா ஏறி இறங்கி ம்ணிக்கணக்கிலே காத்திருந்து புடவை வாங்க பழகிக்கப் போகிறேன். என்ன புரியலையா? அம்மாவோட டார்ச்சர் தாங்கலே பவி! கல்யாணம் பண்ணியே தீரணும்னு நச்சரிக்கிறாங்க. நானும் சரின்னுட்டேன். கல்யாணத்துக்கு பிறகு என்னோட லைப் ஸ்டைலே மாறிடுமில்லையா? அதான்... இப்பவிருந்தே கத்துக்கலாம்னு இருக்கிறேன்'' என்றான் முகம் விரிய.

பவித்ராவுக்கு ஏதோ புரிவது போலிருந்தது.

''**அ**ண்ணா... நீயும் வரலாமே!''

''இல்லேம்மா... இப்ப என்னால லீவு போட முடியாத சூழ்நிலை. நீயும், நந்தாவும் புறப்படுங்க. பெஸ்ட் ஆப் லக்!''

''தாங்க்ஸ்ண்ணா..!''

முரளிக்கும் அவர்களுடன் செல்ல ஆசைதான். ஆனால், பவித்ராவும் நந்தாவும் வெளியூரில் நடத்தும் நிகழ்ச்சி இது. பத்து மணி நேர பயணம் அவள் மனதை மாற்றாதா என்கிற நப்பாசை அவனுக்கு.

''ட்ரெய்ன்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணலையாம்மா?''

''இல்லேண்ணா! புறப்படற தேதியில் கொஞ்சம் குழப்பம் இருந்ததால் லேட்டாயிடுச்சி! டிக்கெட் கிடைக்கல. நந்தாவோட காரும் சர்வீசுக்கு போயிடுச்சு! வழியில்லாம பஸ்லதான் போகிறோம்.''

''ஹலோ.. பவி... ரெடியா?'' கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த நந்தகுமார்.

''வா... நந்தா.. பவித்ராவும் தயாரா இருக்கா!''

''நீயும் எங்களுடன் வந்திருக்கல முரளி!''

''அடுத்த முறை நிச்சயமா வர்றேன். விட்ரு!''

''சரி... நீ எப்ப கல்யாண சாப்பாடு போடப் போறே?'' அவன் வயி செல்லமாய் குத்தினான்.

''நீ முதல்ல போடு! உடனே நா போட்டுர்றேன்!'' என்றான் முரளி.

அண்ணனின் பேச்சில் மறைந்தி ஆசையை பவித்ராவினால் புரிந்துக் கொ முடிந்தது.

''ரொம்ப சீக்கிரமே போட்டுட ஒக்கே! வா... பவி...!'' என்று கூற... அ பின்னேயே கிளம்பினாள்.

ஜோடியாய் சென்ற அவர்கள் அ இங்கிருந்தபடியே ரசித்த முரளிக்கு கண்க வியர்த்தது.

**இ**ரவுப் பயணம்!

இருட்டான சாலையில் அவ்வப்பே வாகனங்களின் வெளிச்சப் பொட் விரைந்தோடி மறைந்தன.

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தி பவித்ரா மெல்ல திரும்பி பக்கத் அமர்ந்திருந்த நந்தகுமாரை பார்த்தாள்.

அதுவரை எதை எதையோ பே கொண்டே வந்தவன்... படித்துக் கொண்டி புத்தகத்தை மடிமீது மடிக்காமலே வைத்தபடி கண்ணயர்ந்திருந்தான்.

பஸ்ஸில் கிட்டத்தட்ட அனைவ உறங்கி விட்டிருந்தனர். பவித்ராவுக்கு தூக் வரவில்லை.

வெகு கிட்டத்தில் நந்தாவை பார்த் போது, ஒரு சாயலில் அபிஷேக் பே இருப்பதாக அவளுக்குத் தோன்றி மெல்லிய சென்ட்டின் நறுமணம் அ நாசியைத் தொட்டது.

'நான் மறுபடி வாழவேண்டும் ஆசைப்பட்ட நண்பனே... எப்படியோ மனதை மாற்றி வென்று விட்டாய்! என் ஏற்பட்டுள்ள நேசத்தை வெளிப்படை கூறாமல் சுற்றி வளைத்து பேசுகிறாய். பெண்ணுக்கு புடவையை பரிசாக தருபவன் காதலனாகவோ, கணவனாகவோ மட்டுமே இருக்க முடியும். அந்த ஒரு வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் அடங்கியிருந்ததே! உன் கையால் புடவை பெற்றுக் கொள்ள ஆவலோடு காத்திருக்கிறேன் நந்தா! நான் மறுத்து விடுவேன் என்ற பயத்தில் தான் நேரடியாக பேசவில்லையா?

இனி உன்னையோ, என் அண்ணனையோ வேதனைப்படுத்தும் எண்ணமில்லை! நாம் ஊருக்கு திரும்பியதும்... நானே உன்னிடம்... எதிர்காலத்தைப் பற்றி பேசப்போகிறேன். என்னைப் பற்றி, அபிஷேக்கைப் பற்றி நன்கு அறிந்தவன் நீ மட்டுமே! என்னை நன்றாக புரிந்துக் கொண்ட நீயே... என் வாழ்க்கைத் துணையாக வருவதில் எனக்கும் சந்தோஷம் தான்.

எனக்கென்று ஒரு வட்டம் போட்டு எல்லோரையும் விட்டு தொலைவில் இருந்து நான் சாதித்ததென்ன? விண்ணை விட்டு இறங்கி வர நான் தயாராகி விட்டேன் நந்தா! எல்லாப் பெண்களையும் போல... நீ சொன்னதுப் போல... ஆசைப்பட்டது போல நானும் வாழ தயாராகி விட்டேன். இப்போது நான் புதிதாய் பிறந்ததுப் போல் உணர்கிறேன்.'

அவள் மனம் பலதையும் சிந்தித்து குதூகலித்தது. திடுக்கிட்டுப் போனாள் பவித்ரா.

காரணம், உறக்கத்தில் நந்தகுமாரின் தலை பவித்ராவின் தோளில் சாய்ந்திருந்தது.

அவன் தலைமுடி அவள் கழுத்திலும், கன்னத்திலும் உராய்ந்தன. ஷாம்பூவின் நறுமணம் நாசிக்குள் புகுந்தது.

பவித்ரா கிறங்கிப் போனாள்.

அவள் வலது கை உயர்ந்து அவன் தூக்கத்தை கலைக்காத சிரத்தையோடு அவன் தலைமுடியை கோதி விட்டது.

நந்தகுமார் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான்.

## 8

**கோ**யம்புத்தூரில் விழா இனிதே நடந்து முடிகிறது. இந்த சுயம்வரம் விதவைகளுக்கென்று ஒதுக்காமல் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம் என்று அறிவித்திருந்ததால்... படித்தவர், படிக்காதவர் அத்தனை மட்டத்திலிருந்தும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தனக்குரிய ஜோடியை தானே தேர்ந்தெடுத்துக் கொண்ட எண்ணற்றோர் திருமண செலவினை வேணுகோபாலே ஏற்றுக் கொண்டு நடத்தி வைத்தார்.

விழாவிற்கு வசந்தாவும், பிரவீணாவும் கூட வந்திருந்தனர்.

ஒரு நல்ல நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மனநிறைவு வேணுகோபால் குடும்பத்தினருக்கு ஏற்பட்டது.

வேணுகோபாலுக்கு நந்தகுமாரின் பேச்சும், நடவடிக்கையும் வெகுவாய் பிடித்திருந்தது.

விழா முடியட்டும் என்று காத்திருந்தார்.

முடிந்ததும் நந்தகுமாரின் கையை பற்றி வெகுநேரம் குலுக்கிக் கொண்டிருந்தார்.

''உங்களை நினைச்சா ரொம்ப பிரமிப்பா இருக்கு மிஸ்டர் நந்தகுமார்''

''தாங்க்யூ சார்'' என்றான் சற்றே வெட்கம் கலந்து.

''உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். பெரிய பெரிய காரியமெல்லாம் செய்யறதால... உங்களை வயசானவரா கற்பனை பண்ணி வச்சிருந்தேன். ஆனா ஒரு அழகான இளைஞனா சத்தியமா நான் எதிர்பார்க்கலே...''

அந்த புகழ்ச்சிக்கு சத்தம் வராமல் சிரித்தான்.

''உங்களுக்கு கல்யாணமாயிடுச்சா மிஸ்டர் நந்தகுமார்?''

''இன்னும் இல்லை''

''அவங்க?'' என்று பவித்ராவை சுட்டிக் காட்டினார்.

''என் தோழி! ஒரே தெருவில் வசிக்கிறோம். என்னுடைய சேவையில அவங்களோட பங்கும் உண்டு. பவித்ராவோட கணவர் இப்போது உயிரோடு இல்லை'' என்றான். அவன் அவரிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவனின் பார்வை வேணுகோபாலுக்கு பின்னால் நின்றிருந்த பிரவீணா மீதே இருந்தது.

'யார் இந்த தேவதை? இவரின் மகளாய் இருப்பாளோ?' அவன் மனம் ஆவலாய் கேள்வி கேட்டது.

''அடடா... இந்த சின்ன வயசிலே இப்படியொரு துன்பமா?'' நிஜமான வேதனையின் வெளிப்பாடு அவர் குரலில் தென்பட்டது.

பவித்ரா தலை கவிழ்ந்து கொண்டாள்.

''அப்புறம்.. மிஸ்டர் நந்தகுமார். இவள் என் மனைவி வசந்தா!''

''வணக்கம்மா!'' என்று கை கூப்பினான்.

''வணக்கம்!'' என்று அவளும் கை கூப்பினாள்.

''இவன் என் ஒன்லி ஒன் டாட்டர்... மிஸ் பிரவீணா! படிச்சிட்டிருக்கா!''

''ஹலோ...''

''ஹாய்..'' என்ற பிரவீணா நந்தகுமாரே எதிர்பாராத செகண்டில் அவன் கையை பற்றி குலுக்கினாள்.

ஸ்பான்சை தொட்ட சுகம் அவனுக்கு. சற்று நேரம் எடுத்துக் கொண்ட பிறகே கைகள் பிரிந்தன.

அவள் அவன் கையை மட்டும் பற்றவில்லை. இதயத்தையும் சேர்த்துதான்.

''ஓக்கே சார். உங்களை சந்திச்சதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம். உங்களை மாதிரி உதவுகிற குணம் எல்லா பணக்காரங்களுக்கும் இருந்துட்டா.. நம்ம நாடு சுபிட்சமாயிடும் சார்!''

''அதிகமா புகழ்றீங்க...''

''இல்லை.. நிஜமாதான் சொல்கிறேன்! ஓக்கே சார்! அப்ப நாங்க கிளம்பறோம்!''

''இன்னைக்கே சென்னைக்கு கிளம்பறீங்களா?''

''இல்லே சார்! ஒரு நாள் இங்கே தங்கிட்டு நாளைக்கு புறப்படறோம்.''

''ஹோட்டல்ல தங்கப் போறீங்களா?''

''நோ.. நோ... இங்கே என்னோட நண்பர் வீடு இருக்கு. அவரோட வீட்லே தான் ஹால்ட்!''



''அப்படியா? பேசாம நம்ம வீட்லே தங்கலாமே!''

''பரவாயில்லே சார்! நண்பர் ரொம்ப வற்புறுத்தி கேட்டுக் கிட்டார். இப்பப் போய்... வரலேன்னா... வருத்தப்படுவார்!''

''அதுவும் நியாயம்தான். சரி.. நாளைக்கு நம்ம வீட்லே தான் உங்களுக்கும் பவித்ராவுக்கும் சாப்பாடு. எந்த மறுப்பும் சொல்லாம வரணும்!''

''கண்டிப்பா வர்றோம் சார்!'' என்றான் புன்னகையுடன்.

பிரவீணாவும் அவனிடம் கண்களா விடை பெற்றாள். அனைவரும் காரை நோக் சென்றனர்.

**வெ**ற்றிலையை நன்றாக துடைத் அளவாய் சுண்ணாம்பு தடவி, பாக்கு வைத் மடித்து கணவனிடம் கொடுத்தாள் வசந்தா.

யோசனையுடன் அதை வாங்கி வாயி வைத்து குதப்பிக் கொண்டிருந்தார்.

''அந்தப் பையனை பத்தி நீ என் நினைக்கிறே வசந்தா?''

திடீரென்று கேட்கவும் புரியாம விழித்தாள்.

''எந்த பையன்?''

''அதான் இன்னைக்கு பங்ஷ பார்த்தோமே நந்தகுமார்.. அவனைப்பத்தி!''

''ஒண்ணு ரெண்டு வார்த்தை த பேசினேன். அதை வச்சு அந்தப் பிள்ளைய பத்த என்ன சொல்ல முடியும்?''

''நல்ல குணத்தை பேச்சை வ கண்டுபிடிக்க வேண்டியதில்லை. நடத் போதுமே! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோ பதம் என்பது போல அந்த பிள் எப்படிப்பட்டவன்கறது நாடு முழு தெரிஞ்ச சங்கதியாச்சே! சின்ன வயசு! ஆன என்ன ஒரு விவேகமான மனசு? பெரும்பாலு ஆண்டு அனுபவிச்சு, சலிச்சு போன வயசுலதான் சமூக சேவை செய்யலாமேங்கற எண்

வரும். கல்யாணமே ஆகாத இ பிள்ளைக்கு அந்த ந மனப்பான்மை இருக்குதுன்ன ரொம்ப ஆச்சரியமாயிருக்கு சிலாகித்தார்.

''ஆமாம்.. ந

## காலை நேர புத்துணர்ச்சிக்கு பெட்காபி தேவையா?

**சி**லருக்கு 'பெட்' க அவசியம் தேவை. அதிகா கண் விழித்ததும் காபியில் உ நச்சுத்தன்மை உள்ளே சென் தான் புத்துணர்ச்சி பிறக்கும்.

கெடுதலான இந்த செயற்கை இல்லாமல் தீங்கற்ற இயற்கையான மூலமும் அதிகாலையில் புத்துண

றலாம்.

நம் உடலில் உள்ளங்காலில் இருந்து ச்சந்தலை வரை செல்லும் அனைத்து ம்பு களும் இரு காதுகளில் தான் ங்கமிக்கின்றன. அதிகாலை கண் ழித்ததும் இரு காது மடல்களையும் ்யமாக ஒரு சில நிமிடங்கள் மசாஜ் ்ய்யுங்கள். பிறகு பாருங்கள். உடம்பு ழுவதும் உள்ள நரம்புகள் புத்துணர்ச்சி ற்றுவிடும். ஊக்கம் உத்வேகத்துடன் ன்று நாம் செயல்பட முடியும்.

சீனாவின் அக்குபஞ்சர் வைத்திய றையான இது நன்றாகவே பலன் ளிக்கும்.

-ராஜ்.

ள்ளையாகத்தான் தெரியறான்!''

''எனக்கு ஒரு எண்ணம் உண்டாகியிருக்கு சந்தா!''

''என்னங்க?''

''நம்ம பிரவீணாவுக்கு இந்த பிள்ளைய ல்யாணம் பண்ணி வச்சா என்ன?''

''என்னது?''

''நீ இந்தளவுக்கு வாயை பிளக்கிற ளவுக்கு பெரிய அதிர்ச்சி தர்ற செய்தியையா சால்லிட்டேன்?'' கிண்டலாய் சிரித்தபடி கட்டார்.

''பின்னே? சாதாரண விஷயமா இது? டுத்தோம், கவிழ்த்தோம்னு டிவெடுக்கறதுக்கு?'' வசந்தாவுக்கு உள்ளம் ைதத்தது.

''நான் அவசரப்பட்டு இந்த தாடிவெடுக்கலை வசந்தா! நான் நம்ப பிரவீணா க்கு மட்டும் மாப்பிள்ளை பார்க்கலை. நம்ம சாத்துக்களை கட்டி காப்பாத்தற, பாறுப்புள்ள நல்ல மனுஷனாகவும் டிக்கிட்டிருந்தேன். நந்தகுமார் எல்லாத்துக் பொருத்தமானவனா தெரியறான்!''

''நம்ம அந்தஸ்துக்கு கொஞ்சமும் ஒத்து ராத இடம்!''

''நானும் ஆரம்பத்திலே அடிமட்டத்திலே ருந்தவன் தானே? பழசை மறக்கக்கூடாது. ன் பாடுபட்டு உழைச்சதெல்லாம் பணத் ாசை பிடிச்ச ஒரு ஆளிடம் சிக்கி சீரழியக் டாது. நந்தகுமார் நல்ல பையன். பெண்களை க்கத் தெரிஞ்ச பையன். நம்ம பிரவீணாவுக்கு த பையன். இதோ பார் வசந்தா! காசை த்து நாயை வாங்கலாம். ஆனால் அன்பாகிய ாலாட்டுதலை விலை கொடுத்து வாங்க டியாது. நந்தகுமார் அன்பும், பண்பும் நிறைந்தவன்!''

''எல்லாம் சரி.. இதுக்கு பிரவீணா ஒத்துக்கணுமே!''

''அது என் பொறுப்பு!''

''ஒருவேளை... அந்த பையன் மறுத்துட்டா?''

''நோ சான்ஸ்! அவனுக்கு பிரவீணாவை ரொம்ப பிடிச்சிருக்கு!''

''உங்களுக்கு எப்படி தெரியும்?''

''பாம்பின் கால் பாம்பறியும். விளக்கமாக சொல்ல முடியாது.''

''எதற்கும் தீர விசாரிச்சிடுங்க. கூட யாரோ ஒரு பொண்ணு வந்திருக்கே... சுபத்ராவோ, பவித்ராவோ... அவ்வளவு தைரியமா ஒரு ஆணோட கிளம்பி வந்திருக்காளே.. அவங்களுக்குள்ளே...''

''முதல்ல வாயை கழுவு! என்ன பேச்சு பேசறே? பாவம் அந்த பொண்ணு. புருஷனை இழந்திட்டு தனி மரமா நிக்கறா. இந்த மாதிரி சேவையிலே ஈடுபட்டு மனசை தேத்திக்கிறா.. எல்லா பொண்ணுங்களையும் உன் பொண்ணு மாதிரி நினைக்கணும்!'' என்றார் கோபமாக.

''நான் என்ன தப்பா சொல்லிட்டேன்? யாரை நம்ப முடியுது? பார்க்க ரோஜா மாதிரி தெரிவாங்க. பழகினா முள்ளா குத்துவாங்க. நீங்க சொல்கிற மாதிரி அந்தப் பையன் சேவை மனப்பான்மை உள்ளவனாய் இருந்தால் ஏன் அந்த விதவைப் பொண்ணை கல்யாணம் பண்ணி வாழ்வளிக்கக் கூடாது?'' ஒரே போடாய் போட்டாள்.

''தோண்ட தோண்ட கல்லும் மண்ணும் தான் வரும். நான் ஆராய்ச்சி பண்ணி டாக்டர் பட்டம் வாங்கப் போறதில்லே. நந்தகுமார் பிரவீணாவுக்காக பிறந்தவன். அவ்வளவுதான். போதுமா? இதுதான் என் முடிவு! அது மட்டுமல்ல... படைத்தவனின் தீர்ப்பும் கூட!'' என்றார் இறுதியாய்... நிடமாய்.. வேணுகோபால்.

## 9

**மா**டியிலிருந்து விரைந்து இறங்கிக் கொண்டிருந்தாள் பவித்ரா.

ஹால் சோபாவில் அமர்ந்திருந்த நபர் பரிச்சயமானவராகத் தெரிந்தார். சற்று யோசனைக்குப் 'பிறகு அவர் நாகர்

பொண்ணுங்கம் என்று புரிந்தது.

முகத்தில் புன்னகை பரவ அவரைப் பார்த்து வணக்கம் சொன்னான்.

''வணக்கம்மா.. தம்பிய பார்க்க வந்தேன்.''

''அண்ணன் குளிச்சிட்டிருக்காரே! ஏதாவது முக்கியமான விஷயமா?''

''வழக்கம் போலதான். தம்பிக்கு எத்த மாதிரி நல்ல நல்ல வரன் நிறைய வந்திருக்கு. இதுவரைக்கும் நூத்துக்கும் மேல் வரன் கொண்டு வந்திருப்பேன். ஆனா எல்லாத்தையும் உங்களை காரணம் காட்டி மறுத்திட்டார். இப்ப நான் அவரை விடப் போறதில்லே. பத்து பொருத்தமும் பொருந்தற மாதிரி யாருக்கும் அமைஞ்சிடாது. அது ஆயிரத்துல ஒருத்தருக்கு தான் விசேஷமா அமையும். அந்த மாதிரி பத்து பொருத்தமும் ஒத்து போய் ஒரு சூப்பர் வரன் வந்திருக்கும்மா.

பேரு பிரியா. டாக்டருக்கு படிச்சிட்டிருக்கு. அப்பா ரிடையர்டு ஆர்மி மேன். ஒரு அண்ணன். கல்ப்ல இருக்கார். நல்ல வசதி. பொண்ணும் அழகாயிருக்கா. முரளி தம்பியோட போட்டோவை அவங்க வீட்லே காட்டினேன். குடும்பத்தை பத்தியும் சொன்னேன். அவங்களுக்கு ரொம்ப பிடிச்சி போய்டுச்சி. ஜாதகமும் திவ்வியமா பொருந்தி போயிருக்கிறதால... எப்படியாவது இந்த இடத்தை முடிச்சிடுங்கன்னு கேட்கறாங்க. நல்ல குடும்பம். நல்ல மனுஷங்க. அவங்களிடம் உள்ள வசதிக்கு இதைவிட வசதியான இடமா பார்த்து முடிக்க மாட்டாங்களா? தங்கைக்காகவே தன் வாழ்க்கையை தியாகம் செய்கிற அண்ணன் என்று தெரிஞ்சுட்டதால... இப்படிப்பட்ட ஆணினால் தான் தன் பெண்ணை சந்தோஷமாக வச்சு காப்பாத்த முடியும்ங்கற நம்பிக்கை அவங்க மனசில ஆழமா பதிஞ்சிடுச்சு. அவங்க வசதி வாய்ப்புகளை எதிர்பார்க்கலே. நல்ல குணமுள்ள பையனா எதிர்பார்க்கறாங்க. அவ்வளவுதான். இதுதாம்மா பொண்ணோட போட்டோ. நீயாவது உங்க அண்ணனுக்கு எடுத்து சொல்லக் கூடாதாம்மா? அதிர்ஷ்டம் தினமும் வீடு தேடி வந்து கதவை தட்டிக்கிட்டிருக்காது. வரும் போது பயன்படுத்திக்கணும். முரளி தம்பி பலமுறை வேண்டாம்னு கதவை சாத்திட்டார். இந்த முறை அப்படி செய்ய வேண்டாம்னு சொல்லும்மா. அவருக்கும் வயசாகுதில்லே?''

அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே தலையை துவட்டியபடி பாத்ரூமிலிருந்து வெளி வந்தான் முரளி.

''அடடே... தரகர் சாரா? எப்படி இருக்கீங்க? என்ன இந்த பக்கம்?'' என்றான்.

''நான் நல்லாயிருக்கேன். குடும்பம், புள்ளை குட்டின்னு. அதுமாதிரி நீங்களும் ஆக வேண்டாமா? இதோ... இதுல பொண்ணோட போட்டோ, ஜாதகமெல்லாம் இருக்கு...''

''இருங்க.. எல்லாத்தையும் எடுத்து உள்ளே வையுங்க. நான்தான் உங்ககிட்ட ஏற்கனவே சொல்லியிருக்கேனே சார்! எனக்கு அலையன்ஸ் பார்க்க வேண்டாம்னு...'' என்றான் சற்றே எரிச்சலுடன்.

''சார்... நான் என்ன சொல்ல வர்றேன்னா...''

''எதுவும் சொல்ல வேண்டாம்!'' என்றான் பட்டென்று.

''சார்... நீங்க நாளைக்கு வாங்க. ஒரு நல்ல முடிவா சொல்லிடறோம்!'' பவித்ரா தரகரிடம் சொன்னாள்.

''பவி.. என்ன நீ...?''

''அண்ணா.. ப்ளீஸ்'' என்று கையமர்த்தியவள் தரகர் வெளியில் செல்லும் வரை காத்திருந்து பின் அண்ணனிடம் வந்தாள்.

''அண்ணா... என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறீங்களா? எதுக்காக வர்ற நல்ல வரனை எல்லாம் வேண்டாம்னு ஒதுக்கறீங்க?''

''..........''

''சொல்லுங்க... ஏன்?''

''எதுக்காகன்னு உனக்கு புரியலியா பவி?''

அவளை ஆழமாய் நோக்கினான். பவித்ராவுக்குப் புரிந்தது. நிஜமான காரணம் தான் தான் என்று உறைத்தபோது நெஞ்சில் ஈட்டி பாய்ந்தது போல் வலித்தது.

''அண்ணா... என்னை காரணம் காட்டி உங்க எதிர்காலத்தை வீணாக்கிக்காதீங்க!''

''இல்லே பவி! உன் அண்ணன் அந்தளவு சுயநலக்காரன் இல்லேம்மா! என் தங்கை வாடிப்போய் மூலைல உட்கார்ந்திருக்க... நான் மட்டும் சந்தோஷமா இருப்பேனா? என் முடிவு இதுதான்! எனக்கு கல்யாணம் பண்ணி பார்க்க உனக்கு ஆசையாயிருந்தா... அதுக்கு முன்னால உனக்கு கல்யாணம் நடக்கணும்.''

''அண்ணா!!''

''ஒரே ஒரு வார்த்தை.. சரின்னு சொல்லு நான் உன் கல்யாணத்தை எப்படி நடத்தறேன் பார்!''

''....!''

''இதுபத்தி நந்தகுமார்கிட்ட பேசட்டுமா?''

''அண்ணா ப்ளீஸ்... அவசரப்படாதீங்க எனக்கு யோசிக்க கொஞ்சம் டைம் கொடுங்க!''



...ந்த வார்த்தையை கூறி முடிப்பதற்குள் நாக்கு ...லர்ந்து போனது.

விடுவிடுவென்று அந்த இடத்தை விட்டு ...கன்றாள்.

உதட்டோரம் புன்னகை மிளிர ...ங்கையையே பார்த்துக் கொண்டிருந்தான் ...ரளி.

'இது சரியா? அபிஷேக்கை சுமந்த ...னதும் உடம்பும் வேறொருவரை ஏற்றுக் ...காள்ளுமா?

எனக்காகவே வாழ்ந்த, வாழந்துக் ...காண்டிருக்கிற அண்ணனுக்கு நான் செய்யும் ...ரிகாரம் என் திருமணமாகத்தான் இருக்கும். ...ண்ணன் தன் முடிவில் உறுதியாய் ...ருக்கிறார். அவரை மாற்றுவது இயலாத ...ரியம். அவருக்காகவாவது நான் இதற்கு ...ம்மதித்து தான் ஆக வேண்டும்.

என் விருப்பம், அபிஷேக்குடன் வாழ்ந்த ...ாழ்க்கை அத்தனையும் இதய மூலையில் ...துக்கி வைத்து விட்டு சம்மதித்துதான் ஆக ...வண்டும்.

அதென்ன.. அண்ணன் என் திருமணம் ...றித்து நந்தகுமாரிடம் பேசுகிறேன் என்கிறார்? ...வர்களிருவரும் என் திருமணம் பற்றி நிறைய ...பசியிருக்கிறார்கள் போலும். நந்தா.. என் ...ண்பன். சிறு வயதிலிருந்தே ஒன்றாக பழகி ...ருபவன். என்னை முழுக்க அறிந்தவன். சமூக ...சவகன். வாழ்க்கையிழந்த பெண்களுக்கு ...ருமணம் என்பது கத்திமேல் நடப்பது மாதிரி. ...ளமாய் தேர்ந்தெடுக்க வேண்டும். நந்தாவை ...ட வேறு யாரும் என் மறுவாழ்க்கைக்கு ...பாருத்தமாய் இருக்க மாட்டார்கள்.

நான் மனம் மாறி விட்டேன். மறுமணம் ...சய்ய சம்மதித்து விட்டேன் என்பதே நந்தாவை ...கிழ்ச்சி கடலில் ஆழ்த்தும். அதை விட, நான் ...வனைத்தான் திருமணம் செய்து கொள்ளப் ...ாகிறேன் என்றறிந்தால் இன்னும் அதிகமாய் ...தோஷப்படுவான். இது குறித்து நானே ...வனிடம் பேச வேண்டும். அண்ணனுக்கு ...கிரம் கல்யாணமாக வேண்டும். லோ.. நான் ...ட்களை கடத்தாமல் உடனடியாக நந்தாவிடம் ...சி விட வேண்டும். அதுதான் நல்லது.' மனம் ...ளிவான ஒரு முடிவிற்கு வந்தது.

கொஞ்சமும் சலிக்காமல் அலை ...ரையை தொட்டு விட்டுச் சென்றது. காற்றில் ...ப்பதம் இருந்தது. அலைபாய்ந்த கூந்தலை ...வ்வப்போது கோதி சமாதானப்படுத்தி ...காண்டிருந்தாள் பவித்ரா. பக்கத்தில் ...குமார்.

கலங்கரை விளக்கின் ஒளி இவர்கள் மேல் பட்டு நகர்ந்தது. நந்தகுமார் திரும்பி அவளை பார்த்தான்.

''என்ன பவி... ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு வரச்சொல்லிட்டு... அரை மணி நேரமா கடலையே வெறிச்சுப் பார்த்துகிட்டிருந்தா என்ன அர்த்தம்?''

''ஏன் நந்தா... அவசரமா வெளியே வேலை இருக்கா?''

''என்னைக்குதான் இல்லாமலிருந்தது? ஏதோ சந்தோஷமான விஷயம் சொல்றேன்னு சொன்னதும் போட்டது போட்டபடி கிளம்பி வந்தாச்சு. ஹோட்டல்ல சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்னாலும் வேண்டாம்னுட்டே! இப்படி மணல்ல உட்கார்ந்திட்டிருக்கிறது அன்ஈஸியா இருக்குது. சரி... என்ன குட் நியூஸ்? சொல்லேன். நீ சொல்லி முடிச்சதும் நானும் ஒரு குட்நியூஸ் சொல்லுவேன்''

''நீங்களுமா? என்ன விஷயம் நந்தா?'' ஆர்வமாய் கேட்டாள்.

''ம்ஹூம்... லேடீஸ் பர்ஸ்ட்''

''ப்ளீஸ் நந்தா''

''நோ நோ... நீதான் முதல்ல சொல்லணும்''

''ப்பா... ரொம்ப பிடிவாதம் நந்தா உனக்கு''

''பேச்சை மாத்தாம... விஷயத்துக்கு வா! என்னை ரொம்ப டென்ஷனாக்காதே. சொல்லு... என்ன விஷயம்?'' இயல்பாய் அவள் தோளில் மெல்ல தட்டினான்.

ஆனால் அவன் கைபட்ட இடம் சிலிர்த்தது.

''நந்தா...''

''சொல்லு பவி''

''நா... நான்... நீ ஆசைப்பட்டபடி, முரளி ஆசைப்பட்டபடி ரீமேரேஜ் பண்ணிக்கலாம்ங்கற முடிவுக்கு வந்துட்டேன்''

''ஈஸிட்?'' ஆச்சரியத்தில் அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

''ஆர் யூ ஹாப்பி நவ்?''

''ரொம்ப... ரொம்பவே'' என்றான் கண்கள் சிரிக்க... அதீத சந்தோஷத்தோடு.

''எனக்குத் தெரியும் நந்தா... நீ சந்தோஷப்படுவேன்னு எனக்குத் தெரியும். நான் நிதானமா யோசிச்சுப் பார்த்தப்ப... என்னை முழுக்க புரிஞ்சுக்கிட்ட நந்தா தவிர வேறு யாராலும் எனக்கு நல்ல வாழ்க்கையை தரமுடியாதுன்னு புரிஞ்சுது''

''ப...வி'' அதிர்ச்சியில் அவன் கை... அவள் கையை தன்னால் விடுவித்தது.

''யெஸ்... நந்தா... உன்னை கல்யாணம் பண்ணிக்க நான் மனப்பூர்வமாய் சம்மதிக்கிறேன். இப்ப உனக்கு சந்தோஷம்தானே?'' வெட்கத்தில் தலை கவிழ்ந்திருந்த பவித்ரா நிமிர்ந்து பார்த்திருந்தால்... அதிர்ச்சியில் வெளிறிப்போன நந்தகுமாரின் முகத்தைப் பார்த்திருப்பாள்.

''பவி... நீ... நீ என்ன சொல்றே?'' குரல் நடுங்கியது.

பவித்ரா அவன் குரலில் வெளிப்பட்ட வித்தியாசம் உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள்.

''நந்தா...'' என்றாள் புரியாமல்.

''என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசறே? நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு முடிவு பண்ணினது சந்தோஷமான விஷயம்தான். ஆனா... என்னைப் போய்''

''நந்தா... என்ன சொல்றீங்க? ஏ... என்னை உங்களுக்கு பிடிக்கலையா?''

''உன்னை பிடிக்கும்ங்கறது வேற விஷயம். ஆனா கல்யாணம்ங்கறது வேற விஷயமில்லையா பவித்ரா?''

''நந்தா...'' என்றாள் உச்ச அதிர்ச்சியோடு.

''உன்னை நான் இப்படி பேச வைக்கிற அளவுக்கு சபலப்படுத்தியிருந்தால் என்னை மன்னிச்சிடு பவித்ரா. உன்னை ரீமேரேஜ் பண்ணிக்க சொன்னேன். ஏன் தெரியுமா? என் தோழி பட்டமரமா நிக்கிறாளேங்கற பரிதாபத்துல. நீ சம்மதிக்கிற பட்சத்துல நானே உனக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசைப் பட்டேனே தவிர, உன்னை இந்த கோணத்திலே ஒரு நாளும் கற்பனை பண்ணிப் பார்த்ததில்லே பவித்ரா''

''.......'' கண்களில் நீர் கோர்த்தது.

''எனக்கென்று ஒரு எதிர்பார்ப்பு இருக்கு பவித்ரா. எனக்கு மனைவியா வரப்போறவ எப்படியெல்லாம் இருக்கணும்னு ரொம்ப கற்பனை பண்ணி வச்சிருக்கேன் பவித்ரா. அவ மனசுல எனக்கு மட்டுமே இடமிருக்கணும். அவ மனசுல இடம்பிடிச்ச முதல் ஆண் நானாக மட்டுமே இருக்கணும். ரொம்ப அழகாயிருக்கணும். அறியாப் பொண்ணா இருக்கணும். நான் சொல்லி பல விஷயங்களை தெரிஞ்சுக்கறவளாயிருக்கணும்''

''.....''

''நான் ஒரு குட்நியூஸ் சொல்றேன்னு சொன்னேனே... அதுகூட என் மேரேஜ் நியூஸ்தான் பவித்ரா...''

''.....''

## ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகும் தங்கப் பதக்கங்கள்!

இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்[டி] ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியி[ல்] நடைபெறுகிறது. விளையாட்[டு] போட்டிகளுக்கான பிரமாண்ட ஏற்பாடு[கள்] செய்யப்பட்டு வருகின்றன. போட்டியி[ல்] வெற்றி பெறும் வீரர்களுக்கு வழங்[கப்] படுவதற்கான தங்கப் பதக்கங்களும் தயாரா[கி] விட்டன. சிட்னியில் உருவான முதல் இரண்[டு] தங்கப் பதக்கங்களை கையில் ஏ[ந்தி] பிடித்திருப்பவர் ஆஸ்திரேலிய வீ[ரர்] டிக்லே-டீ-லா-ஹண்டி.

இவர் சென்ற ஒலிம்பிக் போட்டியில் 7 தங்கப் பதக்கங்களை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வழங்கப்படும் தங்கப் பதக்கங்கள் கான்பெராவில் உள்ள பெர்த் மின்ட், ஆஸ்திரேலியன் மின்ட் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தங்கப் பதக்கங்கள் பெர்த்திலும், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் கான்பெராவிலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

-ராதா செல்வம்.



''மிஸ்டர் வேணுகோபால்... தெரியும்[னு] நினைக்கிறேன். கோயம்புத்தூர் பங்ஷனுக்[கு] ஸ்பான்சர் பண்ணினாரே... அவர்தா[ன்] இன்னைக்கு காலையிலே எனக்கு போ[ன்] பண்ணினார். ஏன் தெரியுமா? அவருக்[கு] என்னை தன் வீட்டு மாப்பிள்ளையாக்[கிக்] கொள்ள ஆசையாம். என் விருப்பம் என்னன்[னு] தெரிஞ்சுக்க விரும்பினாராம். இதுல ஒ[ரு] அழகான ஒற்றுமை என்ன தெரியுமா பவித்ர[ா]? எனக்கும் பிரவீணாவை பார்த்த முத[ல்] பார்வையிலேயே பிடிச்சு போச்சு. அவளை அப்பவிருந்தே நேசிக்க தொடங்கிட்டே[ன்]. இப்ப... பழம் நழுவி பாலில் விழறப்ப... நா[ன்] வேண்டாம்னா சொல்லப் போறேன்? சரின்[னு] சொல்லிட்டேன். இந்த சந்தோஷத்[தை] உன்னோடு பகிர்ந்துக்கணும்னு ஆசை பட்டேன். ஆனா...''

அவனின் ஒவ்வொரு வார்த்தையு[ம்] அவளை பீஸ் பீஸாய் கிழித்தது.

''சாரி... வெரி சாரி நந்தா! நான் இ[ப்ப] பேசினதை எல்லாம் மறந்திடுவோம். எனி[வே] கங்க்ராஜுலேஷன்ஸ். மழை வ[ர்ற] மாதிரியிருக்கு... கிளம்பலாமா?'' எழுந்[து] கொண்டாள் பவித்ரா.

**10**

கட்டிலில் குப்புறப்படுத்து கு[லுங்கி] குமுறி அழுதாள் பவித்ரா.

நந்தா தன்னை உதாசீனப்படுத்தியதோ, அவன் பிரவீணாவை நேசிப்பதோ கூட வேதனை தரவில்லை. 'நீ கைப்பட்ட ரோஜா. அணில் கடித்த பழம். எனக்கு கைப்படாத ரோஜா தான் வேண்டும்' என்று சொல்லாமல் சொன்னானே... அந்த வார்த்தைகள் தான் அவளை சிதைத்தது.

'சே... நான் அவசரப்பட்டு விட்டேன். நான் இதுபற்றி பேசியே இருக்கக் கூடாது. நான் அபிஷேக்கை காதலித்தேனே... ஏன்? அவனிடமிருந்த சில நல்ல குணங்கள் என்னை ஈர்த்ததால் தானே? அதேபோல் நந்தாவும் வருங்கால மனைவி பற்றிய சில கோட்பாடுகளை வரைந்திருக்கிறான். அது எந்த வகையில் தவறு? நான் தான் தவறாய் புரிந்து கொண்டு அவசரப்பட்டு என் மனதில் உள்ளதை கொட்டிவிட்டேன். அவன் மனதில் நானிருக்கிறேன் என்று தப்பாய் எடைபோட்டு விட்டேன்.

அவன் என் நண்பன். அந்த அக்கறையில் என் மறுமணம் குறித்து பேசியிருக்கிறான். அதை அண்ணன் மட்டுமல்ல, நானுமல்லவா வேறுமாதிரி அர்த்தம் பண்ணிக் கொண்டு விட்டேன்? இது எப்பேர்ப்பட்ட அவமானம்? இனி நந்தாவின் முகத்தில் எப்படி விழிப்பேன்?'

தன் மனதை திசை திருப்ப அபிஷேக்கின் போட்டோவை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அவள் வாழ்க்கையில் நுழைந்த வேகத்தில் வெளியேறியவன்.

கம்பீரமான அவளுடைய அபிஷேக் விபத்தில் கூழாகிப் போய் ஒரு பொட்டலமாகத் தான் திரும்பி வந்தான்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே இரண்டு வருடமாயிற்று பவித்ராவிற்கு. இன்று கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து மறுவாழ்க்கைக்கு தயாரான போது எப்பேர்ப்பட்ட அடி? அவமானத்தில் உடல் சிறுத்துப் போனது.

''அண்ணா!''

''என்னம்மா?'' என்றபடி தங்கையை நிமிர்ந்து பார்த்தான் முரளி.

''அண்ணா... உங்க கல்யாணம் உடனே நடக்கணும்''

''அப்ப உன் கல்யாணம்?'' கண்களை இடுக்கி பார்த்தான்.

''பண்ணிக்க றேன். ஆனா, இப்ப வேணாம். கொஞ்ச நாள் போகட்டும். நிச்சயமா பண்ணிக்கறேன்!''

''அதெப்படிம்மா... உனக்கு ஆகாம... நான் பண்ணிக்குவேன்? அதுமட்டும் நடக்காது. நான் நந்தாகிட்டே...''

''அண்ணா ஸ்டாப்பிட்!'' என்று இடைமறித்தாள். ''எதற்காக நந்தா, நந்தான்னு புலம்பறீங்க? நந்தா என் ஃப்ரண்ட். என் வாழ்க்கை மேல, உன்னை மாதிரி அக்கறை கொண்ட ஒரு நபர். தட்ஸால்! அதை அட்வான்டேஜா எடுத்துக்கிட்டு, எனக்கு கணவனாக்க நினைக்கறது நட்புக்கே கேவலம்!''

''ப..வி!''

''நந்தா என் ஃப்ரண்ட் மட்டுமே! அவ்வளவு தான். உங்களுக்காக, நீங்க பார்க்கிற எந்த மாப்பிள்ளையையும் கல்யாணம் பண்ணிக்க தயாரா இருக்கிறேன். நந்தாவை தவிர. இன்னொரு முக்கியமான விஷயம். ஒரு விடோயரா பார்த்தா தேவலை. அப்படிப் பட்டவங்களாலதான் என்னை புரிஞ்சுக்க முடியும். நான்தான் சம்மதிச்சிட்டேனே. நீங்க முதல்ல பண்ணிக்குங்க. எனக்கு அப்புறமா பார்த்துக்கலாம்!''

''இல்லே பவி! நீ இந்தளவிற்காவது மனசு மாறினியே... அதுவே போதும்.

எனக்கென்னம்மா அவசரம்? உன் மனசு மாறுவதற்குள் நான் உனக்கு கல்யாணம் பண்ணி வச்சிடணும். தாங்க்ஸ் பவி! அம்மா... இன்னைக்கு பால்பாயசம் வெச்சிடுங்கம்மா'' என்று இச்சனில் எட்டிப் பார்த்து ரோல்வினிடம் சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டான் முரளி.

அதிர்ச்சியினாலும், ஆத்திரத்தினாலும் பிரவீணாவின் முகம் குப்பென்று சிவந்துப் போயிருந்தது.

வேணுகோபால் எதுவுமே நடவாததுப் போல் தினசரியை பிரித்து அதில் கவனம் பதித்திருந்தார். வசந்தா கணவனின் ஏற்பாட்டில் விருப்பமின்றி, அதை எதிர்க்கவும் துணிவின்றி பொம்மையைப் போல் நின்றிருந்தாள். கணவனைப் பற்றி அவளுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. அவர் முடிவு பண்ணினால் பண்ணினது தான். அதை மாற்ற ஆண்டவனே வந்தாலும் முடியாது.

''டாடி... ஆர் யூ மேட்?'' மூச்சுவாங்க கத்தினாள் பிரவீணா.

''பிரவீணா... என்ன வார்த்தை... அதுவும் யாரைப் பார்த்து கேட்கறே?'' என்றபடி மகளின் தோளைப் பிடித்து உலுக்கினாள் வசந்தா.

''பின்னே என்னம்மா? என்னைக் கேக்காம அதெப்படி கல்யாண ஏற்பாடு பண்ணலாம்?''

வேணுகோபால் எழுந்து அவளருகில் வந்தார்.

''ஏம்மா... கல்யாண ஏற்பாடுதானே பண்ணிட்டிருக்கேன்? கல்யாணமே பண்ணிடலையே! இப்ப என்ன... உன்னை கேக்காம ஏற்பாடு பண்றோமேன்னுதானே கோபம்? அதான் இப்ப சொல்லிட்டேனே... அடுத்த மாசம் உனக்கும், நந்தகுமாருக்கும் கல்யாணம். போதுமா?''

''டாடி... நீங்க பண்றது அநியாயம்னு உங்களுக்கே தெரியலே? எல்லாம் மூடி மறைச்சு கடைசி நேரத்திலே சொல்றீங்க... படிக்கற பாமரப் பெண்ணிடம் கூட உனக்கு மாப்பிள்ளைய பிடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்பாங்க! என்னைக் கேட்டீங்களா?''

''கேட்டிருக்கலாம்... பட், பிடிக்கலேப்பான்னு பதில் சொல்லுவே! ஸோ, கேட்கலே!''

''புரியுதுல்லே? எனக்கு இந்த கல்யாணத்துலே இஷ்டமில்லே... அந்த நந்தகுமாரைப் பிடிக்கலே...''

''ஏன்?''

''பிடிக்கலே... அவ்வளவுதான்!''

''அவ்வளவே தானா பிரவீணா? ஏன் பிடிக்கலேன்னு காரணத்தை நான் சொல்லட்டுமா?''

''டா...டி!''

''காரணம்... சதீஷ்! ஆம் ஐ கரெக்ட்?''

''டா...டி!'' நிஜமாய் பிரவீணா இதை எதிர்பார்க்கவில்லை. 'டாடிக்கு எப்படி தெரிந்தது?'

''யாருங்க சதீஷ்?'' பதற்றமாய் கேட்டாள் வசந்தா.

''உன் பொண்ணோட காதலன்!''

''ஐயோ... பிரவீணா... அப்பா சொல்றது உண்மையா?''

''ஆமாம்...!'' என்றாள் ஒரு முடிவுக்கு வந்தவளாய்.

''இதையெல்லாம் ஏங்க... எனக்கு முன்னாடியே சொல்லலே?''

''சொல்லியிருந்தா... ஆர்ப்பாட்டம் பண்ணியிருப்பே. அதனால சொல்லலே. பிரவீணாவை ஒரு பையனோட நானே என் கண்ணால பார்த்தப்ப... ஷாக்காயிட்டேன். விசாரிச்சப் பார்த்தேன். ரொம்ப மோசமான பையன்னு தெரிஞ்சுக்கிட்டேன்...''

''டாடி... சதீஷ்... ரொம்ப நல்லவர்!''

''பேசாதே! அவன் உனக்கு தன்னோட முகத்துல ஒரு பக்கத்தை மட்டும் தான் காட்டியிருக்கிறான். அவனோட இன்னொரு பக்கம் ரொம்ப அசிங்கமானது பிரவீணா!''

''ரெண்டு வருஷமா சதீஷோட பழகற எனக்கு தெரியாத உண்மை உங்களுக்கு மட்டும் தெரிஞ்சிடுச்சா? நீங்க பார்த்திருக்கிற நந்தகுமார் மட்டும் ரொம்ப நல்லவர்னு எப்படி நம்பறீங்க? நான் சொல்றேன்... நந்தகுமார் கெட்டவன்னு...''

வேணுகோபால் வாய்விட்டு சிரித்தார்.

''ஏம்மா... நான் பெத்த ஒரே பொண்ணை கல்யாணம் பண்ணி தர்றப்ப... விசாரிக்கமலா பண்ணுவேன்? சதீஷ் நல்லவனாயிருந்தா நிச்சயமா அவனைத் தான் உனக்கு கல்யாணம் பண்ணி வைப்பேன். அவன் மோசமானவன் பிரவீணா! நந்தகுமார் ரொம்ப நல்ல பையன். அவனோட ஆசிரியர் பூவை. ?ாலறிவன் என் நெருங்கிய நண்பர். தன் மாணவனைப் பற்றி அவர் புகழ்ந்து பேசியபோது எனக்கே நந்தகுமார் மீது பொறாமை ஏற்பட்டதுன்னா பார்த்துக்க! உனக்கு பொருத்தமான நப நந்தகுமார்தான். என் சொத்துக்கு வாரிசும் அவர்தான்னு நான் முடிவு பண்ணியாச்சு!''

''நோ... நான் சதீஷை தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்'' அலறினாள்.

''நான் சொல்றதை நீ கேட்டு தான் ஆகணும். வேறு வழியில்லே. நான் நல்லவன். ஆனால், தீயவனை கண்டால் பொல்லாதவனாயிடுவேன். என் பேச்சை கேட்காம மீறி நடந்தால்... சதீஷை மட்டுமல்ல... மகள்னு கூட பார்க்காம உன்னையும் கொன்னுட்டு ஜெயிலுக்கு போகவும் தயங்க மாட்டேன்.''

''டா...டி!!''

''ஒரு கெட்டவனுக்கு மனைவியா என் மகளை நான் பார்க்க விரும்பலை. பழகினவனை மறக்கறது கொஞ்சம் சிரமமாக தான் இருக்கும். வேற வழியில்லே... நீ மறந்து தான் ஆகணும். உன் டாடியப்பத்தி உனக்கு நல்லாவேத் தெரியும். செய்யாத எதையும் சொல்ல மாட்டேன். அந்த சதீஷ் உயிரோட இருக்கணும்னா... உனக்கும் நந்தகுமாருக்கும் கல்யாணம் நடந்தாகணும். ஓக்கே?'' என்று கூறிவிட்டு எழுந்துப் போனார்.

அவரை பயத்துடன் வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள் பிரவீணா.

வசந்தா கைகளை பிசைந்துக் கொண்டிருந்தாள்.

சதீஷ் ஜன்னலையே வெறித்து பார்த்திருக்க... பிரவீணா... தலை கவிழ்ந்து அழுது கொண்டிருந்தாள்.

''இப்ப என்ன பண்றது பிரவீணா?'' என்றான் கவலையுடன்.

''எனக்கு ஒண்ணுமே புரியலே சதீஷ். ஐ லவ் யூ! பட், நம்ம கல்யாணம் நடக்க சான்ஸே இல்லை!''

''நாம எங்கேயாவது ஓடிப் போய்டலாமா?''

''எங்கப்பாவை பத்தி உனக்குத் தெரியாது சதீஷ். நம்மளை கொல்லாம விடமாட்டார். உனக்கும் நிரந்தர வேலையில்லே. நாம ஓடிப்போனாலும் மறுபடி ஒரு வேலைய தேடிக்கறது ரொம்ப கஷ்டம் சதீஷ்! தவிர உனக்கும் அம்மா, அப்பா, சொந்தக்காரங்கன்னு யாருமே இல்லே... நம்மளை தாங்கறதுக்கு? எந்த நம்பிக்கையிலே போக முடியும்?''

அவள் அப்படி கேட்டதும் ஒன்றும் பேசாமல் எழுந்து சென்று ஜன்னலருகே நின்று கொண்டான்.

''சதீஷ்... ஏன் ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?''

''நீயும்... மாறிட்டே பிரவீண்!''

''என்னை தப்பா புரிஞ்சுக்காதே! நான் பிராக்டிகலா யோசிக்கிறேன்!''

''காதல்ல நம்மளை பத்தி மட்டும் தான் யோசிக்கணும். மத்ததை யோசிக்கக் கூடாது. உனக்கு என்மேல நம்பிக்கை இல்லே.. நான் உன்னை காப்பாத்த மாட்டேனா ப்ரவீண்?''

''இல்லே... சதீஷ்... ஐ நோ அபவுட் மை சதீஷ்! என் காதலுக்காக உன் உயிரை பலி கொடுக்க என் மனசு இடங்கொடுக்கலே சதீஷ்! நீ உயிரோட இருக்கணும். எங்காவது ஒரு மூலையில் என் சதீஷ் உயிரோட இருக்கான்ற சந்தோஷம் போதும்!''

''எனக்கு போதாது ப்ரவீண். எனக்கு நீ வேணும். சடார்னு பிரிஞ்சு போறதுக்கா உன்னை நான் காதலிச்சேன். சொல்லு ப்ரவீண்!'' அவள் தோளை அழுத்தி உலுக்கினான்.

''இல்லே சதீஷ்! இப்பவும் எப்பவும் என் மனசிலே நீ தான் இருக்கறே... இருப்பே! நான் ஒரு முடிவோட தான் வந்திருக்கிறேன். என் டாடி நம்மளை ஒரேயடியா பிரிச்சிட்டதா நினைச்சி ஆர்ப்பரிச்சிட்டிருக்கார். ஆனா, முதமுதலா என் மனசுல இடம் தந்தது உனக்கு தான் சதீஷ்...'' என்றாள் பிரவீணா.

## 11

மதுரம் மருமகளை பார்த்து பார்த்து பூரித்துப் போனாள்.

அவள் நினைத்தேப் பார்த்திராத பெரிய இடத்து சம்மந்தமாயிற்றே? கோடிக்கணக்கில் சொத்து. அந்த சொத்திற்கு ஒரே வாரிசு. இனி அவற்றிற்கெல்லாம் சொந்தக்காரன் நந்தகுமார் தான். அவன் நல்ல மனசுக்கு ஏத்த மாதிரி நல்ல வாழ்க்கை அமைந்திருக்கிறது. பெண்ணும் அவனுக்கேற்ற மாதிரி ரதிதேவி மாதிரி இருக்கிறாள். நல்லவேளை நான் பயந்ததுப்போல் அந்த பவித்ராவுக்கு வாழ்க்கை தருகிறேன் பேர்வழி என்று அசட்டுத்தனமாய் எதையும் பண்ணிடவில்லை. அதுவரைக்கும் நிம்மதி என்று பெருமூச்சு விட்டாள் மதுரம்.

வீடு கொள்ளாமல் சீர்வரிசை சாமான்கள் இறைந்து கிடந்தன. அதை வைக்க அந்த வீடு போதவில்லை.

பிரவீணா திருமணமானதிலிருந்தே நந்தகுமாரிடம் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

'சரி... பயம் போலும்' என்று அவனும் தொந்தரவு செய்யவில்லை. நம் வீட்டுக்குப்

போல் பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியாய் இருந்து விட்டான்.

திருமணமாகி ஒரு நாளைக்கு மேல் கோவையில் தங்க விடவில்லை வேணுகோபால். அசம்பாவிதமாய் எதும் ஆகிவிடக் கூடாதே என்கிற கவலை அவருக்கு. மறுநாளே மணமக்களை சென்னைக்கு அனுப்பி வைத்து விட்டார். மருமகனுக்கு அன்பளிப்பாக புத்தம் புதிய வெளிநாட்டு செல்ரோலட் கார் வாங்கிக் கொடுத்திருந்தார்.

அதில்தான் தன் புது மனைவியை சென்னைக்கு அழைத்து வந்தான்.

திருமணம் கோவையில் நடந்தது. பவித்ரா அதில் கலந்து கொள்ளவில்லை. முரளியை மட்டும் அனுப்பி வைத்திருந்தாள்.

முரளிக்கு பவித்ராவின் வேதனை அப்பிய முகம் கலக்கத்தை உண்டு பண்ணியது. லேசுபாசாய் புரியவும் செய்தது. தங்கைக்காக வருந்துவதை தவிர அந்த அண்ணனால் வேறென்ன செய்ய முடியும்? விரைவில் அவளுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வைக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

அன்றைய சம்பவத்திற்கு பிறகு பவித்ரா நந்தகுமாரை பார்ப்பதையே தவிர்த்தாள். அறையை விட்டு எங்கும் செல்வதில்லை.

நந்தகுமார்தான் போன் பண்ணினான்.

''என்ன பவி... நடந்ததையே நினைச்சிட்டிருக்கியா? கமான்.. சியர் அப்! எல்லாத்தையும் மறந்திடு. நானே உனக்கு நல்ல பையனாப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன். அடுத்த வாரம் எனக்கு கோயம்புத்தூர்ல கல்யாணம். கல்யாண வேலை ஏகப்பட்டது இருக்கு. நீயும் கொஞ்சம் கூடமாட ஹெல்ப் பண்ணினா சந்தோஷப்படுவேன் அல்லவா?'' என்றான்.

''சாரி... நந்தா... கொஞ்சம் உடம்புக்கு முடியல.. உனக்கு எந்தளவிற்கு உதவ முடியும்னு தோணலே!''

''ஓக்கே.. நீ இன்னும் மறக்கலே... அப்படித்தானே? இட்ஸ் ஓக்கே! கல்யாணத்துக்காவது கண்டிப்பா வரணும் பவி!''

''ஷ்யூர்!'' என்றாள்.

ஆனால், அவளால் போக முடியவில்லை. அவனை வேறொரு பெண்ணின் கணவனாய் பார்க்க மனதில் துணிவில்லாமல் அல்ல. அவன் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு கொண்டுதான் செல்லவில்லை.

நந்தகுமாரின் வீட்டு முன் கார் வந்து நிற்கும் சப்தமும், அதைத் தொடர்ந்து பட்டாசு வெடிக்கும் சப்தமும் கேட்க.. பால்கனிக்கு வந்து எட்டிப் பார்த்தாள் பவித்ரா.

மணமக்கள் இருவரும் காரை விட்டு இறங்கினர். ஜோடிப் பொருத்தம் அமர்க்களமாய் இருப்பதாய் கருதிய பவித்ராவின் இதழில் புன்னகை பிறந்தது.

எதேச்சையாக திரும்பி இவளைப் பார்த்தான் நந்தகுமார்.

பவித்ரா மெல்ல முறுவலித்தாள்.

'என் கல்யாணத்துக்கு வராம ஏமாத்திட்டேயில்லே? இரு உன்னை கவனிச்சுக்கறேன்' என்பது போல் தலையாட்டியதை மதுரம் கவனித்து விட்டாள்.

'இருவருக்கும் சைகையில் என்ன பேச்சு வேண்டி கிடக்கு? ஆமாம். அவ ஏன் கல்யாணத்துக்கு வரலே?' பெண்ணின் இயல்பான சந்தேக குணம் மதுரத்திற்குள்ளும் எழுந்தது.

'சரி.. அவ வந்தா என்ன? வராமல் போனா என்ன? நாம நினைச்சபடி கல்யாணம் நடந்து முடிந்ததே! அது போதும்!'

அன்று முதலிரவு!

நந்தகுமாரின் அறை அமர்க்களமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நெஞ்சு படபடக்க பிரவீணாவின் வருகைக்காக காத்திருந்தான்.

அவனை வெகுநேரம் காக்க வைக்காமல் ஆண்டாண்டு காலமாய் பெண்கள் பின்பற்றி வரும் அதே சாஸ்திர சம்பிரதாயத்தோடு, பால்



செம்புடன் நுழைந்தாள்.

புடவை கட்டி பழக்கமில்லாததால்.. கால் தடுக்கி தடுமாறியவளை சட்டென பிடித்துக் கொண்டான். அவன் கைப்பட்ட இடம் எரிந்தது.

பிரவீணா தன்னை விடுவித்துக் கொண்டாள்.

''ஏன் பிரவீணா... நெர்வஸாயிருக்கே?''

''..........''

''ஒன்னுமே பேச மாட்டேங்கிறே? முதமுதலா பார்த்த பிரவீணாவுக்கும், இப்ப உள்ள பிரவீணாவுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு.''

''..........''

''ஏய்.. இங்கே பார்... வெக்கமாயிருக்கா?'' அவள் தோளில் கை போட்டு அணைத்தான்.

''வி.. விடுங்க வேண்டாம்!'' தடுத்தாள்.

''ப்ரவீண்... என்னைப் பார்... என்னை பிடிச்சிருக்கா? உன்னை 'எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!''

''..........''

''அம்மாடி உன்னை வழிக்கு கொண்டு வரவே ஒரு வருஷம் ஆகும் போலிருக்கே?'' என்று செல்லமாய் கோபித்துக் கொண்டவன், ''எதையாவது பேசு ப்ரவீண்'' என்றான்.

பிரவீணா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''ம்... பேசுடா... முதமுதலா என்னை பார்த்தப்ப உனக்கு என்ன தோணிச்சி?''

''நீங்க ரொம்ப நல்லவர்னு...'' என்று வாயைத் திறந்தாள்.

''ஒரு வழியா பேச ஆரம்பிச்சிட்டே! அப்புறம்?''

''பிரமிப்பா இருந்தது. சோஷியல் வொர்க்கெல்லாம் பண்றாரே... இதையெல்லாம் பண்ண நல்ல மனசு வேணும்.. அப்புறம்...''

''ம்... சொல்லு!'' ஆசை மனைவியின் வாயால் அவனைப் பற்றிய புகழ்ச்சி வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருக்க அவனுக்கு ஆனந்தமாயிருந்தது.

''இல்லை வேண்டாம்... சொன்னால் தப்பாய் நினைத்து விடுவீர்கள்!''

''உன்னையா? நானா? நெவர்... எதுவாயிருந்தாலும் சொல்லு!''

''பல விதவைப் பெண்களுக்கு வாழ்க்கையளிக்க செய்த நீங்கள் ஏன் எல்லோருக்கும் முன்மாதிரியாய் ஒரு விதவையை கல்யாணம் செய்திருக்கக் கூடாது என்று தோன்றியது!'' பிரவீணா ஓரக்கண்ணால் அவன் முகத்தை கவனித்தாள்.

நிஜமாகவே நந்தகுமார் முகத்தில் அசடு வழிந்தது.

''அது... அது... வந்து!''

''நான் சொல்லட்டுமா? உங்களுக்கு என்னை ரொம்ப பிடிச்சு போச்சு! ரெண்டாவது, என்னதான் புரட்சி, சமூக சேவைன்னு ஆண்கள் மைக்கை பிடிச்சுக்கிட்டு வாய்கிழிய கத்தினாலும் தனக்கு வரப்போறவ ப்ரஷ்ஷா.. எந்த ஆணோட சுவாசமும் பட்டிருக்காத பெண் தான் மனைவியா வரணும்னு எதிர்பார்க்கிறாங்க இல்லே?''

''அப்படியில்லே ப்ரவீண்...'' என்றானே தவிர, அதற்கு மேல் என்ன பேசுவது என்று புரியாமல் தடுமாறினான்.

''இட்ஸ் ஓக்கே! நான் உங்களை ஒன்னும் தப்பா நினைக்கலே! எந்த ஆணோட காற்றும் படாத என்னை உங்க மனைவியா ஆக்கிகிட்டீங்களே.. உங்களுக்கு இப்ப சந்தோஷம்தானே?'' வார்த்தையில் வேறொரு அர்த்தம் ஒளித்து வைத்து, கண்களில் குறும்பு மின்ன... அவன் கை மேல் தன் கையை வைத்தாள்.

அந்த தொடுகை போதுமே! சட்டென அவள் கையைப் பற்றி இழுத்து அணைத்துக் கொண்டான்.

பிரவீணா எதிர்க்கவில்லை.

கண்களை மூடிக் கொண்டாள்.

## 12

''சாரி... பிரவீணா! என்னால உங்க கல்யாணத்திலே கலந்துக்க முடியலே... இந்தா... இது என்னோட சிறிய பரிசு!'' என்று அவளிடம் ஒரு பேழையை தந்தாள் பவித்ரா.

''அதை வாங்காதே ப்ரவீண்! யார் வருகிறார்களோ இல்லையோ, உன்னை ரொம்ப எதிர்பார்த்தேன்... ஏமாற்றி விட்டாயே!'' என்றான் எங்கோ பார்த்தபடி நந்தகுமார்.

பவித்ராவுக்கு அவனை நிமிர்ந்து பார்க்கவே அச்சமாக இருந்தது.

அவனுடைய பேச்சு, அவளுடைய தவிப்பு, பிரவீணாவுக்குள் ஆயிரம் கேள்விகளை பிறக்க வைத்தது.

'ஓஹோ... கதை அப்படிப் போகிறதா? இவள் சீதையுமல்ல, இவன் ராமனுமல்ல.'

பிரவீணா பவித்ராவிடம் இன்னும் நெருங்கி வந்தாள்.

''அவரோட ஊர் ஊராப் போய் எல்லாருக்கும் கல்யாணம் பண்ணி வச்சீங்களே... அதெப்படி, அவர் கல்யாணத்துக்கு மட்டும் வராம போனீங்க?'' சிரித்தபடி கேட்டாள்.

அவள் இயல்பாய் கேட்பதுபோல் தோன்றவில்லை. பவித்ரா பதில் சொல்ல திணறினாள்.

''நி... நிஜமாகவே எனக்கு உடம்புக்கு முடியாமல் போய் விட்டது... அதனால தான்...''

''மனசை கஷ்டப்படுத்தாம வச்சுக்குங்க... அப்பதான் உடம்பு படுத்தாம இருக்கும்!''

''சரி... சரி... மறப்போம், மன்னிப்போம். பவித்ராவுக்கு ஸ்வீட் கொண்டு வந்து கொடு ப்ரவீண்!'' என்றான் இடைமறித்து நந்தகுமார்.

''சரி... நீங்க பேசிட்டிருங்க!'' என்று அகன்றாள்.

''நான் உன் மனசை கஷ்டப்படுத்திட்டேனா பவி?''

''ப்ளீஸ்... அதை நான் அப்போதே மறந்துட்டேன். எதுக்காக இப்படியெல்லாம் பேசறே?''

''நீ கல்யாணத்துக்கு வராதது எனக்கு ரொம்ப ஏமாற்றம் பவி!''

''பாஸ்ட் இஸ் பாஸ்ட்! நம்மளோட அடுத்த ப்ரோக்ராம் எப்போது?''

''வெல்!'' என்று சந்தோஷப்பட்டான்.

''இப்பதான் நீ பழைய பவி! அடுத்த மாசம் வச்சிருக்கேன். சென்னையிலே தான். இங்கேயும் யாராவது தொழிலதிபரை அணுகி ஸ்பான்சர் பிடிக்கணும்!''

''நீ அலைய வேண்டாம் நந்து... இப்பதான் புதுசா கல்யாணமானவங்க. என்ஜாய் பண்ணுங்க. ஸ்பான்சர் பிடிக்கற வேலையிலேர்ந்து... மண்டபம் அரேன்ஜ் பண்றவரைக்கும் நானே பார்த்துக்கறேன். ஓக்கே!''

''தாங்க்ஸ் பவி!'' என்றான் தலைசாய்த்து அவளை நன்றியுணர்வுடன் பார்த்து.

அவர்களிருவரும் தனிமையில் பேசிக் கொண்டிருப்பதை பார்த்த மதுரத்தின் நெஞ்சு தீயாய் எரிந்தது.

'விடக்கூடாது... இவளை இப்படியே விடக்கூடாது.'

''ப்ரவீண்... உனக்கு என்னை மாதிரி சோஷியல் ஒர்க்லே இன்ட்ரஸ்ட் உண்டா?''

''ஏன் கேட்கறீங்க?''

''இல்லை... நீயும் என்னோட சேர்ந்து வேலை செய்யணும்னு ஆசைப்படறேன்!''

''சாரி... என்னால முடியாது... அதுக்குதான் பவித்ரா இருக்காளே... அப்புறமென்ன?''

''அவளை விடு! நீ என் மனைவி! நீயும் என்னோட சேர்ந்து ஈடுபட்டா... இன்னும் நல்ல பேர் கிடைக்கும்!''

''அப்ப... பேரும் புகழும் கிடைக்கதான் இதை எல்லாம் பண்றீங்களா?''

''அ... அப்படியெல்லாம் ஒன்னுமில்லே''

அவன் திணறலை ரசித்தாள்.

''பாருங்க... நான் சுதந்திரப் பறவையா இருக்க ஆசைப்படறேன். எனக்கு இந்த பேரு, புகழ் எதுவும் வேணாம். உங்க வேலைய நீங்க பாருங்க. என் வேலைய நான் பார்த்துக்கறேன். அப்புறம் இந்த வீடு ரொம்ப சின்னதாயிருக்கு. வேற வீடு பாருங்க. இன்னொரு விஷயம்... என்னால வர்றவங்க போறவங்களுக்கெல்லாம் காபி, டீன்னு பரிமாறிக்கிட்டிருக்க முடியாது. அந்த வேலைய உங்கம்மாவை செய்ய சொல்லுங்க... இல்லேன்னா... கூட ரெண்டு வேலைக்காரிய சேர்த்திடுங்க!'' நகத்தை நெய்ல் கட்டரால் ஷேப் பண்ணிக் கொண்டே சொன்னாள் பிரவீணா.

உறைந்துப் போய் விட்டான் நந்தகுமார்.

கசங்கிய துணிபோல் கட்டிலில் சுருண்டு கிடந்தாள் பிரவீணா. நந்தகுமார் அவள் பக்கத்தில் அமர்ந்து தலையை வருடிக் கொண்டிருந்தான்.

''இப்ப எப்படி இருக்கு ப்ரவீண்?''

''உவ்வே...'' மறுபடி அடிவயிறிலிருந்து குமட்டிக் கொண்டு வந்தது.

வேறொன்றுமில்லை. காலை எழுந்தது முதலே வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். டாக்டரை வரவழைத்து பார்த்தபோது... சந்தோஷமான விஷயமென்று தெரிந்தது. பிரவீணா உண்டாகி இருந்தாள்.

நந்தகுமார் மனைவியை ஒரு சுற்று சுற்றிவிட்டு தான் தரையில் இறக்கினான். மதுரத்திற்கு சொல்லவே வேண்டாம். மகிழ்ச்சியில் கண்ணீர் வடித்தாள்.

பிரவீணாவிற்கு எரிச்சலாய் இருந்தது.

பிடிக்காத கல்யாணம், பிடிக்காத கணவன், பிடிக்காத கர்ப்பம். போதாதற்கு தொடர்ந்து வாந்தி வேறு... அவள் கோபத்தை கிளறி விட்டது.

'யார் கேட்டது இந்த சனியனை? இவனுடன் கொஞ்சி குலாவி சந்தோஷமாய் வாழ்ந்து விட்டேன் என்று உருவாகி விட்டதா?'

'சதீஷ்... மை டியர் சதீஷ்... உன்னுடைய ப்ரவீண் யாரோ ஒரு நந்தகுமாருடைய குழந்தையை சுமந்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு அருவறுப்பாய் இருக்கிறது சதீஷ். இதை அறிந்தால் நீ எவ்வளவு வேதனைப்படுவாய்? எனக்கு இங்கிருக்க பிடிக்கவில்லை அப்பாவின் சொத்து சுகம்... எதுவும் வேண்டாம். நீ வேண்டும்... எனக்கு நீ மட்டுமே வேண்டும்'



"என் டல்லாயிருக்கே? உங்கம்மா அப்பாவை பார்க்கணும் போலிருக்கா? நான் போன் பண்ணி இருக்கிறேன். கிளம்பிட்டாங்க... இப்ப வந்துடுவாங்க!"

"உவ்வே!" மறுபடி குமட்ட, சட்டென இரு கை நீட்டி அவள் வாந்தியை ஏந்திக் கொண்டான் நந்தகுமார்.

'பணம்... என்னுடைய கோடிக்கணக்கான பணம் பண்ணுகிற வேலையிது? கைகளில் வாந்தி மட்டுமா... எல்லாவற்றையும் தான் ஏந்துவாய்!' மனதிற்குள் கேவலமாய் அவனைப் பற்றி எண்ணிக் கொண்டாள்.



"இந்தா கண்ணு... ரொம்ப களைச்சிப்போயிட்டே! இந்த ஆரஞ்சு ஜூஸ் குடிச்சிடும்மா!" மதுரம் லொங்கு லொங்கு என்று மாடியேறி வந்து மருமகளுக்கு ஜூஸ் கொடுத்தாள்.

"இப்படி கொடும்மா... நான் தர்றேன்!" என்று டம்ளரை வாங்கிக் கொண்டவன், பிரவீணாவை தன் தோள் மீது சாய்த்துக் கொள்ள முயன்றான்.

"ப்ச்... விடுங்க!" திமிறினாள்.

"கொஞ்சநேரம் சும்மாயிரு!" என்று அதட்டியவன் வலுக்கட்டாயமாய் இழுத்து சாய்த்துக் கொண்டு புகட்டினான்.

வேறு வழியின்றி குடித்தவளுக்கு, இதே போல் ஒரு முறை சதீஷின் மார்பில் சாய்ந்து கொண்டு ஒரு கோன் ஐஸை இரண்டு பேரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த நினைவுதான் எழுந்தது.

பிரவீணாவின் கண்கள் கலங்கின.

அதைக் கண்ட நந்தகுமார் நெகிழ்ந்துப் போனான். தான் அவளுக்கு செய்யும் பணிவிடையில் நெக்குருகி போய்... கலங்குகிறாள் என்று யூகித்துக் கொண்டவன்... அவளே எதிர்பாராத விதமாக மேலும் அவளை இறுக்கி கன்னத்திலும் நெற்றியிலும் இதழ் பதித்தான்.

மதுரம் அதற்குமேல் அங்கிருக்க பைத்தியக்காரியா என்ன? வெட்கப்பட்டு கொண்டே வெளியேறினாள்.

"என்ன இது?" முகத்தில் சினம் பரவ நகர்ந்து அமர்ந்தாள்.

"ஏன்... அம்மா இருக்காங்கன்னு வெட்கமா? அவங்க போயிட்டாங்க!"

## பச்சை குத்தலியோ?

**நம் நாட்டில் தோன்றிய பச்சை குத்தும் பழக்கம், கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. ஆனால் இதையே செயற்கை முறையில் ஸ்டிக்கர் போல தயாரித்து உடம்பின் பாகங்களில் பொறித்து தங்களை அழகு படுத்திக் கொள்கின்றனர் ஐரோப்பிய பெண்கள். தண்ணீர்விட்டு தேய்த்தால் கலைந்துவிடும் இந்த செயற்கை பச்சை குத்தும் முறை விலையும் குறைவானது, ஆபத்தும் இல்லாதது.**

-பாரீஸ் பார்த்தசாரதி.

"கடவுளே!" என்று தலையில் கைவைத்து கொண்டாள்.

"என்னடா... தலை வலிக்குதா?"

"ப்ளீஸ்... லீவ் மீ அலோன்!"

"ம்ஹூம்... இனி உன்னை விட்டு ஒரு நிமிஷம் கூட இப்படி அப்படி நகர மாட்டேன். உன்னை என் கண்ணுக்குள்ளே வச்சு காப்பாத்துவேன். என் குழந்தைய சுமக்கறீயே... நான் உன்னை எப்படி கவனிச்சுக்கணும்? நம்ம குழந்தைய நல்லா படிக்க வச்சு... ஒரு பைலட்டா உருவாக்கணும் ப்ரவீண். எனக்கு குழந்தைகள்னா... ரொம்ப பிடிக்கும். அட்லீஸ்ட் ஏழெட்டு குழந்தையாவது நீ பெத்துத் தரணும்... ஓக்கே?"

'ஏழெட்டா? இந்த குழ்ந்தையாவது முழுசா உன் கைக்கு கிடைக்குதா பார்! என் காதல் சிதைஞ்சு போக காரணமாயிருந்த உன்னை பழிவாங்க இது தான் சந்தர்ப்பம். உன் குழந்தைய சிதைக்கிறேனா... இல்லையா பார்!' கறுவிக் கொண்டாள் பிரவீணா.

நந்தகுமாரிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டுமென்பதற்காக... விறுவிறுவென மாடி நோக்கி படிகளில் ஏறிக் கொண்டிருந்தாள் பவித்ரா.


"கொஞ்சம் நில்லு பவித்ரா!" மதுரத்தின் குரல் கணீரென்று, அதே சமயம் கொஞ்சம் கடினமாகவும் ஒலித்தது.

"என்னம்மா?"

"நீ படிச்சவதானே? கல்யாணமானவ தானே? கொஞ்சமாவது இங்கிதமிருக்கா? புதுசா கல்யாணமானவங்க... நேரம் காலம்னு இல்லாம இப்படி அப்படின்னு சந்தோஷமாயிருப்பாங்கன்னு



தெரியாதா? நீ பாட்டுக்கு ஜிங்கு ஜிங்குன்னு மாடியேறிப் போறே? புருஷனை இழந்த பொண்ணு மாதிரியா தெரியறே? உடம்பு தெரியற மாதிரி மெல்லிசா புடவை கட்டறதுக்கு பேசாம கழற்றி எறிஞ்சிட்டு திரியலாம். உனக்கும் சின்ன வயசு. என் பிள்ளைக் கும் சின்ன வயசு. செக்குமாடு மாதிரி பல காரணங்களை வச்சுக்கிட்டு அவனை சுத்தி சுத்தி வர்றது எனக்கு பிடிக்கலே பவித்ரா. கரைப்பார் கரைச்சா கல்லும் கரையும்ங்கற மாதிரி என் பிள்ளைய கரைச்சிடாதே!"



"அம்மா!" என்றலறினாள்.

"உன் மனசுக்குள்ளே ஒண்ணுமில்லேன்னு சொன்னாலும்... எனக்கு தெரியும்டி ஒரு பொம்பளையோட மனசு! உனக்கும் சின்ன வயசுதான். மனசை அலையவிடாம... . ரெண்டாந்தாரமோ, மூணாந்தாரமோ, யாரையாவது பார்த்து கல்யாணம் பண்ணிக்க. உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன் தாயி... இனி இங்கே வராதே!" பட்டென கைசேர்த்து கும்பிட்டாள்.

பவித்ரா தன் கன்னத்தில் அறைபட்ட உணர்வில் துடித்துப் போய் விட்டாள்.

## 13

ஆட்டோவை விட்டிறங்கிய பிரவீணா தொய்ந்து போய் நடந்து வந்தாள்.

அவள் வருவதைப் பார்த்ததும் மதுரமும், நந்தகுமாரும் அவளை நோக்கி விரைந்து வந்தனர்.

"எங்கேம்மா போயிட்டு வர்றே?" கேட்டாள் மதுரம்.

"ப்ரண்ட் வீட்டுக்கு"

"சரி... போறப்ப அம்மாகிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிருக்கலாமில்லே? திடீர்னு உன்னை காணலேன்னதும் பதறிப்போய் எனக்கு போன் பண்ணி வரவழைச்சு... பயங்கர டென்ஷனாயிடுச்சு"

"இல்லே... தெரியாமதான் கேக்கறேன். நான் என்ன சின்னக்குழந்தையா? எனக்கு தனியா போயிட்டு வரத் தெரியாதா?"

"ஏன் கண்ணு கோபப்படறே? இந்த ஊரு உனக்கு பழக்கமில்லே. அதான் கேட்டோம். தவிர இப்ப நீ உண்டாகியிருக்கே... இந்த நேரத்திலே ஆட்டோவுல எல்லாம் போகக்கூடாது. நந்தாகிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா... அவன் கார்லேயே கூட்டிகிட்டு போயிருப்பானேம்மா"

"எது? எங்கப்பா வாங்கிக் கொடுத்த செவ்ரோலட் கார்லதானே? எங்க வீட்லே பத்து பனிரெண்டு கார் இருக்கு. எனக்கு கார் சவாரி எல்லாம் அலுத்துப்போன விஷயம். ஸோ, ஆட்டோவுல போக ஆசையாயிருந்தது. அதான் போனேன். ஸோ வாட்?" என்று தோள்களை குலுக்கியபடி உள்ளே சென்றாள் பிரவீணா.

மதுரம் மருமகளை அகன்ற விழிகளோடு திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நந்தகுமார் சங்கடத்துடன் கைகளை பிசைந்தான்.

"நந்தா... என்னப்பா இவ... இப்படி பேசிட்டுப் போறா?"

''வீட்டுக்கு ஒரே பொண்ணு. செல்லமா வளர்ந்துட்டா. வெகுளித்தனமா பேசிடறா. அது நமக்கு விதண்டாவாதமா தெரியுது. இதையெல்லாம் பெரிசு பண்ணிக்காதேம்மா.''

''அதானே... ஒன்னுமில்லாதது களெல்லாம் தையா தக்கான்னு குதிக்கறப்ப... பணத்தாலேயே குளிச்சு வளர்ந்த என் மருமக... இந்தளவுக்கூட பேசலேன்னா... அவ பணக்காரியா பொறந்ததுக்கே அர்த்தமில்லையே. பேசட்டும்... பேசட்டும். வெளியே போய்ட்டு களைச்சி போய் வந்திருக்கா... நான் ஜூஸ் போட்டுக் கொடுத்திட்டு வர்றேன்''

போய் விட்டாள்.

'பிரவீணா ஏன் இப்படி நடந்துக் கொள்கிறாள்? நான் அவளுக்கு எதில் குறை வைத்தேன்? என்னிடம் கூட அன்யோன்யமாய் பழக மாட்டேன்கிறாளே' தாடையை தடவியபடி சோபாவில் அமர்ந்துக் கொண்டான் நந்தகுமார்.

பிரவீணா தன் கோபம், இயலாமை அத்தனையும் கைக்குள் கொண்டு வந்து தலையணை மீது ஓங்கி குத்தினாள்.

'என்ன செய்யப் போகிறேன்? இந்த சனியனை எப்படி வெளியேற்றப் போகிறேன்?' யோசித்து யோசித்து தலை கனத்தது.

பிரவீணா யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் சென்றது தோழி வீட்டிற்கல்ல. அவளுக்கு இந்த சென்னையில் யாரையும் தெரியாது. ஒரு லேடி டாக்டரைதான் தேடிச் சென்றாள்.

'கருவை கலைக்க வேண்டும்' என்ற கோரிக்கையை முன் வைத்த போது டாக்டரம்மா அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

''இல்லீகல் காண்டாக்ட்ல உருவான கருவா?'' என்றாள் பட்டென்று.

''வாட்? நான் கல்யாணமானவ டாக்டர்''

''அப்ப ஏம்மா... குழந்தை வேண்டாம் கலைச்சிடுன்னு தனியா வந்திருக்கே? நீ போட்டுகிட்டிருக்கிறது பொய்த் தாலியா கூட இருக்கலாமில்லே? ஐயம் சாரிம்மா. உன்னை மாதிரி பாவம் பண்ணிட்டு வர்றவங்களுக்கு, இந்த மாதிரி பாவகாரியமெல்லாம் நான் பண்றதில்லே''

''டாக்டர்... ப்ளீஸ் ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மீ. நான் அந்த மாதிரி பெண்ணல்ல. நான் யாருன்னு தெரியாம பேசாதீங்க. கோயம்புத்தூர்லேயே நம்பர் ஒன் இண்டஸ்ட்ரியலிஸ்ட் மிஸ்டர் வேணுகோபாலோட ஒரே பொண்ணு நான்''

''ஓ... ஐ ஸீ... எனிவே... உங்க ஹஸ்பன்டையாவது அழைச்சிட்டு வந்திருக்கலாமே''

''எந்த முகத்தை வச்சிக்கிட்டு வருவார்? அஞ்சு வருஷத்துக்கு குழந்தையே வேணாம். நாம என்ஜாய் பண்ண முடியாது. முதல்ல வயிற்றை சுத்தம் பண்ணிட்டு வான்னு அனுப்பி வச்சதே அவர்தானே? பொண்ணா பிறந்தாச்சு. புருஷன் பேச்சை கேக்காம இருக்க முடியுமா? ப்ளீஸ் டாக்டர்... இதை எப்படியாவது நீங்கதான்...'' கண்களை சிமிட்டி கஷ்டப்பட்டு கண்ணீரை தேக்கி வைத்துக் கொண்டாள்.

டாக்டர் நம்பி விட்டார்.

''உங்க ஹஸ்பன்டை அழைச்சிட்டு வாங்களேன். நான் பேசிப் பார்க்கறேன்''

''ஹி இஸ் அடமண்ட்! சொன்னா சொன்னதுதான். பேசிப் பயனில்லை''

வேறு வழியின்றி அவளை பரிசோதித்த டாக்டரம்மா உதட்டை பிதுக்கினாள்.

''டு லேட் மிஸஸ் பிரவீணா. பேபி நல்லா ஸ்ட்ராங்காய்டுச்சி. ரிமூவ் பண்ண முடியாது. அப்படியே பண்ணினாலும் உன் உயிருக்கு உத்தரவாதம் இடையாது. இதை அப்படியே உன் ஹஸ்பன்ட்கிட்டே போய் சொல்லு. 'பெண்கள்னா செக்ஸ்க்காக படைக்கப்பட்ட எந்திரமா நினைக்கிற உன் புருஷன் மாதிரியான ஆண்கள் எப்ப திருந்துவாங்களோ, அப்பதான் நாங்களும் இந்த மாதிரி பாவக்காரியமெல்லாம் செய்யாம தப்பிக்க முடியும்'' என்றாள் டாக்டர்.

ஊசி குத்தப்பட்ட பலூன் போல், நம்பிக்கையிழந்து தொய்ந்து போய் விட்டாள் பிரவீணா. அந்த எரிச்சலோடுதான் வீடு வந்து சேர்ந்தாள்.

மாமியார் கொண்டு வந்து தந்த ஜூஸையும் பருகாமல் அப்படியே வைத்துவிட்டு விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்.

போன் அலறியது.

கீழே பேரலல் லைன் இருக்கிறது. அங்கு யாராவது எடுக்கட்டும் என்று இவள் தொடவே இல்லை. யாரும் எடுக்கவில்லை.

நந்தகுமார் சற்று முன்தான் வெளியே கிளம்பினான் என்பதை அவன் கார் உறுமல் சப்தம் மூலம் அறிந்திருந்தாள்.

'இந்த மாமியார் கிழவியாவது எடுக்கலாமல்லவா? செத்தாப் போய் விட்டாள்? ச்சே...' அலறிக் கொண்டிருந்த ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றாள்.

எதிர்முனையில் அமைதி.



''ஹல்லோ'' என்றாள் மறுபடி கோபத்துடன்.

''நல்லார்க்கியா ப்ரவீணா?'' தாபத்தோடு கேட்டது குரல்.

பிரவீணாவின் உடலும் உயிரும் சிலிர்த்தது.

''சதீஷ்?''

''பரவாயில்லே... ஞாபகம் வச்சிருக்கே''

''என்னடா பேசறே? உன்னை நான் மறப்பேனா? எங்கே... எங்கேர்ந்து பேசறே?''

''ஈரோடுலிருந்து. உன் போன் நம்பர் கிடைக்க நான் ரொம்ப சிரமப்பட்டேன் ப்ரவீண். என்னால உன்னை பார்க்காம இருக்க முடியல. மறக்க முடியல. பைத்தியமே பிடிக்கற மாதிரி இருக்கு. நீ சந்தோஷமா இருக்கியா?''

''நீயில்லாத இந்த வாழ்க்கையில நான் எப்படி சதீஷ் சந்தோஷமா இருக்க முடியும்? என்னாலயும் உன்னை மறக்க முடியல சதீஷ். ஆனது ஆச்சு... கொன்னா கொன்னுட்டு போறாங்கன்னு... நாம கொஞ்ச நாளாவது சந்தோஷமா வாழ்ந்திட்டு செத்துப் போயிருக்கலாம்னு தோணுதுடா''

''எனக்கும் அப்படித்தான் தோணுது டார்லிங்''

''இந்த வாழ்க்கை நரகம் சதீஷ்'' விசும்பினாள்.

''இப்பவும் ஒன்னும் குடிமுழுகிப் போய்டலை. நீ என்கூட வரத்தயாரா இருக்கியா சொல்லு... இந்த ஊரை விட்டே ஓடிப் போய்டலாம்''

''சதீஷ்... ஆர் யூ ஷ்யூர்?'' என்றாள் நம்பாமல்.

''உன் சதீஷ் மேல உனக்கு நம்பிக்கையில்லையா?''

''நான் உன்னோட கிளம்பி வர்றதிலே எனக்கொன்னும் பிரச்சினையில்லே. என் கழுத்திலே தாலி கட்டினவன் மட்டும் யோக்கியமானவனா என்ன? எதிர்த்த வீட்லேயே பவித்ராங்கற விதவையோட லிங்க் வச்சிட்டிருக்கான். அதனால உன்கூட வர்றதிலே எனக்கெந்த உறுத்தலும் இல்லே... பட்''

''என்னடா?''

''நான் இப்ப கர்ப்பமாயிருக்கேன் சதீஷ்''

''அப்படியா?'' என்று அதிர்ந்தான் சதீஷ். பிறகு, ''அதை ரிமூவ் பண்ணிடலாம். டோண்ட் வொர்ரி'' என்றான்.

''அதுக்கும் சான்ஸ் இல்லே'' என்ற பிரவீணா டாக்டர் சொன்னதை சொன்னாள்.

''ஐ... ஸீ! இப்ப என்ன பண்ணலாம். எனக்கு நீ மட்டும்தான் வேணும். அந்த நந்தகுமாரோட குழந்தைய ஏத்துக்கற அளவுக்கு எனக்கு பெரிய மனசில்லே ப்ரவீண்''

''எனக்கே இந்த குழந்தைய ஏத்துக்க முடியாதப்ப உன்னால எப்படி முடியும்? இப்படி பண்ணுவோமா? நாம கொஞ்சம் வெய்ட் பண்ணுவோம். இந்த குழந்தை பிறக்கட்டும். பிறந்ததும்.... உன்னைத்தேடி ஓடி வந்திடறேன்''

''ஹூம்... எப்படியோ... நீ எனக்கு கிடைச்சா சரி. அதுக்காக எத்தனை நாள் வேணும்னாலும் காத்திருப்பேன் ப்ரவீண்''

''தாங்க்யூ சதீஷ்! தென், இனிமே இந்த நம்பருக்கு போன் பண்ணாதே. என்னோட புது செல்போன் நம்பர் தர்றேன். அதுல கூப்பிடு'' என்று நம்பரைத் தந்தாள்.

அலுவலகம் கிளம்பிய தங்கையின் முன் வந்து நின்றான் முரளி.

மதுரம் அவளை தன் வீட்டிற்கே வராதே என்று சொன்ன பிறகு பவித்ரா அன்றிலிருந்து செல்வதில்லை. தனக்கென்று ஒரு வேலையும் தேடிக் கொண்டாள். நந்தகுமார் ஆச்சர்யமாய் அவளிடம் வந்தான்.

''என்ன திடுதிப்புன்னு வேலைக்கு போக ஆரம்பிச்சிட்டே? நம்ம ப்ரைட்ஃப்யூச்சர் என்னாகறது?''

''ஆலமரமா நீங்க இருக்கறப்ப... நானில்லாம எந்த வேலையும் பாதிக்க போவதில்லை. சில நன்மைகளுக்காக நான் இந்த முடிவை எடுக்க வேண்டியதா போச்சு. தப்பா நினைச்சுக்காதே நந்தா''

''உன்னால பழசை மறக்க முடியலையா பவி? என்னை அந்தளவிற்கா நேசிச்சே?'' நினைக்கும்போதே சாரல் அடித்தது அவனுக்கு.

பவித்ரா துணுக்குற்றாள்.

'கடவுளே... இவன் என்னை தவறாக புரிந்துக் கொண்டிருக்கிறானே. உண்மையான காரணத்தையும் என்னால் சொல்ல முடியவில்லை. பரவாயில்லை, எதையாவது நினைத்துக் கொள்ளட்டும்' என்று விட்டு விட்டாள்.

அன்றிலிருந்து எந்த நிகழ்ச்சியிலும் அவள் கலந்து கொள்வதில்லை. முரளி தங்கையிடம் இது பற்றி எந்த கேள்வியும் கேட்கவில்லை.

''கிளம்பிட்டியா பவி?''

''ஆமாண்ணா''

''ஒரு நிமிஷம். இதுல சில போட்டோஸ் இருக்கு... பார்த்து... உனக்கு பிடிச்சிருந்தா...'' தயக்கமாய் வார்த்தைகளை இழுத்த

அண்ணனை பரிதாபமாய் பார்த்தாள்.

தலையில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் நரைக்க ஆரம்பித்து விட்டது. இளமை கரைய ஆரம்பித்து விட்டது.

'எல்லாம் என்னால்தானே?'

பவித்ரா சிரித்தபடி போட்டோக்கள் அடங்கிய கவரை பிரித்து பார்க்காமலேயே திருப்பி அண்ணனிடம் கொடுத்தாள்.

''உன் விருப்பப்படியே செய் அண்ணா! ஒரே ஒரு விண்ணப்பம். மனைவியை இழந்து, குழந்தையோட அல்லாடற ஆளாயிருந்தால் பார். அப்பத்தான் காயம் பட்ட மனசை பரஸ்பரம் புரிஞ்சுக்க முடியும்'' என்றாள்.

தங்கை அந்தமட்டுமாவது சம்மதித்தாளே என்கிற சந்தோஷத்தோடு அவள் கன்னத்தை தட்டிக் கொடுத்தான்.

''அப்படியே உன் கல்யாணத்தையும் வச்சிடணும்''

''முதல்ல உனக்கு! அப்புறம் சொல்ல மறந்துட்டேனே, நந்தா போன் பண்ணியிருந்தான். பிரவீணாவுக்கு இன்னைக்கு அதிகாலையிலே பெண் குழந்தை பிறந்திருக்காம். நீ தூங்கிட்டிருந்தப்ப போன் வந்தது.''

''இஸிட்... எந்த ஹாஸ்பிடலாம்?'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''தெரியலே... எதிர்வீடுதானே? நந்தாவோட அம்மாகிட்டே போய் கேள்''

''இ... இல்லே... நான் நந்தாவோட செல்போனுக்கு காண்டாக்ட் பண்ணி தெரிஞ்சுக்கறேன். நேரே ஹாஸ்பிடல் போய் பார்த்திட்டு அப்படியே ஆபீஸ்க்கு போயிட றேன். வரட்டுமாண்ணா?'' என்று கிளம்பினாள்.

## 14

**த**லைகலைந்து, முகம் இருண்டு ஷேவ் செய்யப்படாத முகத்துடன் நிலம் நோக்கி அமர்ந்திருந்த நந்தகுமாரை பார்க்கவே... அழுகை குமுறிக் கொண்டு வந்தது பவித்ராவிற்கு.

குழந்தை பசியால் வீறிட்டழுதது. அந்த அழுகை சப்தம் கூட அவனை உசுப்பவில்லை. இதயம் இறுகிப் போய், இதற்கு மேல் அவமானமோ, துக்கமோ வந்து விடப்போவதில்லை என்கிற நிலையில் கல்லாய் சமைந்து விட்டான் நந்தகுமார்.

பவித்ரா பெருமூச்சு விட்டபடி குழந்தையை தூக்கிக் கொண்டு பால் கரைத்துக் கொடுப்பதற்காக கிச்சனை நோக்கி சென்றபோது... ஹால் மூலையில் மதுரத்தின் பெரிய போட்டோ மாட்டப்பட்டு மாலை ஊதுபத்தியுடன் மணம் கமழ சிரித்துக் கொண்டிருந்தார்.

பவித்ராவின் நெஞ்சு கதகதப்பில் அமைதியான குழந்தை 'நீ தான் என் தாயோ?' என்பதுப்போல் அவளையே பார்த்தது.

'எவ்வளவு அழகான குழந்தை? இதன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமே... சோறு தண்ணிக் கூட வேண்டாமே! இந்த அழகான சின்னஞ்சிறு சிசுவை விட்டுவிட்டு ஓடிப்போக எப்படி பிரவீணா மனசு வந்தது? அவ்வளவு கொடூரமானவளா நீ? ஒரு குழந்தைக்கு தாயான பிறகும்... பழைய காதல் முக்கியமாய் போய் விட்டதா? சே... என்ன மனுஷி நீ?'

குழந்தை பிறந்த அன்றிரவே, சதீஷை வரவழைத்து ஓடிப்போய்விட்டாள் பிரவீணா.

தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் கையில் ஒரு கடிதத்தை செருகி வைத்துவிட்டு போய்விட்டிருந்தாள்.

'எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. என் ஈடுபாடற்ற தாம்பத்தியத்தில் பிறந்த இந்த குழந்தையையும் பிடிக்கவில்லை. என் காதலனோடு புதுவாழ்க்கைத் தொடர... போகிறேன்! என்னைத் தேட வேண்டாம். குட்பை!

'இப்படிக்கு பிரவீணா சதீஷ்.'

என்றிருந்த கடிதத்தை படித்து நந்தகுமாருக்கு கண்கள் இருண்டு போய் விட்டது.

மருமகள்... என் பணக்கார மருமகள் என்று தலையில் தூக்கி வைத்து ஆடிய மதுரத்திற்கு இந்த செய்தி பேரிடியாக இருந்தது.

'ஐயோ... இப்படியொரு அவமானத்தை உண்டாக்கி போய் விட்டாளே சண்டாளி! என் மகன் இனி எப்படி தலைநிமிர்ந்து நடப்பான்' நெஞ்சில் கை வைத்தபடி வீட்டிற்கு சென்று படுத்தவன் தான்... எழுந்திருக்கவே இல்லை. அதிர்ச்சியில் உயிரை விட்டு விட்டாள்.

ஒரு பக்கம் உயிரற்ற தாய்.

இன்னொரு பக்கம் உயிரோடு தாயை பறி கொடுத்த குழந்தை!

நொந்து நூலாகிப் போனான்.

அதற்கு மேல் வீறாப்பாய் இருக்க பவித்ராவினால் முடியவில்லை. ஆபீஸிற்கு லீவு போட்டு விட்டு நந்தா வீட்டிற்கு சென்று குழந்தையைப் பார்த்துக் கொண்டாள். முரளியும் அடிக்கடி வந்து அவன் துக்கத்தை குறைத்தான்.

''**ந**ந்தா... கையை கழுவிட்டு வா... சாப்பிடலாம்!'' டைனிங் டேபிளில் சமைத்தவற்றை எடுத்து வைத்தபடி அழைத்தாள்.

''ப்ச்... வேண்டாம்!''

''நோ... நோ நந்தா... என்ன இது சின்ன பிள்ளையாட்டம்? எத்தனை நாள் சாப்பிடாம பட்டினி கிடப்பே?''

''உயிர் போகிற வரைக்கும்!''

''சில்லி.... நீ ரொம்ப மாறிப்போய்ட்டே நந்தா. நீ உயிரை விட்டா... இந்த குழந்தையோட கதி? இந்த சிசு என்ன பாவம் பண்ணுச்சு நந்தா?''

''எனக்கு... எனக்கு ரொம்ப அசிங்கமாயிருக்கு பவித்ரா! நான் எப்படி எல்லார் முன்னாலேயும் தலை நிமிர்ந்து நடப்பேன்? இப்படி பண்ணிட்டு போய்ட்டாளே''

''நீங்க ஒரு தப்பும் பண்ணாதப்ப... எதுக்காக கலங்கணும்? பிரவீணாவும், அவளை பெத்தவங்களும் தான் தலை குனியணும். நீங்களில்லே! ப்ளீஸ்... நந்தா... எனக்காக வந்து சாப்பிட்டு படுங்க. இந்த குட்டி உங்களை தூங்க விடாம அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிடுவா! நான் இவளை எங்க வீட்டுக்கு தூக்கிட்டு போறேன்!''

''பவித்ரா உன்னை நான் ரொம்ப கஷ்டப்படுத்தி இருக்கிறேன். ஆனா, அதையெல்லாம் மனசுல வச்சுக்காம எங்களுக்காக இவ்ளோ உதவி பண்றியே! உன் மனசு யாருக்கு வரும்?''

''பேசாம சாப்பிடுங்க!'' என்றவள் அவன் கையை இழுத்து சாப்பாட்டில் வைத்தாள்.

அவளின் தொடுகை அவனுள் ஒரு வித ரசாயன மாற்றத்தை விதைத்தது.

'**எ**ன்ன குறை வைத்தேன்? ஏனிப்படி செய்துவிட்டுப் போனாள்? என்னை கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லாதவள்... எதற்காக கழுத்தை நீட்டினாள்? அப்போதே அவள் காதலனுடன் ஓடிப்போக வேண்டியது தானே? நான் என்ன தப்பு செய்தேன்? எதற்காக இவ்வளவு பெரிய தண்டனை?'

'நீ தப்பே செய்யவில்லையா நந்தகுமார்? ஊரார் கண்களுக்கு மகாத்மாவாய் உன்னை காட்டிக் கொள்ள பிரியப்பட்டாய்! ஆனால் அதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கு? ஆயிரக்கணக்கான விதவைகளுக்கு மறுமணம் செய்து வைத்து பேர் சம்பாதித்தாய். ஆனால், நீ எந்த விதவைக்காவது வாழ்க்கை கொடுத்தாயா?

கைபடாத ரோஜாவுக்கு ஆசைப்பட்டாய்! அதுவும் பணக்கார பெண்ணுக்காக ஆசைப்பட்டாய். நீ நினைத்தது போல் பணக்கார பெண்தான் கிடைத்தாள் ஆனால் பிரவீணா புத்தம் புது மலரல்ல. சதீஷ் என்கிற வண்டு முகர்ந்த மலர்! மறுபடி அந்த வண்டை தேடி சென்று விட்ட மலர்! உண்மையை சொல்... உனக்கு பவித்ரா மீது விருப்பம் இல்லை? அவள் அபிஷேக்கை காதலிப்பது தெரியும் வரை அவளை நீ ஒருதலையாய்

### அதிக நாள் ஆனாலும் கெட்டுப்போகாத புத்தம்புது பழங்கள்!



**ஆ**ரஞ்சு, எலுமிச்சை வாடி வதங்கி காய்ந்து போகிறதா? கவலை வேண்டாம். பிரவுண் பேப்பரால் செய்யப்பட்ட பையில் போட்டு வையுங்கள். 15 நாட்கள் வரை புத்தம் புதிதாகவே இருக்கும்.

தக்காளி, ஆப்பிள், வாழைப்பழம் போன்றவற்றில் உள்ள எதிலின் கேஸ் பூக்களை வாடச் செய்து அழுகிப்போகச் செய்யும் தன்மை கொண்டவை. எனவே இந்தப் பழங்கள் அருகில் பூக்களை வைக்காதீர்கள். சற்று தள்ளியே வையுங்கள்.

காதலிக்கவில்லை? வாழ்க்கையிழந்து, சந்தோஷமிழந்து, உன்னிடம் காதலை யாசித்தபோது... அவள் புதுமலரல்ல என்ற ஒரே காரணத்திற்காக எந்த மறுத்தாயே... நீயா சமூக சேவகன்? அவள் மனசை புண்படுத்தியதற்கு தான் இப்போது அனுபவிக்கிறாய்!' அவன் மனசாட்சி அவனை இடித்துரைத்தது.

நந்தகுமார் தன்னை நினைத்து வெட்கினான். பவித்ரா... அவன் வீட்டிற்கு வருமுன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

''என்ன நந்தா... நைட்டு நல்லா தூங்கினியா? உன் பொண்ணு என்னை தூங்கவே விடலே தெரியுமா?''

''...''

''என்ன நந்தா அப்படி பார்க்கிறே?''

''பவித்ரா... நான் ஒன்னு கேட்பேன். தப்பா நினைச்சுக்க மாட்டியே!''

''நானா? என்ன புதுபுதுசா பேசறே? என்ன சொல்லு!''

''இந்த வீட்டை பார்த்தியா எப்படியாகி போச்சு?''

''.....''

''என்னை விடு! இந்த குழந்தையைப் பார்! அம்மா இருந்தும் இல்லாம அவஸ்தைபடறதை?''

''.....?''

''நாம கல்யாணம் பண்ணிக்கலாமா பவித்ரா?''

''....?!''

அவனிடமிருந்து இப்படியொரு வார்த்தையை எதிர்பார்க்காத பவித்ரா... சடாரென திரும்பி வெளியேறினாள்.

## 15

ஒரு வார காலமாய் பவித்ரா அவன் வீட்டிற்கு வரவேயில்லை. நந்தகுமார் குழம்பிப் போனான். பரிதவித்தான்.

'ஏன்... ஏன் வரவில்லை? எதற்கிந்த புறக்கணிப்பு? அவசரப்பட்டு எதையாவது உளறி விட்டேனோ? அப்படியே இருந்தாலும் அவளும் என்னை நேசித்தாளே! அவளைப் பொறுத்தவரை என் மனமாற்றம் சந்தோஷம் தரக்கூடிய விஷயமல்லவா?'

ஏன் வரவில்லை? என்று போனில் கேட்கக் கூட அச்சமாக இருந்தது. இந்த முரளியாவது வந்திருக்கலாம். அவனும் வரவில்லை. குழந்தையை வைத்துக் கொண்டு பெரிதும் சிரமப்பட்டான். பிறந்ததிலிருந்து பவித்ராதான் குழந்தையை பார்த்துக் கொண்டிருந்ததால்... கதகதப்பான தாயின் சுகம் கிட்டாமல் எந்நேரமும் அழுதுக் கொண்டிருந்தது. வாழ்க்கையே வெறுத்துப் போனது.

இரண்டு மாதமாய் கம்பெனி பக்கம் தலை வைத்து படுக்கவில்லை. அந்த மாதம் நடத்தவிருந்த நிகழ்ச்சியையும் மறுதேதி அறிவிக்காமல் ஒத்தி வைத்திருந்தான். இவை அத்தனையும் தொய்வின்றி நடக்க வேண்டுமானால் அந்த வீட்டிற்கு பவித்ரா மருமகளாய் வரவேண்டும்.

கிட்டத்தட்ட பத்துநாட்கள் கழித்து பவித்ரா அந்த வீட்டிற்கு வந்தாள்.

''வா... பவி! எங்கே என்னை ஒரேயடியா மறந்திட்டியோன்னு நினைச்சேன்!''

''சேச்சே... நான் யாரையும் மறக்க மாட்டேன் நந்தா!''

''அப்ப ஏன் பத்துநாளா வரவேயில்லே?''

''கல்யாண வேலையிலே கொஞ்சம் பிஸியா இருந்துட்டேன்!''

''கல்யாணவேலையா? யாருக்கு முரளிக்கா?''

''இல்லே... எனக்கு!''

''ப...வி!''

''இந்தா நந்தா... என்னோட மேரேஜ் இன்விடேஷன். அவசியம் கல்யாணத்துக்கு வந்திடணும்!''

''ப...வி!'' என்றான் அதிர்ச்சி மாறாமல்.

''கல்யாணத்தை சிம்பிளா கோவில்ல வச்சி தான் பண்றேன். முக்கியமான ரிலேட்டிவ்ஸ், ஃப்ரன்ட்ஸை மட்டும் தான் அழைச்சிருக்கோம். கண்டிப்பா வந்திடு நந்தா!''

''பவித்ரா... உன்னோட இந்த முடிவு எனக்கு அதிர்ச்சியாயிருக்கு. உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியலே!''

''புரியுது... நீ ஏன் இந்தளவு பதட்டப்படறேன்னு புரியுது. உன்னை கல்யாணம் பண்ணிக்க நினைச்சதும் நிஜம். உனக்கு அதிலே விருப்பமில்லேன்னு தெரிஞ்சதும் அப்பவே அந்த எண்ணத்தை கைவிட்டதும் நிஜம். நீ என்னை கல்யாணம் பண்ணிக்க நினைச்சப்ப... என் மனசு உன் பாதையை விட்டு ரொம்ப தூரம் விலகிப் போய்டுச்சு நந்தா! உனக்கு நல்ல தோழியா கடைசிவரைக்கும் என்னால இருக்க முடியும். பட், நிச்சயமா மனைவியா இருக்க முடியாது. ஏன்னா, நானும் மனுஷிதான் நந்தா! கன்னத்திலே அடிச்சா தாங்கிக்கலாம். இதயத்திலே அடிச்சா தாங்கிக்க முடியாது. காதல்லேயும் சரி, கல்யாணத்திலேயும் சரி... உதாசீனத்தினால கிடைக்கிற வலி இருக்கே... சாகறவரைக்கும் மறக்க முடியாது.

இப்ப நான் கல்யாணம் பண்ணிக்க போகிறவர் பெயர் சக்கரவர்த்தி. ஏற்கனவே அண்ணன் எனக்காக பார்த்து முடிவு பண்ணிய நபர். மனைவியை இழந்து இரண்டு குழந்தைகளோடு வசிக்கிறவர். அவர் தான் எனக்கு சரியான துணையாக இருக்க முடியும் என்கிற முடிவுக்கு வந்தேன். அவருடைய அனுமதியோடு தான் நான் வீட்டிற்கு வந்து உனக்கும் குழந்தைக்கும் உதவியாக இருந்தேன்.

நீ நல்லவன்... மிக மிக நல்லவன். ஆனால், சில விஷயங்களில் அவசரப்பட்டு உணர்ச்சி பூர்வமாக முடிவெடுப்பது தான் உன்னிடமுள்ள மைனஸ் பாய்ண்ட்! பிரவீணா வேறொருவனுடன் ஓடிப்போனவளா இருக்கலாம். ஆனால், அவள் எப்போதும் உனக்கு மனைவிதான். உன் குழந்தைக்கு தாய் தான். பின்னாளில் சட்டபூர்வமாக அவளிடமிருந்து விவாகரத்து பெற்றாலும் தாயிடமிருந்து குழந்தையை விலக்க எந்த சட்டத்திலும் இடமில்லை. பிரவீணா உயிருடன் இருக்கும் போதே... அவள் பெற்ற குழந்தைக்கு இன்னொரு தாயை தேடுவது எந்த விதத்தில் நியாயம்? அவசரப்படாதே நந்தா! இன்னைக்கு இப்படியெல்லாம் நடக்கும்னு நேத்து நாம எதிர்பார்த்தோமா? அதே போல நாளை என்ன வேணும்னாலும் நடக்கலாம். குழந்தையை நான் என் வீட்டிற்கு தூக்கி செல்லட்டுமா? நான் அவளை பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் பவித்ரா.

நந்தகுமார் சிறுபுன்னகையுடன் அவளைப் பார்த்து பெருமூச்சு விட்டான்.

''சுயநலக்காரர்களுக்கு சுற்றத்தார்கள் இருக்க மாட்டார்கள் என்பது என்னைப் பொறுத்தவரையில் நிஜமாகி விட்டது பார்த்தாயா பவித்ரா? நான் செய்த சமூக சேவையில் கூட, புகழையும் கவுரவத்தையும் ஆதாயமாக எதிர்பார்த்தேன். அந்த கவுரவம் எனக்கு செல்வாக்கு மிகுந்த வாழ்க்கையை பெற்றுத் தரும் என்று எதிர்பார்த்தேன். அத்தனையும் நடந்தது. ஆனால், எதிர்பார்க்காததும் நடந்து விட்டதே. நீ சொன்னது சத்தியமான வார்த்தைகள் பவித்ரா. உணர்ச்சிபூர்வமாக முடிவெடுத்து தான் இன்று தலை கவிழ்ந்திருக்கிறேன். இது என் வாழ்க்கை. இதனுடைய கஷ்ட நஷ்டங்களை நான் தான் அனுபவிக்க வேண்டும். குழந்தை என்னிடமே இருக்கட்டும். உன் திருமணத்திற்கு இந்த நந்தா கண்டிப்பாய் வருவான். ஓக்கே?'' என்றான் வேதனையை மறைத்து.

''தாங்க்ஸ் நந்தா... நான் வர்றேன்'' என்று புறப்பட்டுப் போய் விட்டாள் பவித்ரா.

தொய்ந்து போய் அமர்ந்து விட்டான் நந்தகுமார். தன் கவுரவம், கம்பீரம், இளமை அத்தனையும் தண்ணீராய் கரைந்தோடியதுப் போல்... உலர்ந்துப் போனான்!

குழந்தை பசியில் வீறிட்டழுதது.

அதையே சற்று நேரம் பார்த்தான்.

'அழு! உன்னை தாங்கிக் கொள்ள நானிருக்கிறேன் என்கிற தைரியத்தில் அழுகிறாய். ஆனால், என்னை தாங்கிக் கொள்ள யாருமில்லையே. நான் எப்படி அழுவது?' நந்தகுமாரின் உதடுகள் துடித்தன.

'ஜுவாரி சிமெண்ட்' என்று கண்ணில் தெரிகின்ற அத்தனை வீட்டின் முதுகிலும் விளம்பரம் எழுதியிருந்த மேட்டுப்பாளையம் தாண்டி ஊட்டி மெயின் ரோட்டில் விரைந்து சென்றுக் கொண்டிருந்தது பஸ்.

ஜன்னலோரம் அமர்ந்திருந்தாள் பர்தா அணிந்திருந்த பெண். காற்றில் ஏசியிருந்தது. உடலை துளை போட்டு நடுங்க வைத்தது அவளை!

''என்ன டார்லிங் குளிருதா?'' தோளில் போட்டிருந்த கையை இடுப்பில் படர விட்டு இறுக்கிய படி கேட்டான்.

''ம்...''

''இங்கேயே குளிர்தாங்கலே. ஊட்டிக்கு போய் சேர்ந்திட்டோம்னா எப்படி தாங்குவே? ஸோ... என்னோட உதவி உனக்கு ரொம்ப தேவைப்படும்னு சொல்லு!''

''ச்சீ... அசிங்கமா பேசக் கூடாது!''

''ரொம்ப வெட்கப்படற மாதிரியிருக்கு. கொஞ்சம் முகத்தை காட்டறது''

''ஐயோ... யாராவது பார்த்துடப் போறாங்க!''

''இருட்ட ஆரம்பிச்சிடுச்சு. ஓடற பஸ்சுக்குள்ளே யாருக்கும் தெரியாது. காட்டு பிரவீண்!''

''ஆனாலும் உனக்கு குருட்டு தைரியம் ஜாஸ்தி சதீஷ்!'' சிணுங்கிய படி முகத்திரையை மட்டும் விலக்கினாள்.

''தைரியம் இல்லாமலா, எவனோ ஒருத்தனோட மனைவியை, ஒரு குழந்தையோட தாயை இப்படி எனக்கே எனக்கென்று தூக்கிட்டு வருவேன்?''

''....''

''என்ன அமைதியாய்ட்டே? குழந்தை ஞாபகம் வந்திடுச்சா?''

''சேச்சே... அதெல்லாம் எதுவுமில்லே. இந்நேரம் எங்க அப்பா அம்மாவுக்கு நியூஸ் போயிருக்கும். நம்மளை தேட ஊரெங்கும் ஆட்களை அனுப்பி இருப்பார். நாம மாட்டிக்குவோமா சதீஷ்?'' பயத்தில் விழிகள் படபடத்தது.

''நம்மளை யாராலேயும் நெருங்க முடியாது. பொதுவா உங்கப்பா மாதிரியான ஆளுங்கள்லாம் என்ன பண்ணுவாங்க தெரியுமா? இப்படி ஓடிப்போறவங்க... எப்பவும் ரொம்ப தூரமான ஊரா பார்த்து... பாம்பே, டெல்லி இந்த மாதிரி ஊராப் பார்த்து ஓடிப்போவாங்கன்ற எண்ணத்துல, அதிமேதாவி சிந்தனையில அங்கே தான் தேடுவாங்க. நான் யாரு? சதீஷ்! கோயம்புத்தூருக்கு ரொம்ப பக்கத்திலேயே தான் உன்னை கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். கண்டு பிடிக்க சொல்லு பார்ப்போம்! போதாதுக்கு உனக்கு பர்தா, எனக்கு தாடி.... சுத்தமா அடையாளமே தெரியாம மாறிட்டோம்!''

''எப்படியோ மாட்டாம இருந்தா சரி!''

''என்னதான் சொல்லு.... இப்படி முழுக்க கவர் பண்ற மாதிரியான இந்த பர்தா எனக்கு பிடிக்கவேயில்லே!''

''ஏன்?'' புரியாமல் கேட்டாள்.

''அழகை மூடி வச்சு என்ன லாபம்?'' என்றான் கண்ணடித்து.

''ச்சீ...''

''என்ன ச்சீ? நீ எவ்வளவு வெட்கப்பட்டாலும் சரி, ஊட்டி குளிர்லே வெட வெடன்னு நடுங்கினாலும் சரி... ஊட்டியில நாம தங்கப்போற பத்து நாளும் நீ ரூமுக்குள்ளே வித்தவுட் டிரஸ்லதான் இருக்கப்போறே!''

''ஐயோ.... ப்ளீஸ்... சதீஷ்.... இப்படியெல்லாம் பேசாதே. எனக்கு வெட்கமாயிருக்கு!'' அவன் தோளில் முகம் புதைத்து சிணுங்கினாள்.

''பரவாயில்லே! கல்யாணமாகி ஒரு வருஷமானாலும் இன்னமும் வெட்கப்படறே! ஆமா இந்த தாலி சரடு எத்தனை பவுன்? ரொம்ப கனமாயிருக்கு!'' அதை தொட்டு கேட்டான்.

''நானே சொல்லணும்னு நினைச்சேன். உறுத்தலா இருக்கு. கழட்டிடட்டுமா சதீஷ்?''

''வேண்டாம்.... லாட்ஜ்ல தங்க இந்த லைசன்ஸ் இருக்கட்டும். தேவைங்கறப்ப... நம்ம செலவுக்கும் உதவும்!'' என்றான்.

## 16

ஆசைக்காதல் கை சேரும் இன்பத்தை விட வேறெதில் ஆனந்தம் கிடைத்து விடப் போகிறது? அப்படித்தான் சதீஷும், பிரவீணாவும் ஊட்டியின் பனிப்புகையைப் போல... உற்சாகமாய் மிதந்தார்கள்.

அவளுக்கு தான் செய்து விட்டு வந்தது எப்பேர்ப்பட்ட துரோகம், வேசித்தனம் என்று தெரியவில்லை. அதைப்பற்றிய எண்ணமே எழவிடாமல் அவளை எந்நேரமும் இன்பக் கடலில் மூழ்கடித்து கொண்டிருந்தான் சதீஷ்!

அரை குறை ஆடையில், உணர்வில் அவன் மார்பில் முகம் புதைத்திருந்தாள்.

''ஐ.. லவ் யூ சதீஷ்!''

''நானும்தான்!''

''நாம மறுபடி இப்படி சேருவோம்னே எனக்கு நம்பிக்கை இல்லை!''

''எனக்கிருந்தது!''

''எனக்காக ரொம்ப கஷ்டப்பட்டியா சதீஷ்? உன்னை நினைச்சா எனக்கு பிரமிப்பா இருக்குடா. எனக்கு கல்யாணமாகி, குழந்தை பிறந்தும் கூட எப்படி என் மேலே உள்ள காதல் கொஞ்சமும் குறையலே?''

''நான் ஒண்ணை நினைச்சா... அதை முடிக்காம ஓயவே மாட்டேன். என்னை விடு டார்லிங். நீ எடுத்த முடிவுதானே பெரிய புரட்சி?''

''எல்லாமே உனக்காக சதீஷ்! உன்னை விட இந்த உலகிலே வேற யாருமே எனக்கு முக்கியமில்லே! உனக்காக என்ன வேணும்னாலும் செய்வேன்!''

''நிஜமாவா? எனக்காக எதை வேணும்னாலும் செய்வியா ப்ரவீண்?'' அவன் உதட்டை சிகரெட்டால் வருடி தன் உதட்டில் வைத்து லைட்டரால் பற்ற வைத்தான்.

''என்ன அப்படி கேட்டுட்டே? என் மேல நம்பிக்கை இல்லையா? என்ன செய்யணும் சொல்லு, செய்யறேன்''

''உன்னால எனக்கு கொஞ்சம் வேலை ஆக வேண்டி இருக்கு. நேரம் வரும்போது சொல்றேன் என்ன?''

''சரி!''

''அப்புறம் ப்ரவீண்... நான் இப்ப ஒரு ஷாக் நியூஸ் சொல்லுவேன். கேட்டுட்டு பதறக்கூடாது!''

''என்ன சதீஷ்?''

### 450 கோடி...

டி.வி.யில் நிகழ்ச்சிகளை தொகுத்தளிப்பது மூலமே 450 கோடி ரூபாய்களை ஒரு வருடத்தில் சம்பாதிக்க முடியும் என நிரூபித்திருக்கிறார் அமெரிக்காவின் 'ஒபரே வின்பிரே!'

1999-ம் வருடத்தில் இவரின் வருமானம் தான் இந்த தொகை!

-பார்வ் பார்த்தசாரதி.



என்றாள் பதற்றமாக.

''பார்த்தியா... உடனே டென்ஷனாகறே?''

''இல்லே சொல்லு!''

''உன் பேரெண்ட்ஸை பத்தி என்ன நினைக்கறே?''

''அவங்களைப் பத்தி பேசாதே! வெறுப்பாயிருக்கு. உன்னை எங்கிட்டேர்ந்து பிரிச்சதே அவங்கதானே? என்னை அந்தாளுக்கு கல்யாணம் பண்ணி வச்சு.. புழுவா துடிக்க வச்சாங்களே.. அவங்களா என்னை பெத்தவங்க? நோ.. நாம சந்தோஷமா இருக்கிற இந்த இன்பமான நேரத்திலே எதுக்காக அவங்களைப் பத்தி பேசறே?'' என்றாள் லேசான கோபத்துடன் முகம் சுருக்கி.

''ஓக்கே.. ஓக்கே.. ரிலாக்ஸ் மை டார்லிங். பட்., இப்ப அந்த நியூஸை சொல்லாம என்னால இருக்க முடியாது ப்ரவீண்!''

''சொல்லு.. என்ன விஷயம்?''

''இந்த பேப்பரை பிரிச்சுப் பாரு!''

''பேப்பர் படிக்கிற நேரமா இது?'' என்று அவன் கொடுத்த பேப்பரை வாங்கியவள், ''என்ன இது? ஒரு வாரம் முந்தைய பேப்பரை தர்றே?'' என்றாள்.

''விஷயம் அதிலேதான் இருக்குது. நாலாம் பக்கம் பிரிச்சுப்பாரு!''

அவனை வியப்பாய் பார்த்தபடி நாலாம் பக்கம் பிரித்தவள்... கையிலிருந்து பேப்பர் நழுவியது.

ஸ்பஷ்டமாய் அதிர்ந்து போனாள்.

பேப்பரில் பிரசுரமாகியிருந்த செய்தி இதுதான்!

திருமணமான ஒரே மகள் கள்ளக் காதலனுடன் குழந்தையை தவிக்க விட்டு ஓட்டம்!

அவமானம் தாங்காத பிரபல தொழிலதிபர் வேணுகோபால், மனைவியுடன் தற்கொலை.

''ச...தீ...ஷ்..'' என்றாள் துடிக்கும் உதடுடன்.

''ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்'' என்று அணைத்து, ஆறுதல் படுத்தினான்.

''நிஜமா சதீஷ்? நிஜமாவே அம்மாவும்.. அப்பாவும்....''

''ப்ச்... உன் கண்லேர்ந்து தண்ணீர் வரக்கூடாதுன்னு தான்... ஒரு வாரமா இந்த விஷயத்தை மறைச்சேன். அழாதே ப்ரவீண்!''

''பாவம் சதீஷ்... அம்மா....'' கேவினாள்.

''நீ பாவப்பட்ற அளவுக்கு அவங்க ரெண்டு பேரும் புண்ணிய ஆத்மாக்கள் இல்லேம்மா! அடிச்சாலும், உதைச்சாலும் நீ அவங்க பெண்ணுதானே? கோடிக்கணக்கான சொத்துக்கு ஒரே வாரிசுதானே? ஆனா. உன்னை அவங்க நினைச்சிப் பார்க்கலே ப்ரவீண். உன்னை உயிரோட தலை முழுகிட்டு அத்தனை சொத்துக்களையும் அந்த நந்தகுமார் பேர்லேயும், அவனுக்கு பெத்து குடுத்திட்டு வந்தியே.. அந்த குழந்தை பேர்லேயும் எழுதி வச்சிட்டார். தான் பெத்த பொண்ணு முக்கியமில்லையாம்? எவனோப் பெத்த அந்த பயலுக்கும், அந்த பயலோட குழந்தைக்கும் எழுதி வச்சிட்டு... உன்னை பத்து பைசாவுக்கு பிரயோஜனமில்லாத குப்பையாக்கிட்டு போன அவங்களுக்காக நீ ஏம்மா கண்ணீர் விடணும்? உனக்கு நான் இருக்கேன்! நீ கவலைப்படாதே!'' அவள் கண்ணீரை தன் உதடால் ஒற்றியெடுத்தான்.

பிரவீணா கண்களை மூடி தன் வேதனைகளை கரைத்துக் கொண்டாள். உதடு மட்டும்

"தாங்க்ஸ் சதீஷ்" என்று முணுமுணுத்தது.

"இப்பத்தான் உங்கப்பா உயிரோட இல்லையே! இனி நாம ஏன் பதுங்கி வாழணும்? பெருந்துறையில எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவன்மூலமா ஒரு வேலைய தேடிக்கிட்டு அங்கேயே செட்டிலாய்டலாம். என்ன சொல்றே?"

"எனக்கென்று தனிப்பட்ட கருத்துக்கு இடமில்லை சதீஷ். நீ என்ன சொல்றியோ...அதுதான் என் விருப்பமும்!"

சதீஷ் சத்தமின்றி சிரித்துக் கொண்டான்.

பெருந்துறைக்கு வந்து ஆறுமாதம் ஓடிவிட்டது. சதீஷின் நண்பன் மோகன் கன்ஸ்ட்ரக்ஷன், கமிஷன், ஏஜன்சி, ரியல் எஸ்டேட் என்று நடத்தி எட்டு விரலில் மோதிரம் போட்டுக் கொண்டிருக்கும் பந்தா ஆசாமி. அவனுடைய பல வீடுகளில் ஒன்றை இவர்கள் தங்கிக் கொள்ள ஒதுக்கியதோடு இல்லாமல் அவ்வப்போது பண உதவியும் செய்து வந்தான்.

"சதீஷ்... சீக்கிரம் ஒருவேலைய தேடிக்க. எவ்வளவு நாளைக்கு நாம அவர் கையை எதிர்பார்த்துக்கிட்டிருக்க முடியும்?" என்றாள் பிரவீணா.

"ப்ச்... இந்த ஊர்ல எனக்கு தோதான வேலை எதுவும் இல்லே ப்ரவீண்! சம்பளத்துக்கு வேலை செய்ய எனக்கு இஷ்டமில்லே. சொந்தமா பிஸினஸ் பண்ணணும்?"

"அதுக்கு பணம் வேணுமே! எங்கிட்டே இருந்த அத்தனை நகையும் செலவுக்காக வித்தாச்சு. பிஸினஸ்க்கு என்ன பண்ணப் போறே?" கவலையுடன் கேட்டாள்.

"மனமிருந்தால் மார்க்கம் உண்டு! எனக்கு ஒரு ஐடியா இருக்கு. இன்னைக்கு ஈவ்னிங் இது விஷயமா பேச மோகனும் சில ஃப்ரண்ட்சும் இங்கே வரப்போறாங்க. அவங்கள்லாம் வரும்போது... நீ கொஞ்சம் நல்லா டிரஸ் பண்ணிக்க! இந்த ஊருக்கு வந்தபிறகு நீ கொஞ்சம் கறுத்துப் போய்ட்டே!"

"உன் கூட பழகறேனே... உன் நிறம் எனக்கு ஒட்டிக்கிடுச்சி!" என்றாள் குறும்பாக.

அது சற்று ஒதுக்குப்புறமான வீடு! சுற்றிலும் எந்த வீடும் இன்றி தனித்திருந்தது.

மாலை! மோகனுடன் சேர்த்து நான்கு பேர் வந்திருந்தனர்.

அறையில் நுரை பொங்கும் பாட்டில்களும், கறியும் சிப்ஸுமாய் சிரிப்பு சத்தம் அலை மோதியது.

"ப்ரவீண்... இங்கே வாடா!"

வந்தாள்.

"நான் சொன்னேனில்லையா புதுசா பிஸினஸ் ஆரம்பிக்கப் போறேன்னு. அதை இன்னைக்கே இப்பவே ஆரம்பிக்கப் போகிறேன். இவங்கள்லாம் பணம் கூட கொடுத்திட்டாங்க. நீ இவங்களுக்கு கம்பெனி குடு ப்ரவீண். ஆல் த பெஸ்ட் மை டியர் ஃப்ரண்ட்ஸ்! நான் வெளியே இருக்கிறேன்" என்று கேஷுவலாக சொல்லிவிட்டு நகர...

பிரவீணா அவன் சொன்னதன் அர்த்தத்தை தாமதமாக உணர்ந்து அலறினாள்.

"சதீஷ்... என்ன பேசறே நீ?"

"ப்ச்... சும்மா அலறாதே. இதெல்லாம் உனக்கெ[illegible]சா? இல்லே பத்தினியா? நான் கூப்பிட்டதும் கட்டினவனையே நிமிஷத்திலே தூக்கியெறிஞ்சிட்டு வந்தியே.. அது பேர் காதலா? இல்லேம்மா.. காமம்! உடம்பு முழுக்க உள்ள திமிர். ஏதோ உன்னை கட்டிக்கிட்டா.. கோடிக்கணக்கான சொத்துக்கு மாப்பிள்ளையாகலாம்னு பார்த்தா... பரதேசி மாதிரி அம்போன்னு ஆக்கிட்டுப் போய்ட்டான் உங்கப்பன். தொட்டு தாலி கட்டினவனுக்கே.. சோறு போட திணறுகிற இந்த காலத்துல எவனோ ஒருத்தனோட பொண்டாட்டிய வச்சு எவ்வளவு நாளைக்கு காப்பாத்த முடியும்? அதான்..... இந்த பிஸினஸ்ல இறங்கிட்டேன். பணம் போடாத பிஸினஸ். உன் உடம்பு தான் இங்கே மூலதனம். போ... போய் கம்பெனி குடு ப்ரவீண்!"

"டேய்.. ராஸ்கல்.. யாரை பார்த்து என்ன பேசறேன்னு புரிஞ்சுதான் பேசறியா?" உடல் பதற அவன் சட்டையை கொத்தாய் பற்றிக் கொண்டாள்.

"ஏய்... கையை எடுடி! சும்மா பத்தினி வேஷம் போடாதே! உன்னைப் பத்தி இன்னும் என்னடி புரிஞ்சுக்கணும்!"

"அடப்பாவி... எல்லாம் உனக்காக... உன் மேல வச்சிருந்த காதலாலதானே அப்படி நடந்தேன்?"

"இப்பவும் எனக்காக இதைப்பண்ணு!"

"சதீஷ்.. இப்படியெல்லாம் பேச உனக்கு எப்படி மனசு வருது?" அழுதாள்.

"அடடா... பாரு... பவுடரெல்லாம் கலைஞ்சு போய்டுது.. அழாதே ப்ரவீண்! மோகன் உன் பைக் சாவிய கொடேன். ஒரு ரவுண்டு போய்ட்டு வந்திடறேன்! டேக் இட்!" என்று அவளை அவர்களிடம் தள்ளி விட்டு, மோகன் தூக்கி எறிந்த பைக் சாவியை கேட்ச் பிடித்து.. விசிலடித்தபடி வெளியே சென்றான்.

அறைக்கதவு உள்தாழிட்ட ஒருவன் பிரவீணாவை தள்ளிக் கொண்டு வந்தான்.

"ஐயோ... என்னை விட்டுடுங்க... ப்ளீஸ்... உங்களை கையெடுத்துக் கும்பிடறேன்!"

அவள் கதறலும், கெஞ்சலும் போதையில் மிதந்த அந்த காமுகர்களின் காதுகளுக்கு எட்டினால் தானே?

அவள் வாயைப் பொத்தினான் ஒருவன். தடுத்த கைகளை கட்டிப் போட்டான் மற்றொருவன்.

நான்கு பருந்துகளும் ஒன்று சேர்ந்து பிரவீணாவை... கொத்தி, குதறி சிதைத்து சின்னாபின்னப்படுத்தின.

உற்சாகமாக... ஏதோ ஒரு இந்திப் பாடலை முணுமுணுத்தபடி பைக்கில் வேகமாக சென்ற சதீஷின் முதுகு சட்டை எதிர்காற்றில் பம்மென்று புடைத்துக் கொண்டது.

பாக்கெட்டிலிருந்த கட்டான பணமும், போதையும் அவன் கண்களையும், கவனத்தையும் கற்பனையுலகில் சஞ்சரிக்கவைக்க... எதிரே வந்த டேங்கர் லாரியை கவனிக்கவில்லை.

கண நேரத்தில்... அவனை குப்பை காகிதமாய் அந்தரத்தில் வீசியெறிய.. பூமியில் விழுந்து சிதறி... துடித்து அடங்கிப் போனான் சதீஷ்! அவனை சுற்றிலும் ரத்தத்தால் ஒற்றியெடுக்கப்பட்ட ரூபாய் நோட்டுகள் சிதறி கிடந்தன.

## 17

நந்தகுமாரின் பொறுப்புகள் மேலும் கூடியிருந்தன. மாமனாரின் அளவுக்கதிகமான சொத்துக்கள் அவன் கைக்கு வந்த பிறகு தான் புரிந்தது... பணத்தால் நிம்மதியையோ, சந்தோஷத்தையோ விலைக்கு வாங்க முடியாதென்று. இதை முக்கியமாக நினைத்து தானே... அன்பான உள்ளத்தை காயப்படுத்தினான்.

நந்தா அந்த பணத்தின் ஒரு பகுதியை வேணுகோபால் பெயரில் ட்ரஸ்ட் ஒன்றை உருவாக்கி, சமூகத்தில் நலிந்த அத்தனை பேருக்கும், வயது வித்தியாசமின்றி உதவி செய்தான். ப்ரைட் ஃப்யூச்சரை முன்னிலும் சிரத்தையோடு நடத்தி வந்தான்.

குழந்தையை தானே கவனித்து வந்தான். இறந்து போன மாமியாரின் நினைவாக வசந்தி என்று குழந்தைக்கு பெயர் சூட்டியிருந்தான். வீட்டிலிருக்கும் நேரங்களில் வசந்தியை அவன் தரையில் கூட விடமாட்டான். குளிப்பாட்டுவது, உணவு ஊட்டுவது எல்லாமே அவன் தான் செய்வான். அலுவலகம் கிளம்பும் போது காரிலேயே அழைத்துச் சென்று கிரீச்சில் விட்டு விட்டு செல்வான். வீடு திரும்பும் போது அழைத்து வருவான்.

முரளிக்கும் பிரியாவுக்கும் திருமணமாகி விட்டது. பவித்ராவும், சக்கரவர்த்தியும் இரண்டு குழந்தைகளோடு சந்தோஷமாய் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தனர். நல்லவர்களுக்கு வாழ்க்கை நல்ல விதமாகவே அமையும்.

'அவளா... அந்தப் பெண்ணா பிரவீணா?'

கால் போன போக்கில் நடந்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்தால் நம்பவே கடினமாக இருந்தது. அவள் தான் என்று எண்ணும்போது ஜீரணிக்க சிரமமாக இருந்தது.

பசியோ, தூக்கமோ... எதுவுமே அவளுக்கு ஒரு பொருட்டே இல்லாமல் உணர்வுகள் மரத்துப் போய்விட்டிருந்தன.

தலைமுடி... எண்ணெய் கண்டு பல வாரங்களாகி விட்டிருக்க... உடையிலும், உடலிலும் அழுக்கேறி... பார்க்கவே அருவருப்பு ஏற்படுத்தும்படி இருந்தாள்.

நடந்தாள்... நடந்தாள்... நடந்துக் கொண்டே இருந்தாள். கோடீஸ்வர வீட்டின் ஒரே மகள்... இன்று அவள் செய்த துரோகத்தால், பாவத்தால் சிந்த ஆளின்றி சீரழிந்துக் கொண்டிருக்கிறாள்.

கால் வலிப்பது போல் உணர்ந்தால்... எங்காவது அமர்ந்து விடுவாள். அலையில் அடித்துக் கொண்டு வருவதுப்போல்... நடந்து முடிந்த அத்தனையும் நினைவில் கரைபுரண்டு வர... மற்றவர்கள் பார்க்கிறார்களே... என்கிற கூச்சமின்றி அழ ஆரம்பித்து விடுவாள்.

வானில் விழுந்த கோடுகளை... கண்களையே பறித்து விடும் மின்னலை... வானவில்லென தவறாய் இனம் கண்டு... இன்று அவள் வாழ்க்கையை பறித்து போட்டுவிட்டு போய் விட்டதே... பாழாய் போன மின்னல்!

நந்தகுமார்!

'அருமையான கணவன். அவன் எனக்கு

என்ன குறை வைத்தான்? அவனுக்கு எப்பேர்ப்பட்ட துரோகத்தை இழைத்து விட்டு வந்திருக்கிறேன்? நான் நாயை விட, பன்றியை விட கேவலமான ஜென்மம் அல்லவா? ஐயோ... எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டேனே.

எந்த தாயாவது பெற்ற குழந்தையை அம்போன்னு போட்டுவிட்டு அயோக்கியன் பின்னால் ஓடுவாளா? நான் ஓடி வந்தேனே! என் குழந்தை முகத்தைக் கூட சரியாய் பார்க்கவில்லையே! என்ன தாய் நான்?' நினைக்கும் போதே... மனம் கனத்து... நெஞ்சில் தாய் பாசம் சுரந்தது.

குழந்தை அழும் குரல் கேட்டது.

பிரவீணா திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அதோ... அந்த எதிர்வீட்டு தூளியில் ஆடிக் கொண்டிருந்த குழந்தைதான் அழுகிறது.

'பாவம்... பசியில் அழுகிறது போலும்! வீட்டில் யாருமில்லையா? ரொம்ப நேரமாக அழுகிறதே! குழந்தையை கவனிக்காமல் எங்கே போய் விட்டனர்?' நேரம் கூட கூட குழந்தையின் அழுகை அதிகரிக்க அதற்கு மேல் அமர்ந்திருக்க ப்ரவீணாவினால் முடியவில்லை.

ஓடிச் சென்று அந்த குழந்தையை தூக்கி அணைத்து முகமெங்கும் முத்தமழை பொழிகிறாள்.

அடுத்த கணம்... குழந்தை பறிக்கப்பட்டு அவள் தள்ளி விடப்படுகிறாள்.

''யாராவது... ஓடிவாங்களேன்... பிள்ளைய திருடிட்டு போக வந்திருக்கா... வாங்களேன்!' பாத்ரூமிலிருந்து குளித்து விட்டு ஈரம் சொட்ட... ஒரு புடவையை சுற்றிக் கொண்டு வந்திருந்த இளம் பெண்ணொருத்தி... கத்திய கத்தலில் அக்கம் பக்கத்தினர் கூடி விட்டனர்.

''ஐயோ... நான் திருட வரலேம்மா... குழந்தை... அழுதது...!''


''உன்னைப் பார்த்தாலே எப்பேர்ப்பட்டவன்னு தெரியுதே... இனி இந்தப் பக்கம் தலைவச்சு படுப்பியா?'' என்று கேட்டபடி அவளை அடிக்க ஆரம்பித்தனர்.

அவர்களை தடுக்கவும் அவள் உடலில் தெம்பில்லை.

போனால் போகட்டும் என்று அவளை விட்ட போது... மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

அவமானத்தின் உச்சமான நிகழ்ச்சியல்லவா? இனி இந்த உயிர் உடலோடு இணைந்திருக்கத்தான் வேண்டுமா?

'நோ... கூடாது! இனி நான் உயிரோடு இருக்கவே கூடாது. கடைசியாய் ஒரே ஒரு முறை என் குழந்தையை நான் பெற்ற



குழந்தையை பார்த்து விட்டு... சாக வேண்டியது தான்!' முடிவு செய்தவள் இருட்டுத்தனமாக ரெயிலில் பயணம் செய்து... சென்னைக்கு வந்து சேர்ந்தாள் பிரவீணா!

இரவு பதினோரு மணி!

அடர்ந்த அசோகா மரங்கள் தாலாட்ட

நந்தகுமாரின் பங்களா அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது.

தயங்கி தயங்கி உள்ளே நுழைந்த பிரவீணா ஒரு முடிவுடன் காலிங் பெல் சுவிட்சை அழுத்தினாள்.

''யாரது... இந்த நேரத்திலே?'' எரிச்சலுடன் உறக்கம் கலைந்து எழுந்தான். சப்தத்தில் வசந்தியும் விழித்துக் கொண்டாள்.

நந்தகுமார் கொட்டாவி விட்டபடி கதவைத் திறந்தான்.

''யாரும்மா நீ? என்ன வேணும்?'' என்றான்.

''குழந்தை... குழந்தைய பார்க்கணும்!''

''என்னது குழந்தையா? என்ன உளர்றே... யார் நீ?'' விளக்கின் வெளிச்சத்தில் கூட அவளை கண்டு பிடிக்க முடியவில்லை.

''என் குழந்தையை பார்க்க வந்திருக்கேன். ப்ளீஸ் ஒரே ஒரு முறை காட்டுங்க!''

சுரீர் என உறைக்க... அவளை உற்றுப் பார்த்த நந்தகுமார் அதிர்ச்சியின் எல்லைக்கே போனான்.

'பிரவீணாவா? இவளா?' அவனால் நம்பமுடியவில்லை. எனினும் அவள் தான் என்றுணர்ந்ததும் கோபம் தலைக்கு ஏறியது.

''வெளியே... போ!''

''நான் குழந்தையப் பார்க்கணும்!''

''ஐ ஸே... கெட் அவுட்!''

''குழந்தைய பார்க்காம நான் போகமாட்டேன். ஒரே ஒரு முறை பார்த்துட்டுப் போய்டறேன். வழிய விடுங்க.'' கெஞ்சினாள்.

''என் குழந்தைய பார்க்க நீ யார்? போடி வெளியே!''

''உங்க கோபம் நியாயமானது. நான் செஞ்ச துரோகத்துக்கு என்னைக் கொன்னு போடவும் உங்களுக்கு உரிமை இருக்கு! நான் பட்டு திருந்தி வந்திருக்கேன். ஆனா, எதிலேயும் பங்கு கேட்டு வரலே. குழந்தைய ஆசை தீர ஒரு முறை பார்த்திட்டு போய்டறேன். திரும்ப நான் வரமாட்டேன்... ப்ளீஸ்!''

''உன்னோட அசிங்கமான பார்வை என் குழந்தை மேல பட அனுமதிக்க மாட்டேன். போய்டு!''

உள்ளே வசந்தி அழ ஆரம்பித்தாள்.

''குழந்தை... குழந்தை அழறா...'' என்றபடி உள்ளே செல்ல முயன்றவளை... பிடித்து வெளியே தள்ளி கதவை தாழிட்டான்.

செய்வதறியாது திகைத்த பிரவீணா... சற்று நேரம் யோசித்தவள் எதிரே பவித்ரா வீட்டிற்கு ஓடினாள்.

நல்லவேளை... அன்றைக்குப் பார்த்து அண்ணனை பார்க்க வீட்டிற்கு வந்திருந்த பவித்ரா... அங்கேயே தங்கி விட்டாள்.

பிரவீணாவை அந்த கோலத்தில் பார்த்து அதிர்ந்துப் போனாள்.

''வா... பவித்ரா... ஒரே ஒரு முறை என் குழந்தைய காட்ட சொல்லு... பார்த்திட்டு போய்டறேன். நீ சொன்னா... அவர் கேட்பார்... வந்து சொல்லு பவித்ரா!'' கெஞ்சலாய் கையை பிடித்து இழுத்தவளை மனம் உருக பார்த்தாள்.

''வா... போகலாம்!'' என்று அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டு நடந்தாள் பவித்ரா.

காலிங் பெல் அலறும் சப்தம் கேட்டு புரிந்துப் போயிற்று நந்தகுமாருக்கு. 'மீண்டும் அவள்தான் வந்திருக்கிறாள். சே... இவளோட தொல்லை தாங்க முடியலையே! எந்த முகத்தோடு மறுபடி இங்கே வந்திருக்கிறாள்? இவளால் மூன்று உயிர் மரித்துப் போனதே! மறுபடி யார் உயிரை பறிக்க வந்திருக்கிறாள்? இம்முறை தெருமுனை வரை கழுத்தை பிடித்து தள்ளிவிட்டு வந்தால் தான் அவள் திமிர் அடங்கும்.' முடிவுக்கு வந்தவன் கதவை படாரென திறந்தான்.

வெளியே பிரவீணாவுடன் பவித்ராவும் நின்றிருப்பாள் என்று எதிர்பார்க்காதவன்... அவளை சங்கடமாய் பார்த்தான்.

''என்ன பவி இந்த நேரத்திலே?''

''எதுவுமே தெரியாதமாதிரி கேட்காதே நந்தா! எதுக்காக பிரவீணாவை விரட்டியடிச்சிங்க?''

''பின்னே அவ பண்ணிட்டு போன காரியத்துக்கு சிலை வைச்சு வணங்க சொல்றியா?''

''நந்தா... சாதாரண மனுஷங்களை மாதிரி பேசாதே! நீ யாரு? ஸர் மெச்சற சோஷியல் வொர்க்கர். மறப்பதும், மன்னிக்கறதும் தெய்வகுணம். அது ஏன் உங்கிட்டே இல்லாம போச்சு? எத்தனையோ அனாதைகளுக்கும் அபலை பெண்களுக்கும் ஒரு தாயா முன்னிருந்து வழிகாட்டறே! அந்த கருணையிலே கொஞ்சமாவது இவள் மேல காட்ட கூடாதா?''

''எப்படி வரும் கருணை? என்னை தலை குனிய வச்சிட்டு போனாளே... நான் எப்படி?''

''ப்ளீஸ் நந்தா... கெட்டதை மறக்கணும் நல்லதை நினைக்கணும். இல்லேன்னா நிம்மதி கிடைக்காது. பிரவீணாவைப் பார்! அவ இருக்கிற கோலத்தை பார்த்துமா... உன் மனசு இறங்கலே?''

''.....''

''அவளை உன் மனைவியா பார்க்காதே! உன் குழந்தையோட தாயா பார்! கெட்டு நொந்து வந்திருக்கிற இந்த பெண்ணை உன் செய்கையால் மேலும் துன்புறுத்தாதே!''

''.....''

''இன்னைக்கு உன் அமைப்பு மூலம் ஆயிரக்கணக்கான பேர் புது வாழ்க்கை கிடைக்கப் பெற்று... வயிறார சாப்பிட்டு வாழ்த்தறாங்களே... அந்த பணத்துக்கு சொந்தக்காரி... பிச்சைக்காரியா இருக்கணுமா நந்தா? இவள் முகத்தை பார்! சாப்பிட்டு எத்தனை நாளாச்சுன்னு இவளோட கண்கள் சொல்லும்!''

''.....''

''என் தப்பை உணர்ந்திட்டேன்! நான் உயிரோட இருந்து இனிமேலும் உங்களை துன்புறுத்த மாட்டேன். என் குழந்தைய பார்த்துட்டு... நான் போயிடுவேன். ப்ளீஸ்... ஒரே ஒரு முறை!'' கையெடுத்துக் கும்பிட்டு கேட்டாள் பிரவீணா.

நந்தகுமாரின் மனசு கொஞ்சம் அசைந்தது.

''பவித்ரா... உனக்காகத்தான் சம்மதிக்கிறேன். குழந்தைய பார்த்திட்டு ரெண்டே நிமிஷத்திலே வந்திடணும்'' என்றான்.

இரண்டு பெண்களின் மனசும் குளிர்ந்தது.

அடுத்த கணமே உள்நோக்கி தாவி ஓடினாள் பிரவீணா. குழந்தையை தூக்கி ஆசை தீர முத்தமிட்டவள் கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள்.

''உன்னை தூக்கியெறிஞ்சிட்டு போனேனடி கண்ணே! இன்னைக்கு என்னை எல்லாருமே தூக்கியெறிஞ்சிட்டாங்களே!''

''ம்...ம்... கொஞ்சினது போதும்... போக சொல்லு பவித்ரா!''

பிரவீணா பெருமூச்சுடன் குழந்தையை கட்டிலில் படுக்க வைத்தவள்... சட்டென்று இடுப்பில் மறைத்து வைத்திருந்த பூச்சி மருந்தை வாயில் சரித்துக் கொண்டாள்.

''ஐயோ... என்ன காரியம் பண்ணிட்டே பிரவீணா?'' அலறியபடி அவளிடம் ஓடி வந்தாள் பவித்ரா. நந்தாவும் பதறிதான் போனான்.

''இனிமே நான் உயிரோடிருந்து என்ன புண்ணியம் பவித்ரா? நான் எங்கம்மாப்பா கிட்டேயே போய் சேர்ந்திடறேன்!''

''என்ன நந்தா பார்த்துக்கிட்டு நிக்கறே? இவளை தூக்கு ஹாஸ்பிடலுக்கு கொண்டு போகலாம்'' அவள் துரிதப்படுத்தவும்... தன்னிச்சையாய் அவளை தூக்கி கொண்டு காருக்குப் போனான்.

பிரவீணா அதற்குள் மயக்கத்திற்கு போயிருந்தாள்.

நல்லவேளை!

உயிர் பிழைத்து விட்டாள். இன்னும் கான்ஷியஸ் திரும்பவில்லை.

''நந்தா!''

''என்ன பவி?''

''பிரவீணா தேறி எழுந்ததும் எங்கே அனுப்பப்போறே?''

''.....''

''உன்கிட்டே என் கேள்விக்கு பதில் இல்லே! அப்படித்தானே? நீ நிஜமான சமூக சேவகனா இருந்தா, பிரவீணாவை மறுபடி ஏத்துக்கிட்டு அவளுக்கு மறுவாழ்க்கைத் தரணும். இதுதான் நீ அவளோட அப்பா அம்மாவுக்கு செய்யற சாந்தியாயிருக்கும்!''

''.....''

''செஞ்சதெல்லாம் தவறுன்னு உன்னைத்தேடி வந்தவளை உதாசீனப் படுத்தாதே! உன் குழந்தைக்கு ஒரு தாய் மிக முக்கியம். அந்தத் தாய் அவளை பெத்தவளா இருப்பது அதை விட முக்கியம். ப்ளீஸ் நந்தா... பிரவீணாவை கை விட்றாதே!'' கெஞ்சினாள் பவித்ரா.

வெகு நேர யோசனைக்குப் பிறகே நந்தகுமார் பிரவீணாவின் கட்டிலருகே சென்றான்.

நிலவிலும் களங்கம் வருவதுண்டு. ஆனால், அது தன்னை தூய்மைப்படுத்திக் கொண்டு மறுபடி பிரகாசிப்பதில்லையா? அதே போல் ... சேற்றில் புரண்டு எழுந்து வந்திருந்த பிரவீணாவின் முகமும் இப்போது தெளிவாய் இருந்தது. அவளை சூழ்ந்திருந்த கருமேகங்கள் காணாமல் போயிருந்தது. நந்தகுமார் மெல்ல அவள் தலையில் கையை வைத்து வருடிக் கொடுத்தான்.

தன் மனைவி விழிப்பதற்காக காத்திருந்தான்.

அதைப் பார்த்த பவித்ராவுக்கு நிம்மதியாய் மூச்சு வந்தது!

★★ (முற்றும்) ★★